# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி ௬ — பிரஜோற்பத்தி ஹு தை—மாசிமீ — பகுதி க, உ

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து ... | 1 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை .... | " |
| செங்குந்தர் கல்விநிதி .... | 3 |
| கொடிக்கவி ... | 5 |
| கொடி யுயர்த்து தலைவர் சரித்திரமும் சொற்பொழிவும் ... | 6 |
| கனம் மந்திரி யவர்கட்கு வரவேற்பு நல்லுரை ... | 8 |
| கனம் மந்திரி யவர்களது திறப்புரை ... | 9 |
| சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சரித்திரமும் சொற்பொழிவும் | 10 |
| சமூக மகாநாட்டுத் தலைவர் ஜீவிய சரித்திரம் ... | 12 |
| சமூக மகாநாட்டுத் தலைவர்க்கு வரவேற்பு நல்லுரை ... | 13 |
| சமூக மகாநாட்டுத் தலைவர் பேருரை ... | 14 |
| வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சரித்திரம் .... | 24 |
| " " சொற்பெருக்கு .... | 25 |
| வாலிபர் மகாநாட்டுத் தலைவர் சரித்திரம் .... | 28 |
| வாலிபர் மகாநாட்டுத் தலைவர்க்கு வரவேற்பு நல்லுரை ... | 29 |
| வாலிபர் மகாநாட்டுத் தலைவர் சொற்பெருக்கு ... | 30 |
| மூன்றாவது மகாநாட்டுத் தீர்மானங்கள் ... | 34 |
| தலைச்சங்கத்தின் மூன்றாவது அறிக்கைப் பத்திரம் ... | 37 |
| இரண்டாவது மகாநாட்டு வரவு செலவுக் கணக்கு ... | 41 |
| தலைச்சங்கத்தின் நான்காவது பொதுக்கூட்டம் ... | 45 |

5 - JUN 193

காரியாலயம்:—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# புதுவை மந்திரி பட்டம் புனைந்தார்



திரு. ஆ. வே. முத்தைய முதலியார்
அவர்கள், B.A.B.L.,
Chevalier De La Legion D' Honneur
புதுவை அரசாங்க மந்திரி

சமூக மகாநாடுகளுக்குள்ளேயே ஒப்பற்றதாக நடந்தேறிய நம்மவர் முதல் மகாநாட்டுக்குத் தலைமை பூண்டவரும், நமது தலைச்சங்கத்தின் தலைவராக இரு முறை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தற்போதும் அப் பதவியினை வகித்து வருபவரும், நமது கல்வி நிதியின் காப்பாளர் சபைக்கு ஆயுட்காலத் தலைவரும், தமது பரந்த அறிவானும், சிறந்த ஆற்றலானும், சீரிய குணத்தானும், நேரிய செயல்களானும், ஒழுங்கான தூய வாழ்க்கையானும், ஆழ்ந்த குலாபிமானத்தானும் நம் குலத்திடைத் தோன்றிய மகாத்மாவாக நம்மவரால் பாராட்டப்படுபவருமாகிய இப்பெரியாரை யறியாத செங்குந்தரே யிராரென்பது திண்ணம். இவர் தற்போது புதுவை அரசாங்கத்தின் மந்திரியா (Secretariate General) யமர்ந்து, தமது நிருவாகத் திறமையால் அவ்வரசாங்கத்தின் குடிகளனைவரது உள்ளங்களையும் பேதமின்றி ஒருங்கே கொள்ளைகொண்டு வருகிறார் என்பதும் நாம் அறிந்ததே. இவரது திறமையினை நோக்கி பிரான்சிலுள்ள இவரது தலைமை அரசாங்கத்தார் இவருக்கு ஷேவாலியர் டி லா லீஜியன் டி ஹானர் (Chevalier De La Legion D' Honneur) என்னும் பெரும்பட்டத்தை அளித்துள்ளார்கள். இது, நமது பிரிடிஷ் அரசாங்கத்திலுள்ள 'நைட்' (Knight) பட்டத்துக்குச் சமானமானதாகும். பிரென்சுக் குடியரசில் வழங்கப்படும் பட்டம் இஃதொன்றேயாகும். ஆகவே, இது சாதாரண மக்கட்கன்றி, மிகவும் திறமை சான்றோர்க்கும், மிகப் பெருஞ் செயல்களாற்றியோர்க்குமே அளிக்கப்படுவதாகும்.

செங்குந்த குலமணிகட்குள்ளே நடுநாயகமென மிளிரும் இப் பேரறிஞர், தமது பிரயாசை சிறிதுமின்றி ஒரு குடியரசினால் உயர்ந்ததொரு பட்டஞ் சூட்டப்பட்டது கேட்டு செங்குந்த உலகம் உள்ளம் பூரித்திடுமென்பதில் ஐயமென்னே?

இப்பெரியாருக்கும் இவரது குடும்பத்தார்க்கும் நங்குலத்தின் நன்றியும் வாழ்த்தும் மகிழ்ச்சியும் உரியவையாகுக!

வாழ்க பேரறிஞன்! வாழ்க நங்குலமணி!
வாழ்க முத்தையன்! வாழ்க நீடூழியே!!


# செங்குந்தமித்திரன்

339

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—சு] பிரஜோற்பத்தி௵ தை—மாசி௴ [பகுதி—க, உ


அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபத மளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. (திருவாசகம்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மூன்றாவது மகாநாடு

பல்வேறு ஜில்லாக்களிலுமுள்ள நமது குலப்பிரமுகர்கள் சகோதர வாஞ்சையோடு ஒருங்கு சேர்ந்து ஒருவரை யொருவர் அறிவதற்கும் ஒருவரோடொருவர் அளவளாவுவதற்கும் மட்டுமன்றி, நங்குல மக்களிடையே குலாபிமானமும் ஐக்கிய உணர்ச்சியும் ஓங்கி வளருவதற்கும், குல முன்னேற்றத்தினை நாம் அளவிடுவதற்கும், அதன் சீர்திருத்தத்துக்கேற்ற முறைகளை ஆராய்வதற்கும், அப்பெரும் பணியில் நங்குலச் சிலர்களைத் தூண்டுவதற்கும் நமது மகாநாடுகள் தக்க சந்தர்ப்ப மளிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அத்தகைய மகாநாடுகளை எவ்வளவு அடிக்கடி கூட்டி, எவ்வளவு சீராக நடத்துகின்றோமோ அவ்வளவு துரிதமாக நமது குலமும் முன்னேற்றப் பாதையில் நடந்திடுமென்பதில் ஐயமில்லை. ஆகவே, பிரமுகர்களது பொருட் செலவையும் சௌகரியங்களையும் கவனித்து, கூடிய அளவு அடிக்கடியே நமது மகாநாட்டினை நடத்த முயன்று வருகிறோம். முதல் மகாநாட்டுக்கும் இரண்டாவதுக்கும் இடையே சுமார் இரண்டு வருட காலம் கடந்ததாயினும், இரண்டாவது கூடிய சில மாதங்களுக்குள்ளேயே மூன்றாவது மகாநாடு கூடும்படி திருவருள் வாய்த்தது நமது அதிர்ஷ்டவசமேயாகும். அவ்வளவு நெருக்கத்திலேயே கூடியும் அது வெகு திருப்திகரமாகவே நடைபெற்றது. அது மிகவும் வெற்றிகரமாக முடிவதற்கேற்ற ஏற்பாடுகள் மிகச் சொற்ப காலத்தில் நிகழ்ந்ததானது அதற்காக உழைத்த தலைச்சங்கத்தாரது ஆர்வத்தினையும் திறமையினையுமே காட்டுகின்றது.

தள்ளமுடியாத அசந்தர்ப்பங்கள் பலவற்றினால் அப்பெருவைபவத்தினைக் கண்டு களிக்கும் பாக்கியத்தை இழந்து வருந்தும் நங்குலத்தவர் பலருக்கும் அது எத்துணைத் திருப்திகரமாக நடைபெற்றதென்பதை அறிவித்தற்கு அதனைத் தொடக்க முதல் முடிவுவரை விளக்கிக் கூறுவது அவசியமாகும். டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் மூன்றாவது மகாநாட்டினைச் சென்னையம்பதியில் தலைச்சங்கத்தார் கூட்டவேண்டுமெனவும், அதற்கு இதர ஜில்லாவாசிகளெல்லாம் இயன்ற அளவு பொருளுதவி புரிதல் வேண்டுமெனவும் காஞ்சியில் இரண்டாவது மகாநாட்டிலேயே தலைவர்கள் முடிவுகட்டியதை அன்பர்கள் அறிவார்கள். அவ்வேற்பாட்டினை நிறைவேற்றும் பொருட்டுத் தலைச்சங்கத்தினைச் சேர்ந்த தலைவர்களும், அவர்கட்குதவியாக ஏனைய குலாபிமானிகளும் வெகு தீவிரமாக உழைக்கலாயினர். மகாநாட்டு நிருவாக சபையின் அபிப்பிராயப்படி சமூக மகாநாடு வாலிபர் மகாநாடு ஆகியவற்றிற்கு வரவேற்புத் தலைவர்களும் பொதுக் காரியதரிசியும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அன்றாடு வேண்டுகோட் கிணங்கி நங்

குலச் சீலர்களான திருவாளர் S. K. M. முருகைய முதலியா ரவர்களும், திருவாளர் K. N. சுப்பிரமணிய முதலியாரவர்களும், திருவாளர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியாரவர்களும் முறையே கொடியேற்று விழா ஆற்றுதற்கும், சமூக மகாநாட்டுக்குத் தலைமை வகித்தற்கும், வாலிபர் மகாநாட்டுக்குத் தலைமை பூணுதற்கும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தனர். மகாநாட்டைத் திறந்துவைத்தற்கும் கனம் மந்திரி P. T. ராஜன் அவர்கள் இசைந்தனர்.

ஏனைய ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துவந்தன. மகாநாடு கூடுவதற்கான இடமும் திவ்விய திருப்பதியாய திருமயிலையம்பதியிலுள்ள சுந்தரேசுவரர் சபா மண்டப மெனத் தீர்மானிக்கப்பட்டு, வேண்டியபடி தயாரிக்கப்பட்டது. இரண்டு நாட்கள் முன்னதாகவே பல பிரதிநிதிகள் வந்து குழுமினர். தலைவர்களும் முன்னதாகவே வந்து தங்கினர். டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி காலை தலைவர்கள், பெருவாரியான கூட்டம் புடைசூழத் தாங்கள் தங்கியிருந்த இடத்தினின்றும் புறப்பட்டு நங்குலத்தினர்க்குரியதான வெள்ளீசுவரர் ஆலயத்தை யடைந்தனர். அங்கு அவர்கள் 'பட்டுக்கட்டுதல்', மாலைசூட்டப்பெறுதல் முதலிய மரியாதைகள் செய்யப்பட்டனர். உடனே தலைவர்களெல்லாம் மோடாரில் ஏறி ஊர்வலம் புறப்பட்டனர். ஊர்வலக் காட்சி மிக உன்னதமானதாகவே யிருந்தது. முன்னணியில், சோழஅவையிற் றலைமைபூண்டு சீர்கொண்டவரும், ஒரு காலம் சோழநாட்டினை ஒழுங்குபெற ஆண்டவரும், புவியரசரும் கவியரசரும் ஒருங்கே புகழ்ந்தேத்திப் பணியும் கவிச்சக்ரவர்த்தியாய் மிளிர்ந்தவரும், தெய்விகத்தன்மை வாய்ந்தவரும், நங்குலத்தினுக்கொரு பேரொளியை வழங்கியவரும், அதற்கொரு திலகமாய்த் திகழ்பவருமான ஒட்டக்கூத்தப் பெருமானது திருவுருவப் படம் வெகு ஆடம்பரத்துடன் அலங்கரிக்கப்பட்டு வெண்சாமரை முதலிய விருதுகள் சூழச் சுமந்து செல்லப்பட்டது. தொடர்ந்தாற்போல் தலைவர்க ளமர்ந்திருந்த மோடார்கள் நகர்ந்தன. பெருந்திரளான ஜனங்கள் உற்சாகத்துடன் ஆரவாரித்தனர். வாத்திய முழக்கமும் ஜேகோஷமும் காதுக் கினிமை யளித்து உற்சாகத்தைக் கிளப்பின. சுருங்கக் கூறின், அவ்வைபவம் நமது குலத்தினர் தொன்றுதொட்டு வகித்துவந்த உன்னத நிலையினை ஞாபக மூட்டுவதா யிருந்தது.

ஊர்வலம் நம்மவர் வதியும் வீதிகள் வழியே சென்றது. இடையிலே கனம் மந்திரியவர்களும் அதிற் கலந்துகொண்டார். முடிவில் அது சுந்தரேசுவரர் சபாமண்டபத்தை யடைந்தது. அம்மண்டபமும் தோரணங்கள் முதலிய அலங்காரங்களால் மிக்க பொலிவுடன் விளங்கியது. அங்கே ஒரு பெருங்கூட்டம் தலைவர்கள் வரவை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தது. ஓங்கி நின்ற கம்பத்தி னுச்சியில் 'எப்பொழுது என்னை ஏற்றுவீர்கள்? நான் ஓங்கிப் பறக்கவேண்டும்,' என்று பதட்ட முறுவதுபோல் குலக் கொடி அசைந்து கொண்டிருந்தது. தலைவர்க ளெல்லாம் கொடிமரத்தி னருகுற்றதும் அனைவரும் அணிவகுத்தாற்போல ஒழுங்காக நின்றனர். தலைவர்களெல்லாம் உற்சாகமும் குலாபிமானமும் ததும்பும் இனிய வதனங்களுடன் முன்னணியில் நின்றனர். உடனே கொடிக்கவி வெகு இனிமையாய்ப் பாடப்பெற்றது. அதன்பின்னர், கொடியுயர்த்து தலைவர் திருவாளர் S. K. M. முருகைய முதலியா ரவர்கள் தமது அரிய சொற்பொழிவை நிகழ்த்தி, வானைப் பிளக்கும் ஜேகோஷத்தி னிடையே, நங்குலக் கொடியானது நமது உயர்வினுக் கறிகுறியாக என்றும் ஓங்கிப் பறந்திடவேண்டு மென்னும் பிரார்த்தனையுடன் அதனை யுயர்த்தினர். சேவலொரு சாரும், வேங்கை மற்றொரு சாரும், குந்தம் நடுவணும் தீட்டப்பட்டுத் திகழ்ந்த அக் கொடியும், நங்குலத்தின் பெரும்புகழைப் பல திக்குக்களிலும் பரப்புவது போன்று அசைந்தாடியது. பின்ன ரனைவரும் கொட்டகையினுட் சென்று அமர்ந்தனர்.

சுமார் 1500 பேர் அடங்கக்கூடிய அக் கொட்டகை நிரம்பி யிருந்தது. பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டிருந்த இடத்தில் பெண்களும் பலர் ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர். மகாநாட்டுத் தலைவர்களோடு கனம் மந்திரி பி. டி. ராஜன் அவர்கள், மாஜி சென்னை மந்திரி திருவாளர் S. முத்தையா முதலியா ரவர்கள், திருவாளர் P. V. நடராஜ முதலியா ரவர்கள், திருவாளர் தி. நா. சபாபதி முதலியா ரவர்கள், திருவாளர் ம. த. சாமிநாத முதலியா ரவர்கள், ஸ்ரீமதி அலர்மேலுமங்கைத் தாயா ரம்மா ளவர்கள் முதலிய பல பெரியோர்கள் வீற்றிருந்த காட்சி மிகவும் கண்ணியமாக இருந்தது. பிரதிநிதிகளும் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் வந்து குழுமியிருந்தனர்.

பின்னர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியா ரவர்கள் கனம் மந்திரியவர்கட்கு நங்குலத்தினர் சார்பாகத் தலைச்சங்கத்தார் வழங்கிய வரவேற்பு நல்லுரையை வாசித்தளித்தார். கனம் மந்திரி யவர்களும் எழுந்து, நங்குலத்தின்பால் தமக்குள்ள அபிமானத்தையும், நம்மவர் முன்னேறுவதில் அவர் காட்டும் ஊக்கத்தையும் விளக்கி, மகாநாட்டினைத் திறந்து வைத்து, அது வெற்றிகரமாக நடைபெறவேண்டு மென்றுங் கூறி யமர்ந்தார்.

உடனே சமூக மகாநாடு ஆரம்பமாயிற்று. வரவேற்புத் தலைவரான திருவாளர் சு. குழந்தைவேல் முதலியா ரவர்கள் தமது சொற் பெருக்கினை யாற்றித் தலைவர்களையும் ஏனையோரையும் கனிவுடன் வரவேற்றார். பின்னர் தலைவ ரவர்கட்கு வரவேற்புப் பத்திரம் வழங்கப் பெற்றது. அது முடிந்தவுடன் நங்குலத்தின் முன்னேற்றத்துக்கு வேண்டிய அரிய உபதேசங்கள் அனைத்தும் ஒருங்கே நிறைந்திருந்தான தலைவரது நீண்ட பேருரை நிகழ்ந்தது. அதிலடங்கியிருந்த பல விஷயங்களை இடையிடையே தலைவர் பின்னும் விரிவாக விளக்கிச் சென்றார். அதனுடன் சமூக மகாநாடு முடிவடைந்தது.

பின்னர் வாலிபர் மகாநாடு தொடங்கிற்று. அதன் வரவேற்புத் தலைவர் திருவாளர் வீ. இரத்தின முதலியா ரவர்கள் தமது சொற்பொழிவை நிகழ்த்தி,



அனைவருக்கும் உபசாரங் கூறியபின் வாலிபர் மகாநாட்டுத் தலைவர் அவர்கட்கு வரவேற்பு நல்லுரை வழங்கப்பெற்றது. அதன் பிறகு, திருவாளர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியா ரவர்கள், வாலிபர்களது மனத்தில் வீரம், குலாபிமான முதலிய அரிய உணர்ச்சிகளை எழுப்ப வல்ல அரிய உபதேசங்கள் பொலிந்த தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். அதோடு வாலிப மகாநாடும் முடிவுற்றது. அனைவரும் ஜேகோஷத்தோடு பகற்போஜனத்திற்காகக் கலைந்தனர்.

மறுபடியும் சுமார் 2 மணிக்கு அனைவரும் கொட்டகையில் வந்து கூடினர். தலைச்சங்கத்தின் நான்காவது பொதுக்கூட்டம் நிறைவேறிய வுடனே மகாநாடு மீளவும் தொடங்கியது. அதுபோது சமூக சீர்திருத்தத்துக்கான பல அரிய தீர்மானங்கள் கொண்டுவரப் பெற்றன. முக்கியமான தீர்மானங்களை விளக்கிப் பல தலைவர்கள் நிகழ்த்திய உபந்யாசங்கள் குழுமியிருந்த பிரமுகர்களிடை உற்சாகத்தையும் குதூகலத்தையும் கிளப்பின. இம் மகாநாட்டில் ஏகமானதாக நிறைவேறிய தீர்மானங்கள் சில, முன்னேற்ற உணர்ச்சியும் சீர்திருத்த நோக்கமும் நங்குலத்தினரிடைச் சென்ற மகாநாட்டுச் சமயமிருந்ததைவிட அதிகப்பட்டிருப்பதையே உணர்த்துகின்றன. தீர்மானங்க ளெல்லாம் நிறைவேறிய பிறகு, முதலில் சமூக மகாநாட்டுத் தலைவரும் பின்பு வாலிபர் மகாநாட்டுத் தலைவரும் தமது முடிவுரைகளில், நங்குலம் பண்டைய வொளியொடு மிளிருதற்கான வழிகளை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கினர். பின்பு, பல அசந்தர்ப்பங்களால் மகாநாட்டினுக்கு வரவியலாது வருந்திய தலைவர்கள் பலர் தாங்கள் வரவியலாமையைக் குறித்தும், மகாநாடு வெற்றிகரமாக முடிய வேண்டுமெனத் தாங்கள் கொண்டிருந்த கோரிக்கையைக் குறித்தும் அனுப்பிய தந்திகளும் கடிதங்களும் வாசிக்கப்பெற்றன. தலைவர்கள், பிரதிநிதிகள் அனைவருக்கும் திருவாளர் வீ. இரத்தின முதலியாரவர்கள் மகாநாட்டு நிர்வாக சபையின் சார்பாக மனமார்ந்த வந்தனம் செலுத்திய பின்பு மகாநாடு குதூகலத்தோடும் ஆரவாரத்தோடும் இனிது கலைவுற்றது. தலைவர்கள் வாத்திய கோஷத்துடன் மாடவீதி வலமாகத் தாங்கள் தங்கியிருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நமது முதல் மூன்று மகாநாடுகளும் நாம் எதிர்பார்த்ததினும் மேலான சீருடனும் வெற்றியுடனுமே முடிந்துள்ளன. நான்காவது மகாநாட்டினைக் கூடிய சீக்கிரம் நமது குலக் கிளர்ச்சிக்குப் பிறப்பிடமாயுள்ள தஞ்சை ஜில்லாவில் கூட்டவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுவும் அதற்குப் பின் நடைபெறுபவையும் திருப்திகரமாக முடிந்த, நங்குல முன்னேற்றமாம் பயனைப் பெரிதும் நல்குமாறு நங்குலச் சோதரனும் குந்தப் பெருமானை இறைஞ்சுகின்றோம்

---

# செங்குந்தர் கல்வி நிதி

" கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை "

பல சிறு துளி! ஒரு பெரு வெள்ளம் !!

பல்வேறு சமூகங்களும் முன்னேற்றத் துறையி லீடுபட்டு, மேலோங்கியெழப் பெரும்பாடு பட்டுவரும் இக்காலத்தில், ஏனைய சமூகங்களோடு சமமான நிலையில் நிற்றற்கும், உலகப் போட்டியிற் கலந்துகொண்டு மேன்மை யுறுதற்கும் நங்குலத்தினர் உலகப் போக்கை நன்குணர்ந்து, கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் திறமை பெறுவது இன்றியமையாததாகும். அவ்வாறு நம்மைத் தயார் செய்துகொள்வதற்கு மற்றெல்லாவற்றினும் சிறந்த சாதனம் கல்வியேயாகும். அதுவே நமது பண்டைப் புகழினை நமக்கு எடுத்துக் காட்ட வல்லது. அதுவே அந்நிலைக்கு நேர்முரணாக நாம் தற்போது அடைந்துள்ள தாழ் நிலையினைக் கண்ணாடி போல் நமக் கெடுத்துக் காட்டவல்லதுமாகும். அம்மட்டோ? நாம் அத்தகைய தாழ்வுக் கடலினைக் கடந்து மேன்மைக் கரையினை யடைதற்கேற்ற தெப்பமாய் உதவுவதும் அதுவே. சுருங்கக்கூறின், நமது சமூகத்தினரைப் பல துறைகளிலும் முன்னேற்றி மேம்படுத்த வல்லது கல்வியே யாகும். இத்தகைய ஆற்றல் அமைந்த கருவியா யிருத்தலினாலேயே அதனைக் "கருந்தன" மாகவும், வாழுமுயர்க்குக் கண்ணாகவும் சான்றோர் போற்றினர். அதனை யுணர்ந்தே நமது தலைச் சங்கத்தாரும், நமது குலச் சீர்திருத்தத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அதனை முதற்படியாகக் கொண்டு உழைத்து வருகிறார்கள்.

ஆனால், கல்விப் பொருளினை நமது மக்களிடைப் பரப்புவதற்குச் செல்வப் பொருள் பெரிதும் அவசியமாயுள்ளது. உலகத்திலேயே பேரறிஞராகத் திகழக்கூடிய பல பிள்ளைகள் வறுமையின் வாய்ப்பட்டு, அல்ல லுழன்று, பாறையில் விதைத்த செழுவிதை போன்று பெயர் தெரியாது அழுந்திக் கிடக்கின்றனர். அத்தகையோர் தளிர்த்துச் செழித்து, ஓங்கி

வளர்ந்து, அறிவு, ஆராய்ச்சி முதலிய நறுமண மலர்களையும் தீங்கனிகளையும் உலகினர்க்குத் தந்துதவுமாறு பொருளுதவி புரிதலினும் சிறந்த தானமுண்டா? தருமந்தானுண்டா? அன்னதானம் முதலிய தானங்கள் ஒருவரிருவருக்கு ஒரு சமயத்தில் திருப்தியும் நன்மையும் அளிக்கலாம். கல்வி தானமோ, உலகத்திலேயே பேரொளியைப் பரப்ப வல்லதொரு ஆற்றல் சான்ற அறிவுப் பிழம்பையும் உண்டாக்கினும் உண்டாக்கலாம்.

அதனாலேயே, ஏழ்மையால் வருந்தி வாடும் நங்குல மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்குவதற்காக நமது தலைச் சங்கத்தார் செங்குந்தர் கல்விநிதி யெனும் ஒரு நிதியை யேற்படுத்தி யுள்ளார்கள். அதன் உதவியைக் கொண்டு தற்போது சுமார் 50 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அதன் பயனாக நம்மவரிடைப் பட்டதாரிகளது தொகையும் வருஷா வருஷம் அதிகரித்து வருகிறது. மேலும் மேலும் அதிகமான மாணவர்க்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவிகள் செய்யவேண்டு மென்பது நமது தலைவர்களது நோக்கமாக உள்ளது. வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் மாணவர்க்கு உண்டி, உறையுள் முதலிய வசதிகளை யளிப்பதற்காகவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால், இந்நோக்கங்க ளெல்லாம் நிறைவேறுவதற்கு இந்நிதி பன்மடங்காகப் பெருக வேண்டும். அவ்வாறு பெருகுதற்கு அது நங்குலத்திலுள்ள வள்ளல்களையும், செல்வச் சீமான்களையும், புண்ணிய சீலர்களையுமே எதிர்பார்த்து நிற்கின்றது. சுபகாரியங்களில் நன்கொடை யளித்தல், சம்பாதனையில் ரூபாய்க்குத் தம்பிடி யளித்தல் முதலிய பல வழிகளில் அதனைப் பெருக்க வேண்டு மெனவும் நமது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. பல புண்ணிய சீலர்களும் அவ்வழிகளில் தாராளமாக நன்கொடைகள் வழங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆயினும் கல்விநிதி போதிய அளவு விருத்தியடைய நன்கொடைகள் இன்னு மதிகமாக வழங்கப்பட வேண்டும்.

ஆகவே, செல்வச் சீமான்களே! குலாபிமானிகளே!! உங்கள் சோதரர்கள் மேன்மையடைய வேண்டுமானால், நமது குலம் மேலோங்க வேண்டுமானால், நாமும் நமது முன்னோரைப் போன்று வீரர்களாய், அறிஞர்களாய், கைத்தொழில் நிபுணர்களாய், சீர்குலத் தோன்றல்களாய்த் திகழ வேண்டுமானால், இந்தப் பெரும் புண்ணியத்துக்குக் கைங்கரியம் செய்யுங்கள். இந்நிதி பெருகுவதற்காக இயன்ற உதவியைத் தாராளமாகப் புரியுங்கள். நீங்கள் ஒரு தம்பிடி வழங்கலாம். ஆனால் அதுவே நூறு மாணவர்க்கு உதவியா யிருக்கலாம். அதனால் அன்பர்களே, இக்காலத்தில் சத்திரம் சாவடி கட்டுதல் முதலிய எல்லாத் தருமங்களினும் இதுவே சிறந்ததென்பதை யுணர்ந்து, இதற்கு

*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!*
*அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்!"*

☞ கல்விநிதிக்கு நன்கொடை யனுப்புவோர்,

திரு. மா. பா. கந்தசாமி முதலியார், B. A., B. E.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி,
'காமாக்ஷி விலாசம்', போஸ்டல் காலனி, மாம்பலம்,
தேனாம்பேட்டை P. O., சென்னை. என்னும் விலாசத்துக்கு அனுப்பவும்.


## அறிவிப்பு

கல்விநிதியிலிருந்து உபகாரச் சம்பளம் பெறும் மாணவர் தங்கள் கல்லூரி அல்லது பாடசாலைத் தலைவரிடமிருந்து நற்சாக்ஷிப் பத்திரமும், தங்கள் பரீக்ஷை மார்க்கு முதலியவைகளும் அனுப்பிய பின்னரே தங்களுக்குச் சேரவேண்டிய தொகை அனுப்பப் பெறுவர் என முதன் முதலிலேயே அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரையும் பலர் அவற்றை அனுப்பாமலிருக்கின்றனர். அத்தகையோர் அவற்றை யனுப்பிய பின்னரே தொகை பெறக்கூடும் என்றும், அவற்றைக் கூடிய சீக்கிரம் அமைச்சருக்கு அனுப்பவேண்டு மென்றும் மீண்டும் அறிவிக்கிறோம். ஒரு முறை பரீக்ஷையில் குறைந்த மார்க்கு வாங்கினோர் அடுத்த முறை சரியாகத் திருப்திகரமான மார்க்கு வாங்கினாலொழிய கல்வி நிதியினின்றும் உபகாரம் பெறவியலாது.


மா. பா. கந்தசாமி முதலியார், அமைச்சர்.



தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாட்டின்
கொடியேற்று விழா ஆற்றிய பெரியார்
திரு. S. K. M. முருகைய முதலியார் அவர்கள்



தென்னிந்திய செங்குந்தர்
மூன்றாவது சமூக மகாநாட்டுத் தலைவர்
திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B.A.



தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது சமூக மகாநாட்டு
வரவேற்புத் தலைவர்
திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள்

# கொடிக் கவி

குந்தர் குலக் கொடி பாரீர்—அதைச்
சொந்தமெனத் துதித் தேற்றிட வாரீர்

நமது முன்னோர் திகழ்ந்திட்ட—சோழ
நாட்டினில் நலங்கொளுஞ் செங்குந்தர் வாரீர்
தமிழ் மணங் கமழ் பாண்டி நாட்டுப்—பெருந்
தகைமைகொள் செங்குந்தச் சோதரர் வாரீர் (குந்தர்)

செழுமலைச் சேர நன்னாடு—சேரும்
செங்குந்த வீரரே தீரரே வாரீர்
எழுபத்திரண் டெழில் நாட்டில்—எங்கும்
ஏற்றங் கொள்வோர் கொடி யேற்றிட வாரீர் (குந்தர்)

வானைத் தடவும் வண்கம்பம்—அதன்
வரம்பற்ற உச்சியில் வயக்கொடி காணீர்
ஞானந் தேடுஞ் சேவ லோர்பால்—நாமே
ஞானவேலன் வழியோ ரெனக் காட்டும் (குந்தர்)

கூற்றுவனென வேங்கை யோர்பால்—பகைக்
குருதி குடித்த செங்குந்தமும் நடுவே
சாற்றுமே யாவு நம் புகழை—ஆனால்
சற்று மொவ்வா ததற் கிக்கால நிலையே (குந்தர்)

பண்டைப் புகழ் பேசி யுறங்கோம்—இனிப்
பண்புடன் துயிலொழிந் தெடுப்போஞ் செம்படையை
திண்மை யூக்கப் பரி பூட்டி—வெகு
தீரமாய் முன்னேற்றத் தேரதை யோட்டி (குந்தர்)

வறுமையை வாட்டி யோட்டிடுவோம்—மிக
வம்பிழைத்திடுங் கட்சி வன்பகை கொல்வோம்
சிறுமையும் தாழ்மையும் வீட்டி—அரண்
சீருடை மேன்மைப் பதியைப் பிடிப்போம் (குந்தர்)

இவ்வண்ணந் தோள்கொட்டி நாமே—இவண்
ஏற்றிடுஞ் சபதத்தைப் போற்றிட இன்றே
எவ்வளமுங் கொண்ட திறலோர்—நந்தம்
[illegible]ந்தல் முருகையர் வாளுற ஏற்றும் (குந்தர்)

ஜே. தங்கவேல்.

### தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாட்டுக் கொடி யுயர்த்து தலைவர்

## திரு. S. K. M. முருகைய முதலியார் அவர்கள் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

திரு. S. K. M. முருகைய முதலியார் அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்ததும், பிறக்க முத்தி தரும் என்று பெரியோர்களால் சிறப்பித்துக் கூறப்பெறுவதுமாகிய திருவாரூர் க்ஷேத்திரத்தில் ஒரு மேன்மையான செங்குந்த குடும்பத்தில் 1877-ஆம் ௵ ஜூன் ௴ 20௳ பிறந்தார். இளம் வயதிலிருந்தே திறமையுடன் கல்வி கற்று 1898-ஆம் ௵ மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினர். 1892-ஆம் ௵ சென்னை ஜெனரல் போஸ்டாபீசில் உத்தியோகத்தில் அமர்ந்து, அங்குள்ள பல பொறுப்புள்ள ஸ்தானங்களையும் திறமையுடன் வகித்திருந்து 1919-ஆம் ௵ உத்தியோகத்தை விட்டு விட்டு அரசாங்க உபகாரச் சம்பளம் (Pension) பெற்றுத் தமது குடும்ப வியாபாரத்தை விருத்தி செய்ய ஆரம்பித்தார். இவர் தபாலாபீசி லிருந்த காலத்தில் சில காலம் இன்ஸ்பெக்டராக இருந்து, கடைசியாகச் சென்னை ஜெனரல் போஸ்டாபீசு கரஸ்பாண்டென்ஸ் டிபார்ட்மென்டில் (Correspondence Dept.) ஒரு க்ரூப் ஹெட் கிளார்க் பதவி யிலிருந்தார்.

திரு. முதலியார் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத உத்தமர். வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாரபக்ஷமே இவரிடத்தில் கிடையாது. சட்டப் பிரகாரம் ஒழுங்காகவும், சுத்தமாகவும், திறமையோடும் எக்காரியங்களையும் செய்யும் ஆற்றல் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றவர். இவரது நேர்மையான நற்குண நற்செய்கைகளையே இவர் கையெழுத்தும் காட்டுகின்றது. இவருடைய கையெழுத்திற்கும் அச்செழுத்திற்கும் வித்தியாசம் காண்பது அரிது. அவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் எழுதுவார்.

இவர் வியாபாரத்தில் பிரவேசித்த பிறகு சென்னை பளையகாட் கம்பெனி மானேஜராக இரண்டு மூன்று தடவைகள் இருந்திருக்கிறார். சென்னை நாட்டைச் சேர்ந்த செங்குந்தர்கள்பெரும்பாலும் இவரை நன்குணர்வார்கள்.

திரு. முதலியாரவர்கள் மிகுந்த குலாபிமானமுடையவர். சென்ற வருஷம் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தமது சொந்த வேலைகள் சிலவற்றை முன்னிட்டு நமது தலைச்சங்கக் காரியதரிசி பதவியை ராஜிநாமா செய்தபோது நிர்வாகக் கமிட்டியார் அப் பதவிக்குத் தகுதியான கனவானை நியமிக்க வேண்டுமென யோசித்திருந்த காலத்தில் நமது திரு. S. K. M. முருகைய முதலியார் அவர்கள்தாமே அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு தமக்குள்ள வியாபாரத்தோடு அதையும் கவனித்து வந்தார். இதனால் நமது சங்க விஷயத்தில் இவருக்கு உள்ள ஊக்கம் எவ்வளவென்பது சொல்லாமலே விளங்கும். இவர் நமது சபாபதி வள்ளலாரது நெருங்கிய தாயாதியாவர். சங்க ஆரம்ப காலத்தில் சங்கத்தின் பொக்கிஷதாரராக இருந்து, சென்னையிலும், காஞ்சிபுரத்திலுமுள்ள பளையகாட் கம்பெனிகளில் தலைச்சங்கத்திற்கு மகமை வசூல் செய்து கொடுக்கும் ஏற்பாடு செய்ய மிகவும் பாடுபட்டவர் இவரே. தலைச் சங்கமும், செங்குந்த உலகமும் இப் பெரியாருக்கு எக்காலத்தும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன.

## கொடி யுயர்த்து தலைவர் சொற்பொழிவு

கனவான்களே! சகோதர சகோதரிகளே!!

இப்போது நடக்க விருக்கும் நமது மூன்றாவது மகாநாட்டின் பெருமை தங்கிய கொடியினை ஏற்றும்படியான பெருங் கௌரவத்தை அன்பு கூர்ந்து எனக்கு அளித்த வரவேற்புச் சபையாருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். அறிவாற்றல், உலகானுபவம் முதலியவற்றில் முதிர்ந்த காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மன் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள், கோயம்புத்தூர் பிரபல வியாபாரியாகிய திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் போன்ற பெரியோர்கள் இயற்றிய இப் பெரும் பணியை ஆற்ற என்னைவிடப் பலவகைகளிலும் தகுதி மிக்கவர்கள் பலரிருந்தும், என்னை இப்பணி செய்யுமாறு வற்புறுத்தியது யாது பற்றியோ அறிகிலேன். பிறக்க முத்தி தரும் ஆரூரில் யான் பிறந்ததனாலோ, நமது தற்போதைய கிளர்ச்சிக்கு அடிப்படையாயுள்ள நமது தலைச் சங்கமும், செங்குந்த மித்திரனும் தோன்றுவதற்குத் திருவாரூர்ச் செங்குந்தர்கள் காரண பூதர்களாயிருந்தார்கள் என்ற முறையினாலோ, அல்லது சமூக சேவையில் எனக்கு மேன்மேலும் ஊக்க முண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தாலோ வரவேற்புச் சபையார் எனக்கு இம் மகத்தான பணியைத் தந்துள்ளார்கள். பெருமை வாய்ந்த கொடியினை உயர்த்த எனக்குத் தகுதியில்லையென்பதை யான் உணர்வேனாயினும், பெரியோர்கள் பணியை மறுக்க அஞ்சி இங்குக் குழுமியுள்ள மகாஜனங்களாகிய உங்களுடைய ஆதரவினால் அதனை ஒருவாறு இயற்ற முன்வந்துள்ளேன்.

மகாநாடு ஆரம்பிக்கு முன் கொடியேற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், இக் கொடியில் குந்தம், சேவல், வேங்கை ஆகிய மூன்றின் உருவங்கள் வரையப்பெற்றுள்ளதன் காரணங்களைப் பற்றியும் சென்ற இரண்டு மகாநாடுகள் கூடிய சமயங்களில் கொடியேற்றிய பெரியோர்கள் விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறபடியால் யான் இப்போது அதனையே திரும்பக் கூறவேண்டியதில்லையென்றே கருதுகிறேன்.



ஐரோப்பிய நாடுகளிலும், பிற நாடுகளிலும் ஒவ்வொரு அரசாங்கத்திற்கும், ஜில்லாவுக்கும், பட்டணத்துக்கும் பிரத்தியேகமான கொடிகள் இருப்பது போலவே நமது நாட்டிலும் பண்டைக்காலந் தொட்டே ஒவ்வொரு இனத்தவர்க்கும், பிரசித்தி பெற்ற அரசர்களுக்கும், புத்த வீரர்களுக்கும் தனித் தனிக் கொடிகள் உண்டென்பதைப் புராண இதிகாசங்கள் மூலமாக நீங்கள் அறிந்திருப்பீர்களென்றே எண்ணுகிறேன். இத்தகைய கொடிகள், உரியவர்களால் நன்கு மதிக்கப்பெற்று வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பெற்று வருகின்றன என்பதும் பிரசித்தி. உயிரைக் கொடுத்தும் தமது கொடிகளைப் பாதுகாக்கும் வீரர்களும் உண்டு. நாமும் அவ்வாறே நம்முடைய கொடியினை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். ஆனால் நாம் அப்படிச் செய்யத் தவறினோம். அதனாலன்றோ இன்று நாம் தாழ்ந்த நிலையடைந்தோம்? குந்தம் முதலியவை தீட்டப் பெற்றுள்ள சீலையைப் பத்திரப்படுத்தி வைப்பதே பாதுகாப்பாகும் என யான் கருதவில்லை. அது சரியான பாதுகாப்பாகாது. அதில் வரையப்பெற்றுள்ள குந்தம் முதலியவை நமக்கு உணர்த்தும் உண்மைகளை நன்குணர்ந்து அவற்றைக் கடைப்பிடித் தொழுகுவதே சரியான பாதுகாப்பாகும். அவை நமக்கு என்ன உண்மைகளை உணர்த்துகின்றன? விடியற்காலத்தில் கூவி நம்மை நித்திரையினின்றும் எழுப்பி நேரத்தை அறிவிக்கும் சேவலானது, 'உறக்கத்தினின்று எழுந்திருங்கள். காலம் மிக மிக அருமையானது, ஒப்புயர்வற்றது. இழந்த கைப்பொருளையும் பின்னொருகால் முயற்சியால் பெறலாம்; ஆனால் வீணில் கழிக்கப்பட்ட காலத்தை மீண்டும் பெறல் அரிது, அரிது. அவ்வாறு கழிக்கப்பட்ட நாளானது பெயரால் 'நாள்' என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் நம் உயிரை ஈரும் வாள் ஆகும். ஆகையால் எவ்வெக் காரியங்களை எவ்வெப்போது செய்யவேண்டுமோ அவ்வக் காரியங்களை அவ்வப்போதே செய்து பயனை யடையுங்கள். சுருங்கக் கூறின், உங்கள் வாழ்நாட்களை வீழ்நாளாக்காதீர்கள்' என்பதையும், அஞ்சாத நெஞ்சமும், வீரத்தன்மையும் வாய்ந்த வேங்கையானது, 'நீங்கள் சோம்பித் திரிந்து கோழைகளாயிராமல் எக்காரியத்தையும் நியாயமான வழியில் ஊக்கத்தைக் கைவிடாது வீரத்துடனும், மனத்திட்பத்துடனும் செய்யுங்கள்' என்பதையும், சேவலுக்கும், வேங்கைக்கும் நடுவண் தீட்டப்பெற்றுள்ள குந்தமென்னும் வேலாயுதமானது 'மேற் கூறப்பெற்ற இரண்டினையும் கைக்கொண்டொழுகுவீர்களாயின், கொடுங்கோல் செலுத்திப் பல்லுயிர்களுக்கும் இன்னல் விளைத்து வந்த சூரனாகிய வல்லரக்கனை நமது குலதெய்வமாகிய ஸ்ரீ முருகவேள் திருக்கரத்தில் தங்கியுள்ள வேலாயுதமானது எதிர்த்துப் போர் செய்து வெட்டி வீழ்த்தியது போல், உலக வாழ்க்கையில் உங்களை எதிர்த்துப் போராடித் துன்புறுத்தும் மிடி (தரித்திரம்), நோய், பலவித இடுக்கண்கள் என்னும் வல்லரக்கனை எதிர்த்து முயற்சி என்னும் வேலாயுதத்தால் வெட்டி வீழ்த்தி வெற்றியுற்று வையகத்து வாழ்[illegible]ர். அதனால் பின்னர் வானுறையும் தெய்வத்துள்ளும் வைக்கப்படுவீர்கள்' என்பதையும் உணர்த்துகின்றன. இவ்வுண்மைகளை நாம் கடைப்பிடித் தொழுகும்போதுதான் அவற்றை யுணர்த்தும் செங்குந்தக் கொடியினைப் பாதுகாத்தவர்களாவோம். இதுவே நமது கொடியின் உண்மைத் தத்துவமாகும்.

நமது சமூகம் முன்னேற்றமடைவதற்கான சௌகரியங்கள் பல இருந்தும், அது அவற்றையெல்லாம் கைநழுவ விட்டுத் தற்போது பிற்போக்கான சமூகங்களுள் ஒன்றாக இருக்கிறது. சொந்த விவகாரங்களிலோ பிறவற்றிலோ உள்ள மனத்தாங்கலையும், சுய நலத்தையும், சில சமயங்களில் பொறாமையையுமே காரணமாக வைத்து ஊர்க்கக்ஷிகளை உண்டாக்கி, வழக்குகளாலும் பிறவற்றாலும் ஏழை மக்கள் அரிதிற் றேடிய பொருளை வீணிற் செலவிடுவதன்றி, காலத்தையும் வீணில் கழிக்கின்றனர். கக்ஷி இல்லாத செங்குந்த கிராமங்களைக் காண்பது மிகவும் அருமை என்பதை நீங்கள் அறிவீர்கள். கக்ஷிப் பிளவுகளால் பாழான குடும்பங்களும், கிராமங்களும் எத்தனை? அடைத்து வைத்துப் பாழடைந்த கோயில்கள் எத்தனை? கக்ஷிச் சண்டைகளுக்காகக் கழித்த நாட்கள் எத்தனை? உண்மை இவ்வாறாக, சமூகத்தின் குறைபாடுகளைத் தெரிந்துகொள்வதற்கும் அவற்றைப் போக்குவதற்கான முறைகளைப்பற்றி யோசிப்பதற்கும் இவர்களுக்கு நேரம் எவ்வாறு கிடைக்கும்?

ஆகையினாற்றான் சென்ற நாலைந்து வருஷங்களாக நமது சங்கமும், பத்திரிகையும் விடாமுயற்சியோடு உழைத்து வந்தும் இன்னும் நம்மில் பெரும்பாலோர் வீழ்நாள் படாமை நன்றாற்றாது பழைய போக்கிலேயே தங்கள் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். கக்ஷி சம்பந்தமான வழக்குகளில்லாத நாளையே கண்டறியாத கிராமங்களும் சில உள. வருஷா வருஷம் நம்மவர் கக்ஷி சம்பந்தமான வழக்குகள் நூற்றுக்கணக்கில் நீதி மன்றங்களில் நடந்து வருகின்றன. புராணக் கதைகளைச் சொல்லிக்கொண்டு காலங் கழிக்காது நம் சமூக நிலைமையை அறிந்து உலகப் போக்கை புணர்ந்து அதற்குத் தக்கபடி நடக்க முயலுவதே இல்லை. கடைசியாக நாம் கக்ஷிகளாலும் வழக்குகளாலும் அடைந்த நன்மை ஏதாவதுண்டா? கவனித்துப் பாருங்கள். ஏழைகள் நெருக்குண்டு வருந்துகிறார்கள். இவ்வாறு செலவிடப்படும் பொருளை நமது குல ஏழைமாணவர்களுக்காக ஏற்படுத்தப் பெற்றுள்ள கல்விநிதியில் சேர்த்து வருவோமாயின் அந்நிதி பெருகி நமது சமூகத்திற்குப் பெரு நன்மையை விளைவிக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஆகையால் சகோதர சகோதரிகளே! நமது கொடியின் உண்மைத் தத்துவங்களை உணர்ந்து உறக்கத்தினின்றும் விழித்து எழுந்து நமது லக்ஷியத்தை அடைவதற்காக இடைவிடாது ஊக்கத்தோடு உழைப்போமாக! ஸ்ரீ முருகப் பெருமான் நமக்கு உடனிருந்து துணை புரிவானாக! இத்தகைய பெருமை வாய்ந்த நமதுகொடியினை உயர்த்தும் பெரும் பாக்கியத்தை எனக் களித்த வரவேற்புச் சபையா

ருக்கு இன்னொரு முறை எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்தி, நமது உன்னத நிலைக் கறிகுறியாக இக்கொடி யென்றும் உயர் நிலையிலேயே ஓங்கிப் பறக்க வேண்டுமென்றும் பிரார்த்தனையுடன் இதனை உயர்த்துகின்றேன்.

---

# Address of Welcome

Presented to

**The Hon'ble Mr. P. T. Rajan,**
Bar-at-Law., M. L. C.,

Minister to the Government of Madras,

by the Members of

**The S. I. S. M. Sangam, Madras,**

on Saturday, the 26th December, 1931,

on the occasion of his opening

**THE SOUTH INDIAN SENGUNDARS' THIRD CONFERENCE**

at the Sundareswarar Hall, Mylapore.

*Honoured Sir,*

*On behalf of the Sengundar community, we have the highest pleasure in welcoming you in our midst, particularly on an occasion like this, when the chosen representatives of our community from every nook and corner of this presidency are gathered together in conference.*

*You have already endeared yourself to us as a devoted and untiring worker for the uplift-ment of the non-Brahmin communities of South India, and the present position you hold in the Government of Madras is the just reward of your selfless labours in this field. The impetus which the non-Brahmin movement, through noble leaders of your type, has given to the various communities of our presidency, has been bearing fruit for sometime in conferences and communal organisations of the type which today it is our proud privilege to introduce you to, and we can easily imagine with what degree of benign gratification you will look upon this assembly.*

*As the conveners and organisers of this conference, we take this opportunity to request you to be kind enough to open it and inspire our delegates from far and near with your much-priced guidance and goodwill.*

*We remain,*
*Honoured Sir,*
*Your wellwishers and admirers,*
*The Members of*
**The S. I. S. M. Sangam, Madras.**

*Madras:*
*26-12-31*

சென்னை அரசாங்க மந்திரி
கனம் பி. டி. ராஜன்
பார்-அட்-லா, எம். எல். சி. அவர்கட்கு
1931-ஆம் ஞு டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி
சனிக்கிழமை யன்று, அவர்
திருமயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலில்
தென்னிந்திய செங்குந்தர்
மூன்றாவது மகாநாட்டைத்
திறந்து வைத்த சமயம்,
சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன
சங்கத்தின் அங்கத்தினர் வழங்கிய
வரவேற்பு நல்லுரை

கனம் தங்கிய ஐயா,

இவ் விராஜதானியின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் வந்த எங்கள் குலப் பிரதிநிதிகள் மகாநாட்டிற் குழுமி யிருக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தில் செங்குந்த சமூகத்தின் சார்பாகத் தங்களை எங்களிடை வரவேற்பது எங்களுக்குப் பெரு மகிழ்ச்சி யளிக்கின்றது.

தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பன ரல்லாதார் சமூகங்களினது முன்னேற்றத்திற்காக ஊக்கத்தோடும் சலியாதும் உழைத்ததால், தாங்கள் இயற்கனவே எங்கள் நேசத்தைச் சம்பாதித்திருக்கின்றீர்கள். சென்னைச் சர்க்காரில் தாங்கள் தற்போது வகிக்கும் ஸ்தானம், இத்துறையில் தாங்க ளாற்றிய சுயநலமற்ற தொண்டுக்குத் தக்க பரிசே யாகும். பார்ப்பன ரல்லாதா ரியக்கம் நமது இராஜதானியிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கும் தங்களைப் போன்ற கண்ணியமிக்க தலைவர்கள் மூலம் அளித்துள்ள தூண்டுதலானது, இன்று நாங்கள் மிகவும் மகிழ்ச்சியோடு தங்களுக்கு அறிமுகப்படுத்துவதைப் போன்ற மகாநாடுகளிலும் சமூகக் கூட்டங்களிலும் பயனளித்து வந்திருக்கிறது. ஆகவே, இந்தக் கூட்டத்தினை எவ்வளவு ஆர்வத்தோடும் மனத் திருப்தியோடும் தாங்கள் பாராட்டுவீர்களென்பதை நாங்கள் எளிதில் உணருகிறோம்.

இந்த மகாநாட்டினைக் கூட்டியவர்களாக இருக்கும் நாங்கள், இந்தச் சந்தர்ப்பத்தில், தயைகூர்ந்து இதனைத் திறந்து வைக்குமாறும் பல பாகங்களிலிருந்தும் வந்து குழுமி யிருக்கும் எங்கள் பிரதிநிதிகளுக்குத் தங்களது மதிப்பு மிக்க வார்த்தைகளால் உற்சாக மூட்டுமாறும் தங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
தங்களது நன்மையைக் கோருபவரும்
தங்கள் மேன்மையைப் பாராட்டு
பவருமாகிய,
சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன
சங்கத்தின் அங்கத்தினர்

சென்னை :
26-12-31.



## HON'BLE MR. P. T. RAJAN'S OPENING ADDRESS

The Hon. Mr. P. T. Rajan thanked the members of the conference for welcoming him. He said that there might be some critics who would not like Conferences like those that they were celebrating on the score that they would lead to a split in the nation. But to the extent that each community advanced and marked its progress to that extent the nation benefited.

The Sengunthar community, said the Minister, once enjoyed a pre-eminent place in the industrial and commercial activities of the country. But it was not the case now. The Conference they were having now, he supposed, was an indication of the desire on the part of members of the Sengunthar community to better equip themselves and take their proper place in the body politic of the province. In so equiping themselves education must naturally take the foremost place. The aim of education should be to make them good citizens and make them realise their rights and responsibilities, especially when more and more power was being transferred to the people. Education should not be merely of a general character and must not be pursued with a view to get Government employment. They must learn technical subjects. The main occupation of the Sengunthar community was weaving and dyeing. This was, in importance, next only to agriculture. In these days of keen competition and hard struggle for existence, it behoved those who were engaged in particular occupations to be experts. And for this purpose young men must be sent to foreign countries for training in industries and the members of the community must also institute scholarships for this purpose. Men of technical education not only made their condition more prosperous but also bettered the financial condition of the state. The speaker also appealed to them to work on co-operative basis, and start co-operative societies. He referred to the weaving co-operative society

## கனம் மந்திரி பி. டி. ராஜன் அவர்களது திறப்புரை

"என்னைக் களிவுடன் வரவேற்றமைக்காக இம் மகாநாட்டின் அங்கத்தினருக்கு நான் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். நீங்கள் கூட்டுபவைகளைப் போன்ற மகாநாடுகள் சமுதாயத்தில் பிளவை புண்டாக்குமெனக் கருதிச் சிலர் இத்தகைய மகாநாடுகளை விரும்பமாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு சமூகமும் எந்த அளவுக்கு முன்னேறுகின்றதோ, அந்த அளவுக்குத் தேசமும் பயனடைகின்றது."

"செங்குந்த சமூகம் ஒரு காலத்தில் இத்தேசத்தின் தொழில் முறைகளிலும் வியாபார முறைகளிலும் முதன்மை ஸ்தானத்தை வகித்திருந்தது. ஆனால் இப்பொழுதோ, அதன் நிலை மாறிவிட்டது. நீங்கள் இப்பொழுது நடத்தும் மகாநாடு, அரசாங்கத்திலும், சமுதாயத்திலும் தக்கதொரு ஸ்தானத்தைத் தங்களுக்குத் தேடிக்கொள்ளவும், அதற்கேற்றபடி தங்களைத் தயாரித்துக்கொள்ளவும் செங்குந்த சமூகத்தினர் கொள்ளும் அவாவுக் கோர் அறிகுறி யென்றே நான் எண்ணுகிறேன். அங்ஙனம் தயாரித்துக்கொள்வதில் கட்டாயமாகக் கல்வியே முதற்படியா யமையும். ஜனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மேலும் மேலும் பெருகிக்கொண்டு வரும் இக்காலத்தில், அவர்களைச் சரியான பிரஜைகளாக்குவதும், அவர்கள் தங்கள் உரிமைகளையும் பொறுப்புக்களையும் உணருமாறு செய்வதுமே கல்வியின் நோக்கமா யிருத்தல் வேண்டும். கல்வி ஒரு சாதாரண தன்மையுடையதாக இருக்கக் கூடாது; சர்க்கார் உத்தியோகங்கள் பெறும் நோக்கத்தோடு அதனைக் கற்கவும் கூடாது. அவர்கள் தொழில் முறைகளைக் கற்றுணர வேண்டும். செங்குந்த சமூகத்தினரது முக்கியமான தொழில் நெய்தலும், சாயமேற்றுதலுமாகும். முக்கியத்தில் இது விவசாயத்துக்கு மட்டுமே அடுத்தபடியி லிருக்கிறது. மும்முரமான போட்டியும் வாழ்க்கைக்காகப் போராட்டமும் மலிந்துள்ள இக்காலத்தில், ஒரு தனிப்பட்ட தொழிலி லீடுபட்டிருப்பவர்களுக்குத் தகுதியானது, அதில் தம்மை மிகவும் சமர்த்தராக்கிக்கொள்வதே யாகும். இதன் பொருட்டுப் பயிற்சி பெறுவதற்காக வாலிபர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பவேண்டும். இச்சமூகத்தினர் இதற்காக உபகாரச் சம்பளங்களை ஏற்படுத்தவும் வேண்டும். தொழில் முறைகளில் பயிற்சி பெறுபவர்கள், தங்கள் நிலையை க்ஷேமப்படுத்திக்கொள்வதுடன் அரசாங்கத்தின் பொருளாதார நிலையையும் உயர்த்துகிறார்கள். இவற்றை யெல்லாம் நோக்கி, நீங்கள் கூட்டுறவு முறையில் உழைக்க வேண்டியதோடு கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்கவும் வேண்டும். சேலத்தில் ஒரு நெசவுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டுத் திருப்திகரமாகவே நடந்து வருகிறது. தனது துறைத்

he said, was working satisfactorily. To the extent that Government, with its limited finances could help them, he assured them, the help would be forthcoming. It was only by their combined efforts that they would be able to take their rightful position in the industrial and commercial activities of the province. The Minister then declared the conference open and wished it every success.

ஆனால், உங்களுடைய ஒத்துழைப்பினால் தான் நீங்கள் இம் மாகாணத்தின் தொழில்களிலும் வியாபாரங்களிலும் தக்க ஸ்தானத்தைப் பெற முடியும். நான் இந்த மகாநாட்டினைத் திறந்து வைத்து, அது சிருடன் நடைபெற வேண்டுமென்றும் கோருகிறேன்.

---

## தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது சமூக மகாநாட்டின் வரவேற்புச் சபைத் தலைவர்

## திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

இவர் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சோமங்கலம் என்னும் கிராமத்தில் 1879-ஆம் ஞு டிசம்பர் 14உ ஒரு புராதன செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். இளம் பருவத்திலேயே இவர் தமது தகப்பனாரை இழந்தபடியால், தாய் மாமன்மார்களால் ஆதரிக்கப் பெற்றுத் திருமயிலாப்பூரிலுள்ள கல்லூரியில் திறமையுடன் கல்வி பயின்று 1900-ஆம் ஞு எப்.ஏ. (F.A.) பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றார். பின்னர் போலீஸ் இலாகாவில் சேர்ந்து 1908-ஆம் வருஷத்திலிருந்து 1913-ஆம் வருஷம் வரையில் இலங்கை அரசாங்கத்தில் கைவிரல் அடையாள ஆபீசில் (Finger Print Bureau) வேலை பார்த்திருந்து, பிறகு சென்னைப் பட்டணத்திலுள்ள போலீஸ் இலாகாவில் அதே ஆபீஸில் சேர்ந்து அந்த ஆபீஸ் மேனேஜர் (Manager, Finger Print Bureau) பதவியை வகித்து வருகிறார். திரு. முதலியார் அவர்கள் மிகுந்த குலாபிமானம் உடையவர் என்பதற்கு இதுகாறும் அவர் ஊக்கத்தோடு செய்து வரும் குலத்தொண்டே போதிய சான்றாகும்.

சென்னை திருமயிலாப்பூர் சண்முகனடியார் சங்கத்தின் காரியதரிசியாக இருந்து அநேக ஆண்டுகள் அதன் ஆதரவில் செங்குந்தர் இரவு பாடசாலை ஏற்படுத்திக் குல முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்தார். தற்போது திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்துக்குத் தலைவராக இருந்து வருவதுடன் நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உதவித் தலைவராகவும் இருக்கிறார். இவையன்றி, திருமயிலாப்பூர் ஹிந்து சாசுவத நிதியில் எலெக்டரல் போர்டு அங்கத்தின (Electoral Board Member) ராகவும், செங்குந்தர்களுக் குரியதான திருமயிலை ஸ்ரீ வெள்ளீஸ்வரர் தேவஸ்தான தர்மகர்த்தாவாகவும் இருக்கிறார். இவர், நமது குல திலகங்களுள் ஒருவராகிய காலஞ்சென்ற வேலு முதலியார் அவர்களுக்கு (Superintendent, Accountant General's Office) அரிய துணைவராக இருந்து அநேக ஆண்டுகளுக்கு முன்னரே குல முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டவர்.

## சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சொற்பொழிவு

செங்குந்த குல சிகாமணிகளே!

பல ஜில்லாக்களிலுமிருந்து விஜயஞ் செய்துள்ள தலைவர்களும், பிரதிநிதிகளுமாகிய உங்களனைவருக்கும் என் அன்பார்ந்த வந்தனத்தை யளித்து உங்களனைவரையும் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். குலத் தொண்டு ஒன்றையே குறிப்பாகக் கொண்டு எவ்விதச் சிரமமும் பாராது விஜயஞ் செய்த உங்களுக்கு எங்களையு மறியாமல் எங்கள் வரவேற்பில் குறைவு நேர்ந்திருக்குமானால் அதைப் பொருட்படுத்தாமல் எங்கள் உள்ளன் பொன்றையே கவனித்து இம் மகாநாட்டைச் சிறப்புடன் நடத்துமாறு உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற இரண்டு மகாநாடுகளும் ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டிடங்களில் செவ்வையாக நிறைவேறின. இரண்டாவது மகாநாடு சென்ற மே மாதத்தில் நடந்தது. இன்னும் ஒரு வருட மாக வில்லையே; இதற்குள் என்ன அவசரம் என்கிற சந்தேகம் நிகழலாம். ஆனால், இராஜதானியின் முக்கிய பட்டணமாகவுள்ள இச் சென்னையில் கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் நடக்கும் விநோதங்களை நமது சகோதரர்களும் நண்பர்களும் கண்ணாரக் காண்பதோடு, மற்ற குல மக்கள் எவ்விதமான நாகரிகத்தி லிருக்கிறார்க ளென்பதையும் நம்மவர்கள் எந்நிலையி லிருக்கிறார்கள் என்பதையும் பிரத்தியக்ஷமாகப் பார்த்துணரவும் வேண்டும் என்னும் நோக்கமும், மற்றும் நம் பந்துமித்திரர்களைச் சமீபத்தில் கண்டு சம்பாஷிக்க வேண்டுமென்னும் பேராவுமே இதற்குக் காரணங்களாம்.

சென்ற இரண்டு மகாநாடுகளிலும் ஆலோசிக்கப்பட்ட விஷயங்களினும் புதிய தெதையும் சொல்ல நாம் முன்வரவில்லை. ஆயினும், மேற்படி மகாநாடுகளில் நடந்த விஷயங்களை நினைப்பூட்டி, நம்முடைய சமூகம் எவ்வளவு முன்னேறி யிருக்கிறதென்பதைக் கவனிக்கவே நாம் இங்குக் குழுமியுள்ளோம். நம்மவர்களிடையுள்ள தீய வழக்கங்களை ஒழிப்பதும், மற்றவர்களிடையுள்ள நன்மைகளை யநாது கைப்பற்றுவதும் நம்முடைய கொள்கைகளாகும்.

எவ்வாறே நம்மிடை வேரூன்றிவிட்ட தீய வழக்கங்களைக் களைவதே நமது முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். அத்தகைய வழக்கங்களுள் மூன்றை முக்கியமானவையாகக் கூறலாம். அவை: (1) புலாலுண்ணல், (1) மதுபானம், (8) கட்சி பேதங்கள்.

### புலாலுண்ணல்

பண்டைக் காலத்தில் நம்மினத்தவர்கள் ஆசாரங்களில் மேம்பட்டவர்களா யிருந்தார்கள். தற்போது அத்தகையோர் சீர்குலைந்திருப்பது மிக்க பரிதாபகரமான காட்சியே யாகும். புலாலுண்ணலின் தீய குணங்களைப் பார்ப்போம். அது தமோகுணத்தையே உற்பத்தி செய்து சாத்வீக குணத்தை அடக்கிவிடுகிறது. அப்படி அடக்கிவிடுவதனால் சுறுசுறுப்பும் சற்குணமும் போய்க் கெட்ட குணங்கள் உண்டாகிவிடுகின்றன. இதை யொழிக்க வேண்டு மென்பதற்காகவே பெரியோர்களெல்லாம்.

"புலையுங் கொலையும் களவுந் தவிர்"

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

எனக் கூறி புள்ளனர். புலாலுண்ணல் ஆசாரங்களைக் கெடுப்பதற்குக் காரணமாயுள்ளது. அதனால் ஜீவகாருண்யம் கெடுகிறது. மனிதர்களும் தமது இச்சையை முன்னிட்டு துர்தேவதைகட்குப் பிராணிகளைப் பலியிடுகிறார்கள்.

### மதுபானம்

மதுபானத்தினால் உண்டாகும் தீங்குகள் கணக்கிலடங்கா. மது உண்போன் தான் பிறந்த குலத்தையும், அதன் கௌரவத்தையும் கவனித்து நடப்பதில்லை. தன்னைச் சேர்ந்தவர்களுடைய சுக துக்கங்களையும் கவனிக்கிறதில்லை. தனது நடையுடை பாவனைகள் எப்படி யிருந்த போதிலும் அவற்றைக் கவனியாது சதா போதையிலேயே இருப்பதற்குண்டான வழி தேடிக்கொண்டு திரிகிறான். ஒரு சிற்பி அழகான ரூபமொன்றை அமைப்பதற்கு உருவங்களைத் தேடி ஒரு குழந்தையைச் சித்திரித்தான். சில வருடங்களுக்குப் பின்பு உலகத்தில் அருவருக்கக் கூடிய ரூபத்தையும் தயாரித்துத் தன்னுடைய அறையில் கட்டியிருந்தான். அவைகளின் சரித்திரத்தை ஆராயுங்கால் இரண்டும் ஒரே ஆளினுடைய உருவங்களெனத் தெரிய வந்தது. அழகாக இருந்த குழந்தை நாளடைவில் மதுபானத்திற் றலைமயங்கி அதனால் தனது லாவண்யத்தை யிழந்து ரூபம் மாறிப் பார்ப்பதற்கு அருவருக்கும்படியான நிலையை அடைந்ததாகத் தெரிகிறபடியால், மதுபானத்தினுடைய கெடுதலுக்கு அளவில்லையென விளங்குகிறது. "அறிவழிக்கும், செயலழிக்கும், அழியா மானந்தனை யழிக்கும்" என்றபடி இந்தக் குலம் சீரழிவதற்கு மதுபானம் பெருங்காரணமா யிருப்பதால் அதை அறவே யொழிக்க முயலுவதற்கு இம்மகாநாடு போதிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

### கட்சி பேதங்கள்

நம்முடைய பெரியோர்கள் நங்குலத்தின ரனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்கு எவ்வளவோ முயன்றார்கள். அதற்குச் சான்றாகத் தலைநாடென்றும், கிளை நாடென்றும், உறவின் முறையாகப் பிரித்து ஒருவருக் கொருவர் மரியாதை காட்டி வாழவேண்டு மென்ற நோக்கத்துடன் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க, இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் கோயிலை முன்னிலையாக வைத்துக்கொண்டு ஈஸ்வரனுக்குப் பயந்து நடப்பதற்குப் பதிலாக அவருடைய சந்நிதானத்திலேயே சண்டை சச்சரவு நடத்திக்கொண்டு துவேஷம் பாராட்டுகிறார்கள். சில குடும்பத்தார் நல்ல காரியங்களிலும், தீய காரியங்களிலும் இக் கலகங்களை மூட்டிவிட்டுச் சொந்த பந்துக்களில் முக்கியமானவர்கள் வாராமல் தடுத்துக்கொண்டும், கோர்ட்டுக்குப் போய் வியாஜ்ஜியங்கள் நடத்திக் கொண்டு மிருக்கிறார்கள். சொந்தக்காரர்களுள் கட்சி பேதங்கள் ஏற்படுத்திவிட்டால், மனச் சஞ்சலமும், பொருள் விரயமும் உண்டாவதே காணும் பலனாகையால் இதைத் தடுப்பதற்கு வழியென்னவென்று யோசிக்கவேண்டும்.

### ஐக்கிய சங்கம்

நீக்க வேண்டியவைகளை நீக்கின பிறகு பிறரிடத்திலுள்ள நன்மைகளைக் கைக்கொள்ள வேண்டும். நம்மவர்களில் பெரும்பாலோர் ஏழைத் தொழிலாளராகவும், சில பேர்கள் முதலாளிகளாகவும் இருக்கிறார்கள். முதலாளிகள் மூல தனத்தைக் கொண்டு நெசவு வியாபாரம் செய்கிறார்கள். அப்படிச் செய்வதில் ஏழை நெசவாளர் அநேகம் பேர் ஒருவாறு பிழைக்கிறார்கள். ஆனால் அவர்கள் சுகமாகக் காலங் கழிக்கப் போதிய வருவாயில்லை. ஏனென்றால் முதலாளிகள் முன் பணம் கொடுக்க வேண்டி யிருக்கிறது. அப்படிக் கொடுக்கும் போது நூல் விலைகளை ஏற்றியும் நெசவுக் கூலிகளைக் குறைத்தும் கொடுப்பதனால் நெசவுக்காரர்கள் எப்போதும் கஷ்டத்தையே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நெசவுக்காரர்கள் மீதும் குற்ற மில்லாமலில்லை. இவர்கள் முன் பணம் வாங்கிச் சரக்குகளை வாங்கின பணத்துக்குச் சரியாகக் கொடுக்கிறதில்லை. முன் பணத்தைச் செலவழித்துவிட்டுப் பாதி அல்லது முக்கால் பங்கு சரக்கைக் கட்டி அதிகம் பணம் கேட்கிறார்கள். முதலாளிகள் மறுப்பதற்கு அஞ்சிக் கேட்ட அளவுக்கு ஏறக்குறையக் கொடுக்கிறார்கள். சில வருஷங்களுக்குப் பிறகு கணக்குப் பார்க்கும்போது முதலாளிக்கும் நஷ்டம் நெசவுக்காரர்களுக்கும் கஷ்டமாகவே முடிகிறது. முதலாளிகள் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாத நெசவுக்காரனிடம் பாக்கி ஏறிவிடுகிறது. இரு தரத்தாரும் கெட்டுப் போய்விடுகிறார்கள். அதை எப்படிச்

சேர்ப்பித்தவது? ஐக்கிய சங்கங்களைக் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தி முதலாளிகள் ஒவ்வொருவரும் பல பங்குகள் வைத்து நெசவுக்காரர்களுக்கு முன் பணம் உதவிச் சௌகரியம் செய்ய வேண்டும். 2,3 வருஷங்களாக இதைக் குறித்து, மகாநாடுகளில் பேச்சுக்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் இதற்குத் தக்க ஏற்பாடுகள் இது வரையில் செய்திருக்கிறதாகத் தெரியவில்லை. தலைச்சங்கத்தாராகிலும் இதைக் கவனிக்குமாறு தக்க ஏற்பாடுகள் இம்மகாநாட்டில் செய்ய வேண்டும். நெசவுத் தொழிலிலும் பழைய முறைகளை விடுத்துப் புது முறைகளை அனுசரிக்க வேண்டும் என்கிறதை வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

### கல்வி

இத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் சொற்ப பொருளுள்ள நிதியைக் கொண்டே கல்வியைப் பெருக்குவதில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு மாணவர்க்குத் தக்க உதவி செய்கிறார்கள். ஆனால் அது போதாது. நெசவுக்காரர்கள் சிறு பிள்ளைகளைத் தங்களுக்கு உதவியாக வைத்துக்கொள்ளுகிறார்கள். படிக்க வைப்பதால் அவர்களுக்கு முதலில் இரண்டு வித நஷ்டங்கள் உண்டாகின்றன. சிறுவர்களால் தங்கள் தொழிலுக்குக் கிடைக்கக் கூடிய உதவியை இழக்க நேரிடுகிறது. பள்ளிக்கூடச் சம்பளம், உடுப்பு, புஸ்தகம், முதலிய செலவுகளையும் தாங்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு இரண்டு விதங்களில் நஷ்டம் உண்டாகிறபடியால் சிறுவர்களைக் கல்வி பயிலவிடுவது சிரமமாயிருக்கிறது. இதை என் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஆனால், கல்வியிருந்தால்தான் சமூகம் முன்னேற முடியும். இவ்விஷயத்தை ஆலோசித்துத் தக்க முடிவுக்கு வரவேண்டும்.

### பெண் கல்வி

ஆண் பிள்ளைகளைப் போலவே பெண் பிள்ளைகளுக்கும் கல்வி புகட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அமெரிக்காவில் அநேக பெண்பாலர் பெரிய உத்தியோகங்களிலும், ஜட்ஜுகளாகவும், வக்கீல்களாகவும், உபாத்தியாயினிகளாகவு மிருப்பதாகச் செங்குந்த மித்திரன் கூறுகிறான். நம்முடைய பெண் பிள்ளைகளோ அறியாமையில் பழகி வருகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு வித்தையைக் கொடுத்தால் ஆண் பிள்ளைகளை மதியாமல் சிரேஷ்டமாக நடப்பார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் எல்லா நற்குணங்களும் இயற்கையாயிருக்கும் பெண்களுக்குக் கல்வி புகட்டினால் அவர்கள் "பொன்மலர் நாற்ற முடைத்து" என்பதுபோல் பிரகாசித்துத் தங்கள் குடும்பத்தை முன்னேற்ற முற்படுவார்கள் என்பதைக் கவனித்துப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க முயலவேண்டும்.

### சுகாதாரம்

நாம் குடியிருக்கும் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதுமன்றி நாம் உட்கொள்ளும் அன்ன பானாதிகளையும் சுத்தமாக வைத்தால்தான் நோயின்றி வாழலாம். "நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வ"மல்லவா? எவ்வளவு பொருளிருந்த போதிலும் தேக சுகம் இல்லையேல் இன்ப மேற்படாது. ஆகையால் சுகாதாரத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். நம்மவர்களிற் பெரும்பாலார் தங்கள் தொழிற்சாலையைக் குடியிருக்கும் இடத்திலேயே வைத்துக்கொண்டு அசுத்தமாயிருப்பதினாலேயே பிறர் அவமதிப்பதற்கு இடமேற்படுகிறது. தாங்களிருக்கும் வாசஸ்தலம் எவ்வளவு எளிய நிலையிலிருந்தாலும் குப்பை முதலியவைகளை நீக்கிச் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால் அநேக நன்மைகள் உண்டாகும். "Cleanliness is next to godliness" என்பது ஆங்கிலப் பழமொழி. ஆகையால் சுகாதாரத்தை அனுசரிப்பது அத்தியாவசியமாகும்.

இவ்விஷயங்களைச் சாவதானமாகக் கேட்டு, ஆராய்ந்து, சிந்தித்து, தெளிந்து நம் மரபினரை முன்னுக்குக் கொண்டு வருமாறும், எங்களுடைய வரவேற்பை ஏற்றுக்கொண்டு மனமகிழுமாறும் தங்களைக் கேட்டுக்கொண்டு இறைவனது திருவருளைச் சிந்திக்கிறேன்.

---

தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது சமூக மகாநாட்டுத் தலைவர்

## திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது சமூக மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உயர் திருவாளர் K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சியில் 1890-ஆம் ௵ டிசம்பர்௴ 12௳ பிறந்தவர். இவரது தந்தையாரும், செங்குந்தத் தலைவரும், ஜவுளி வியாபாரியுமாகிய திரு. நாராயணசாமி முதலியார் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில் தர்மகர்த்தாவாயிருந்ததோடு, கடவுள் பக்தியும், சைவாபிமானமும் உடையவராயும், உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசாத உத்தமராயும் விளங்கியவர். திரு. நாராயணசாமி முதலியார் தமது ஏக புத்திரராகிய உயர் திரு. சுப்பிரமணிய முதலியாரிடத்து வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவரைக் கல்லிடைக்குறிச்சி ஆங்கில பாடசாலையில் சேர்த்துக் கல்வி பயில்வித்தார். இவர் தாம் கல்லிடைக்குறிச்சியில் முதல் முதலாக ஆங்கிலம் கற்க ஆரம்பித்த செங்குந்தப் பிள்ளை. பின்னர் சென்னைக் கிரிஸ்துவ கலாசாலையில் பி. ஏ. வகுப்புப் படித்து, 1914-ஆம் ஆண்டு பரீக்ஷையில் தேறினார். கல்லிடைக்குறிச்சி செங்குந்தர்களுக்குள்ளே இவர் தாம் முதல் முதலில் பி. ஏ. பட்டம் பெற்றவர். இவர் ஐந்தாவது வகுப்பிலிருந்தே சம்ஸ்கிருதத்தை இரண்டாவது பாஷையாகக் கற்று வந்தபடியால், இவர் பி.ஏ. வகுப்பில் படித்துத் தேறிய பாடங்களுள் சமஸ்கிருத பாஷையும் ஒன்றாகும். இப்பாஷையில் இவருக்கு ஆழ்ந்த ஞானமுண்டு. பள்ளியில் வாசித்து வருங் காலத்திலேயே வகுப்புப் பிள்ளைகளுள் இவர் மிகுந்த புத்திசாலி யென்றும், நற்குண முடையவரென்றும், உபாத்தியாயர்களால் நன்கு மதிக்கப்பெற்று வந்தார்.

1914-ம் ௵ முதல் 1916-ம் ௵ வரையில் திருநெல்வேலி சி. எம். எஸ். காலேஜில் சயன்ஸ் உதவி ஆசிரியராக இருந்து, பின்னர் சட்டத்தில் தேர்ச்சி பெற விருப்பங் கொண்டு 1917-ம் ௵ சென்னைச் சட்டக் கலாசாலையில் வாசித்து, முதல் கிரேட் ப்ளீடர் பரீக்ஷையில் வெகு திறமையோடு தேறி, அதே வருஷம் நவம்பர் மாதத்திலிருந்து அம்பாசமுத்திரத்தில் ஒரு பிரபல வக்கீலாக இருந்து வருகிறார்.

அம்பாசமுத்திரம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர், ஸ்ரீ சங்கரலிங்கர் தேவஸ்தானங்களின் நிர்வாக சம்பந்தமாக நடந்த ஸ்கீம் சூட்டுகளின் தீர்ப்புப் பிரகாரம் நமது முதலியார் அவர்கள் அவற்றின் ரிசீவராக 1920-௵ ஜனவரி௴ நியமிக்கப்பெற்று, இரு கக்ஷிக்காரர்களும் மனஸ்தாபம் ஒழிந்து ஒற்றுமையுற்ற வரையில் அப் பதவியை வகித்து வந்தார். வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக 1923-௵ த்திலிருந்து தொடர்ச்சியாக ஆறு வருஷ காலம் இருந்துவந்தார். ஷை சங்கமானது திருநெல்வேலியில் வக்கீலாக இருந்த செங்குந்த திலகர் திரு. V. A. பூமிநாத முதலியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று இன்றுவரை மிகுந்த ஊக்கத்தோடு இடைவிடாது நமது குல முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறது. இச்சங்கமே சென்னை மாகாணத்திலுள்ள செங்குந்தர் சங்கங்களுக்குள்ளே மிகப் பழமையானது. நமது குல முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டு வந்த திரு. பூமிநாத முதலியார் அவர்கள் 1923. ௵ விண்குடியேறியது நம் குலம் செய்த துர்ப்பாக்கியமேயாம்.

தென்காசியில் 1920-ஆம் ௵ ஸ்தாபிக்கப்பெற்ற செங்குந்தர் பாங்கியில் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 1923-ஆம் ௵ பங்குதாரராகச் சேர்ந்து, அது முதல் அப் பாங்கியின் டைரெக்டர்களுள் ஒருவராக இருந்துவருவதன்றி, இரண்டு மூன்று தடவைகளில் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று இன்னும் அப் பதவியை வகித்து வருகிறார்.

இந்து தேவஸ்தான பரிபாலன சட்டம் (Hindu Religious'Endowment Act) அமுலுக்கு வந்த நாள் முதல் ஸ்ரீ காசிவிஸ்வநாதர் ஸ்ரீ திருமூலநாத சுவாமி, ஸ்ரீ வீரமார்த்தாண்டேஸ்வரர் முதலிய தேவஸ்தானங்களுக்குக் கூட்டுத் தர்மகர்த்தாராக நியமிக்கப்பெற்றுச் சில வருஷங்கள் அவற்றைத் திறமையுடன் நிர்வகித்துப் பின்னர் ஏற்பட்ட சில குடும்ப அசந்தர்ப்பங்களால் ராஜிநாமா செய்துவிட்டனர்.

திரு. முதலியார் அவர்கள் தமது வக்கீல் வேலையோடு பல பொது வேலைகளையும் பார்த்து வருவதனால் இவருக்கு ஒழிவு நேரம் கிடைப்பது மிகவும் அருமை. என்றாலும், இவரைப் போல் செங்குந்த மித்திரனை ஒவ்வொரு மாதமும் தவறாது ஆதிமுதல் அந்தம் வரையில் ஒரு எழுத்துக்கூட விடாமல் படித்து அதிற் கண்டுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியவர்களைக் காண்பது மிகவும் அரிது. இவருக்கு முன்பின் பரிச்சிய முள்ளவர்கள் இல்லாத சென்னையில் இவர் சட்டக் கலாசாலையில் வாசித்து வந்த காலத்தில், சென்னைத் திருமயிலாப்பூர் சண்முகனடியார் சங்கத்தின் ஆண்டு விழா போன்ற செங்குந்தர் பொதுக் கூட்டங்கள் கூடுவதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து அக் கூட்டங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் விஷயங்களை ஆவலோடு கவனிப்பது இவரது வழக்கம். மேலே கூறியவற்றால் இவருக்குச் செங்குந்த குல முன்னேற்றத்தில் எவ்வளவு ஆர்வமிருக்கிற தென்பது சொல்லாமலே விளங்கும். நிரம்பிய உலக அனுபவமும், விஷயங்களை ஆழ்ந்து யோசித்துச் சரியான முடிவு கட்டும் பேராற்றலு முடையவர். கிராஹிய சக்தியும் தாரண சக்தியும் நிரம்பப் பெற்றிருப்பதன்றிப் பயனில கூறாமை, வீண்காலங் கழிக்காமை, பொறை, வாய்மை, தெய்வ பக்தி, குலாபிமானம் முதலிய அரிய குணங்கள் அமையப்பெற்றவர். 'பொன்னினும் போற்றுக பொழுதெனும் பொருளை' என்பது இவரது பெருங் கொள்கைகளுள் ஒன்றாகும். இத்தகைய பெரியார் நமது மூன்றாவது மகாநாட்டிற்குத் தலைவராக அமைந்தது மிகப் பொருத்தமான தென்றே சொல்லவேண்டும்.



கல்லிடைக்குறிச்சி வக்கீல் திருவாளர்

K. N. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கட்கு

வரவேற்புக் கழகத்தார் வழங்கிய

## வரவேற்பு நல்லுரை

இயற்கை வளம் பல ஏந்திய நாட்டோய்!

மக்கள் மனத்திற்கு இன்பமூட்டி, அவர்கள் வாழ்வை வளம் படுத்துவனவாகிய மலை வளமும் நீர் வளமும் மலிந்துள்ள பாண்டி நாட்டின் ஒரு பகுதியாகிய திருநெல்வேலி ஜில்லாவில் தாங்கள் அவதரித்துள்ளீர்கள். மேலும் மேலும் இடையீடின்றித் தொடர்ந்தும் அடர்ந்தும் அரண் செய்யும் பிணி போக்கும் பாபநாசம், உடல் நலங்கருதி மக்

கள் விரும்பி யடையும் மாண்பமைந்த திருக்குற்றாலம், தமிழுறவாடிய தென்றலை வீசும் பொதிகையாகிய மலைக் கோவையின் மாண்பும், ஓவென அரற்றிக் கீழிறங்கும் நீர் வீழ்ச்சிகளின் பெருமையும், நாட்டுக்கு உயிரென விளங்கும் காடுகளின் செறிவும், புகழமைந்த பொருநை (தாமிரபரணி) முதலிய ஆறுகளின் ஓட்டமும், பச்சைப்படாம் விரித்தாலென்ன விளங்கும் நெல்வேலிகளின் நேர்மையும், தெய்வ மணங் கமழும் திருக்கோயில்களின் சிறப்பும் நிறைந்த நாட்டினின்றும் இம் மகாநாட்டில் தலைமை வகிக்கப் போந்த தங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றமைக்கு யாங்கள் பெருமகிழ் வெய்துகின்றோம். தங்கள் வரவு நல்வரவாகுக!

அறிவும் ஆற்றலும் அமைந்திடும் அண்ணல்!

நாட்டில் எங்கும் அரசியற் குழப்பம் நிறைந்துள்ள இக் காலத்தில், சதுரங்க ஆட்டம் போன்று நிமிடத்திற்கு நிமிடம் மாறும் கொள்கைகளையுடைய கட்சிகள் நிலவும் இவ் வேளையில், உலக முழுதும் செல்வங் குன்றித் துன்புறும் இத் தருணத்தில், நமது சமூக மக்கள் தொழிலற்று வருவாய் குன்றி வறுமைப் பிணியில் ஆழ்ந்து அல்லலுறும் இச்சமயத்தில் நமது மாகாணத்தின் தலைநகராகிய சென்னை யம்பதியில் கூடும் இம்மகா நாட்டிற்கு ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிகளின் துறைபோய் அதனால் வாய்ந்த அறிவும், அநுபவமும், ஆற்றலும் நிறைந்த தங்களைத் தலைவராகப் பெற்றது எமது நற்காலமேயாகும். தங்கள் தலைமையில் கூடும் இம் மகாநாடு நம்மவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பாடுறவும், செல்வத் துறையில் சிறப்புறவும் வழி காணுமென எண்ணுகிறோம்.

உண்மையும் பொறுமையும் உறைதரு மனத்தீர்!

மெய்யறிவு விளக்கத்தில் பொலிவது உண்மையும் பொறுமையுமாகும். இவ்விரண்டு அரும்பா அறிவு அறிவாகாது; வெறும் ஏட்டுக் கல்வியே யாகும். மும்மொழி வல்லுனராகிய தாங்கள் கற்றதற் கேற்ப மெய்யறிவு வாய்ந்து, உண்மையும் பொறுமையும் பெற்று இலங்குதலாலன்றோ தங்களை, அம்பாசமுத்திரம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் ஆலய ரிசீவராக அரசாங்கத்தார் நியமித்தனர்? தாங்கள் உண்மைக்கும் பொறுமைக்கும் உறைவிட மென்பதற்குத் தங்கள் முகமே சான்று பகரும்.

பிறர் நலம் பேணும் பெற்றிய!

உடல் நலம், வேலை மிகுதி யாகியவற்றைக் கருதாது குலாபிமான மொன்றே கருதி வெகு தூரத்திலிருந்து விஜயம் செய்த தங்கள் தன்னலங் கருதாத் தன்மையை நினைத்து எங்கள் உள்ளமும் குலத்தொண்டாம் போதுநலப் பணியில் எம்மை ஈர்த்துச் செல்கின்றது.

அன்பும் அருளும் எளிமையு முடையீர்!

அன்பும் அருளும் அறிவுக் கடையாளமென்பர் ஆன்றோர். தாங்கள் அன்பு நிறைந்த உள்ளத்தால், கனிந்த பார்வையால், இனிய மொழிகளால் தங்கள் ஜில்லாவில் பெரும்புகழ் பரப்பி நிற்கின்றீர்கள். தாங்கள் மேன்மையுற்ற காலத்தும் ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தி வருவது எம்மனோர் பின்பற்றற் குரியதாம்.

தாங்கள் இம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க இசைந்தமைக்கு யாங்கள் எமது மனமுவந்த நன்றி செலுத்துவதோடு, தாங்கள் ஆயுள் பெருக்கமும் அரிய வளங்களும் பெற்று இன்புற இன்னருள் பாலிக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழுத்தி இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,
வரவேற்புக் கழகத்தார்
தென்னிந்திய செங்குந்தர்
மூன்றாவது மகாநாடு.

## சமூக மகாநாட்டுத் தலைவரது பேருரை

சீரும் சிறப்பும் வாய்ந்த சகோதர சகோதரிகளே!

அறிவிலும் ஆற்றலிலும் ஆண்டிலும் முதிர்ந்தவர்கள் கூடி யிருக்கிற இம் மஹாசபையில் அக்கிராசனம் வகிக்க யான் தகுதி யுடையவன்தானோவென ஐயுறுகிறேன். ஆயினும், பெரியோர்களிட்ட கட்டளைக் கிணங்கி இப்பணியை மேற்கொண்டு, எனக்கு இப்பதவியை அளித்த பெரியோர்களுக்கு யான் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். தாங்கள் என்னைத் தகுதி யுடையவனெனக் கருதி எனக்கு அளித்த இப்பெரும் பதவியை வகித்துச் சமூக விஷயங்களைச் செவ்வனே நடத்தத் துணை புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை இதயாலயத் திருத்தி ஏத்துகின்றேன்.

நீர் வளமும் நில வளமும் நிறைந்தோங்கிய ஈரோட்டில் முதலாவது மஹாநாடும், சப்த புண்ணிய க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய காஞ்சிமாநகரத்தில் இரண்டாவது மஹாநாடும், பொய்யாமொழியார் அல்லது தெய்வப் புலவர் திருவள்ளுவநாயனார் அவதரித்த நகரமாகிய இத் திருமயிலாப்பூரில் மூன்றாவது மஹாநாடும் கூடும் வண்ணம் திருவருள் வாய்த்தது சாலவும் சிறந்ததே. முதல் மஹாநாட்டில் சமூகத் தலைமையை ஏற்றுக்கொண்ட கல்விக் களஞ்சியமான ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியார் அவர்களைத் தவிர வேறே யார் அருகர்? தெய்வ பக்தியும் விசால மனதுமுடைய ஸ்ரீமான் T. N. சபாபதி முதலியா ரவர்களைத் தவிரக் காஞ்சி மஹாநாட்டில் தலைமை வகிக்க வேறே யார் தகுதி யுடையார்? செங்குந்த உத்தமர்கள் ஏற்றுக்கொண்ட இப்பதவியை வகிக்க யான் தகுதியுடையேன் என்பது எனக்கு மிகவும் வியப்பையே கொடுக்கின்றது. ஆனால் இங்கே குழுமியிருக்கும் செங்குந்த குலாபிமானிகளாக்ஞையை சிரமேற்கொண்டும் ஏனையோர்களுடைய அனுக்கிரஹத்தைக் கொண்டும் இம் மஹாநாட்டை நடத்தி வைக்கலாமென்று யான் துணியலாயினேன்.



சில வருஷங்களாக இப் பாரதகண்டத்தில் எப்பகுதியிலும் தேசீய உணர்ச்சியும் எவ்வகுப்பிலும் சமூக உணர்ச்சியும் கிளம்பி யிருக்கின்றன. நமது சமூகமும் அக் கிளர்ச்சியில் பங்காளி யென்பதை அறிய நாம் மகிழ்கிறோம். புயற்காற்றினாலாவது மழையினாலாவது இம் மகிழ்ச்சி தடுமாறிவிடாதபடி அதைச் சாஸ்வதமாக நிலைநிறுத்துமாறு நாம் சங்கங்களையும் மஹாநாடுகளையும் கூட்டுகிறோம். ஈரோடு, காஞ்சி மஹாநாடுகளின் அவைத் தலைவர்கள், சமூகக் குறைபாடுகளை நீக்கிச் சீர்திருத்தங்களை நன்கு புகுத்தி யிருக்கின்றார்கள். இரண்டொரு வருஷங்களுக்குள் சீர்திருத்தங்கள் முற்றுப்பெற முடியாதபடியால் இன்னும் கிடக்கும் குறைபாடுகளையும் இன்னும் நிறைவேற வேண்டிய சீர்திருத்தங்களையும் எடுத்துரைத்து ஞாபகமூட்ட யான் முன் வந்திருக்கிறேன். சீர்திருத்தங்கள் சமூக முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமாகையால், காவியங்களையும், புராணங்களையும் உற்சாகத்தோடு கேட்பது போன்றே இவ் வுபந்யாசத்தையும் கேட்பீரென நம்புகின்றேன்.

செங்குந்த குலப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே! சீமான்களே! நாம் அநேக நூற்றாண்டுகளாகத் தூங்கிவிட்டோம். இப்பொழுது தான் விழித்தெழுகின்றோம். திடீரென்று நம் சமூகம் முன்னேற்றம் அடைந்துவிடுமா? குறைந்தது கால் நூற்றாண்டாவது செல்லாதோ வென யான் எண்ணுகிறேன். 5, 6 வருஷங்களுக்குள் விதவா விவாகமும் நடக்க வில்லையே, கலப்பு விவாகமும் தோன்றவில்லையே என்று விசனமடைவது உசிதமல்ல. எறும்பு ஊறக் கல்லும் குழியுமென்றபடி, விடா முயற்சியும், 'Rome was not built in a day' என்றபடி போதுமான காலமும், சுயநலம் கருதாத உழைப்பாளிகளும் முன்னேற்றத்துக்கு அவசியம். நம் முன்னேற்றத்துக்குரிய வழிகளைத் தேடுவதும், அவ்வழிகளில் மக்களைச் செலுத்த முயலுவதுமே இத்தகைய மகாநாடுகளின் முக்கிய நோக்கங்களாம்.

### ஆரம்ப கல்வி

ஆரம்ப கல்வி, உயர்தர கல்வி, தொழிற் கல்வி எனக் கல்வி மூவகைப்படும். ஆரம்ப கல்வி என்பது வாசித்தல், எழுதல் கணக்கு என்பவையாம்.

“எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.”

“கண்ணுடைய ரென்பர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.”

என்னும் நாயனார் கூற்று கல்வியின் சிறப்பை நன்கு அறிவுறுத்துகின்றது.

நாம் நமது சிறுவர்களுக்குத் தேடிவைக்கவேண்டிய பொருள் கல்வி ஒன்றேயாம். ஏனெனில்,

‘வெள்ளத்தால் போகாது,
வெந்தணலால் வேகாது, வேந்தராலும்
கொள்ளத்தான் போகாது,
கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ மிகவரிது,
காப்பதற்கோ மிகவெளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க,
உலகெலாம் பொருடேடி யுழல்வதென்னே’

என்றார் ஆன்றோர்.

கல்வி யில்லாதவன் குருடனுக்கு ஒப்பாவான். தம் சிறுவர்களைக் குருடர்களாக்கிவிடாமல், அவர்கள் எண்ணும் எழுத்துமாகிய இரு கண்களை அடையுமாறு பெற்றோர்கள் செய்யவேண்டும். இல்லாவிடில்,

“அள்ளிக்கொடுக்கின்ற,
செம்பொன்னும் ஆடையும் ஆய்ந்தணிந்து
கொள்ளிக்கும் பட்ட,
கடனுக்குமே யெனைக் கூறுசெய்தான்
துள்ளித் திரிகின்ற,
காலத்திலேயென்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே,
தந்தையாகிய பாதகனே.”

என்றே அவர்கள் கதற நேரிடும்.

“கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன்மரம்.”

என்ற முதுமொழிப்படி மரங்களாவது பல வழிகளில் உபயோகப்படுகின்றன; கல்வி அறிவு இல்லாதவன் ஒரு விதத்திலும் சற்கருமங்களுக்கு உபயோகப்பட மாட்டான் என்பது யாவரும் நன்கு அறிந்த விஷயமே. நிற்க, ஓரறிவுடைய புல், மரம், செடி முதலியவை முதல் மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஐயறிவுடையவைகளாகிய மிருகங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் யாதெனின், கல்வியினாலுண்டாகும் பகுத்தறிவு ஒன்றே விசேடமெனக் கொள்ள வேண்டும். இக் கருத்தை நோக்கியே,

“எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்.”

என்றார் தாயுமான சுவாமிகள்.

கல்வி அவசியமானபோதிலும், நமது ஜாதியில் கல்வி பரவவில்லை. புருடர்களில் 100-க்கு 90 பேர்களும், பெண்களில் 100-க்கு 99 பேர்களும்

கல்வியில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு நம் வகுப்பினர்கள் கொடுக்கிற எந்த மகஜரிலும் அநேகர் தற்குறி அல்லது கிறல் கையெழுத்தையே போட்டு வருகிறார்கள். பல கிராமங்களில் கடிதங்களை வாசிக்கத் தெரியாதவர்கள் பலரிருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலைமை எவ்வளவு பரிதாபமானது பாருங்கள். அறியாமையை அகற்றும் அருஞ்சுடர் கல்வியே. அறியாமையின் காரணம் வறுமை என்று சிலர் கூறுகிறார்கள். அது சரியல்ல. அசிரத்தையும் அலக்ஷிய புத்தியுமே தான் கல்வியின்மைக்குக் காரணமென்பது எனது பூரண அபிப்பிராயம். ஆரம்ப கல்வியைக் கற்க 4, 5 வருஷங்களே போதுமானவை. பாடசாலைகளோ, தாலுகா, டிஸ்ட்ரிக்ட் போர்டுகளால் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டும் வருகிறது. ஆரம்ப கல்வியைக் கற்க 10, 25 ரூபாய்க்கு மேல் செலவு கிடையாது. அக் கல்வியின் பலனைச் சிறுவர்கள் அடையாமலிருக்கிறது மிகவும் விசனிக்கத் தக்கதே. சிறுவர்களை 12 வயது வரையிலாவது நெசவில் முற்றும் திருப்பாமல் பாடசாலைக்கு அனுப்பி ஆரம்ப கல்வியைக் கற்க விடுவது பெற்றோர்களுடைய முதன்மையான கடமையல்லவா? சிறுவர்கள் 7, 8 வயதில் சம்பாதிக்கிற ஊதியம் போய்விடுகிறதேயென்று பெற்றோர்கள் அவர்களை நெசவில் திருப்பி ஆரம்ப கல்வியை அலட்சியம் செய்யக்கூடாது. அப்படிச் செய்துவிடில், கிடைக்கும் ஊதியமோ சொற்பம்; அறியாமையினால் விளையும் கெடுதிகளோ அளவற்றவை. பாடசாலைகளில்லாத கிராமாந்தரங்களில், வரிவசூல் செய்தோ அரசாங்கத்தாருதவியை நாடியோ அவைகளை ஸ்தாபிக்கவேண்டும். ஏனைய சமூக சகோதரர்கள் கல்வியினால் புகழும் பெருமையும் பெற்றிருக்கிற பொழுது நம் குலத்தவர்கள் பிற்போக்கிலிருப்பது இகழ்ச்சியன்றோ? குலாபிமானிகளே! தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள். கல்வியைக் கற்று முன்னணியில் வாருங்கள். ஆரம்ப கல்வியினால் வியாபாரம் செய்யலாம், வரவு செலவு கணக்குகளைக் கவனித் தறிந்துகொள்ளலாம், பத்திரிகைகளை வாசித்துக் கால, தேச வர்த்தமானங்களைத் தெரிந்துகொள்ளலாம், திருத்தமாய்ப் பேசலாம், பிறரால் ஏமாற்றப்படாமலிருக்கலாம்.

## உயர்தர கல்வி

தனவந்தர்களும் செல்வாக்குள்ளவர்களும் ஆரம்ப கல்வியோடு நிறுத்திவிடலாகாது. உயர்தர கல்வியைக் கற்கச் சிறுவர்களைக் கல்லூரிகளுக்கு அனுப்பவும் வேண்டுகிறேன்; ஏனெனில், நம் ஜாதியில் கற்றறிவாளர்கள் மிகவும் குறைவே. இவ் வருஷத்தில் ஆயிரக் கணக்கான பேர்கள் பட்டதாரிகளாயிருக்கிறபோது, நம்மினத்தவரில் 5, 6 பேர்கள் மட்டும் பட்டதாரிகளென்று நம் மித்திரன் வாயிலாக அறிகிறோம். சென்னைச் சர்வகலாசாலை சுமார் 60 வருடங்களாக ஏற்பட்டிருந்தும், பல்லாயிரக் கணக்கான அறிஞர்களுக்குப் பட்டங்கள் அளித்திருந்தும், நம் ஜாதியாரிற் பட்டதாரியானவர்கள் சுமார் 60 பேருக்கு மேலில்லை. 5,6 லக்ஷம் ஜனத் தொகையுள்ள நம் சமூகத்தில் 60 பட்டதாரிகளே இருக்கிறார்களென்பது கல்வியின் பிற்போக்கான ஸ்திதியை நன்கு விளக்குகிறதல்லவா? அத் தொகையில் சுமார் 20 பேர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர்கள்; சுமார் 20 பேர்கள் இவ்வூரிலுள்ளவர்கள்; மற்றவர்கள் இதர ஜில்லாக்களிலுள்ளவர்கள். சில ஜில்லாக்களில் பட்டம் பெற்றவர்கள் ஒருவரும் இருப்பதாய்த் தெரியவேயில்லை. நம் ஜாதியில் இவ்வளவு குறைவான பட்டதாரிகளிருப்பது எவ்வளவு பரிதாபம்! இந்த நிலையை நீக்க நாம் என்ன செய்ய வேண்டும்? உயர்தர கல்வியைக் கற்காததற்கு அசிரத்தையும் அலட்சிய புத்தியுமே முதற் காரணமாகும். வறுமை ஒருவாறு இரண்டாவது காரணமாகும். திருச்சியில் 3 கல்லூரிகளும் மதுரையில் 2 கல்லூரிகளுமிருக்கின்றன. இருந்தும் அந்த ஜில்லாக்களிலுள்ள செங்குந்தர்களில் ஒருவர்கூடப் பட்டதாரியாயில்லையென்று தெரிய வருகிறது மிகவும் விசனிக்கத்தக்கதே!

"அறம்பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்றார் குமரகுருபர சுவாமிகள். கல்வி மட்டுமிருந்தாலும் போதாது. அது பிறர்க்கு உதவியாயிருத்தல் வேண்டும்.

"அவை யஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று"

என ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

தஞ்சையிலும் நமது வரவேற்புச் சபைத் தலைவர் திருவாளர் V. இரத்தின முதலியாரவர்களைத் தவிர வேறே பட்டதாரிகளுண்டென்பது எனக்கு மிகவும் சந்தேகந்தான். ஆனால் தம் குலத்தை வெளியே சொல்ல அஞ்சுகிற சிலரைப்போலல்லாமல், நம் முதலியாரவர்கள் குல முன்னேற்றத்தில் ஈடுபடுகிற விஷயம் மிகவும் மெச்சத்தக்கதே! நம் சமூகத்தில் ஏற்பட்டிருக்கிற இவ்வுணர்ச்சி எம்பெருமானுடைய திருவருளால் நீடிக்குமானால் இன்னும் சில நாட்களில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகளைப் பார்ப்பதில் எவ்வித ஐயமுமில்லையென்றே சொல்லலாம்.

" தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றார் நாயனார். உயர்தர கல்வியினால் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்களை வகிக்கலாம்; வக்கீல்களாகலாம்; டாக்டர்களாகலாம்; இஞ்சினியர்களாகலாம்; பெரிய வர்த்தகர்களாகலாம். அப்பெரிய உத்தியோகங்களினால் ஏராளமான பொருளைத் தேடலாம்; புகழைப் பெறலாம். மேலும் குலதிலகங்களாகப் பிரகாசித்துக் குலப் பெருமையை நிலைநாட்டலாம். இத்தகைய உயர் பதவிகள் வகித்துச் சிறப்புறுதலே மக்கள் கடமை என்பது பற்றியே,

" மகன் தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல் லென்னும் சொல்"

என்றார் நாயனார்.

## தொழிற் கல்வி

உயர்தர கல்விக்குப் பொருளும் புத்தி நுட்பமும் அவசியமானவையாகையால், அது அநேக வாலிபர்களுக்குக் கைகூடுவது கஷ்டமே. அத்தகைய வாலிபர்களைத் தொழில் கற்பதற்காகத் தொழிற் கல்லூரிகளுக்கு அனுப்ப வேண்டும். செங்குந்தர்கள் பெரும்பாலும் கைத்தொழில் செய்யும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஆதியில் அவர்கள் போர் வீரர்களாக இருந்தார்களென்றும், பிறகு பாவமற்ற நெய்தற்றொழிலை ஏற்றுக்கொண்டார்களென்றும் புராணங்கள் வாயிலாக ஆன்றோர்கள் உரைத்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோமல்லவா?

"செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின்
செய்யுந் தொழிலுக்கு நிகரில்லை"

என்பதுபற்றி நாயனாரும் நெசவுத் தொழிலையே செய்து வாழ்ந்து வந்தாரன்றோ?

பண்டைக் காலத்தில் மரவுரியைத் தரித்துத் திரிந்த மனிதர்களுடைய மானத்தைக் காப்பாற்றி அவர்களை நாகரிகத் தோற்றத்திற்குக் கொண்டுவர அடிப்படையாயிருந்தது உடையே. தமிழர்களுக்குள் நாகரிகமான உடையை முதலில் உபயோகத்துக்குக் கொண்டு வந்தவர் நம் ஜாதியினரே. ஆதலால் யாவருக்கு மின்றியமையாத பெருமையைக் கைக்கொண்டமையால் நம்மவர்கள் முதலியாரென்ற உயர்வான பட்டத்தைப்பெற்றார்களென்பது எனது அபிப்பிராயம். 'ஆடையுடையவன் அவைக்கு அஞ்சான்' என்றவசனப்படி ஆடை ஒருவனுக்கு உற்சாகத்தையும் மனோ தைரியத்தையும் மேம்பாட்டையும் கொடுக்கிறது. எக்காலத்திலும் எவ் வகுப்பினருக்கும் ஆகாரத்துக்கு அடுத்தபடியாக ஆடை அவசியமானதல்லவா? அவசியமாயின் அத்தொழிலைச் செய்கிறவர்களுடைய எளிமைக்குக் காரணம் யாது? இதற்குக் காரணம் இயந்திரத் தொழில் பிரபலப்பட்டதே யாகும். அதோடு போட்டி போட முடியாமல் போனமையாலும், நமது ஜனங்களால் செய்யப்படும் துணிகளை நாமே உபயோகிக்காது பிற நாட்டுத் துணிகளை நாகரிகமெனக் கருதி உடுத்த முற்பட்டுவிட்டமையாலும், கைத்தறி நெசவுக்குக் கேடு ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை ஒழிக்கவே அவதார புருஷர் மஹாத்மா காந்தியடிகள் நெசவைத் தாமும் கற்றுக்கொண்டதுடன் ஏனையோரும் அத்தொழிலைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் உபதேசம் செய்து கதர் கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிறார்.

ஏழை மக்கள் மேற்கொள்வதால் மட்டும் இப்புனிதத் தொழில் செழித்துவிடாது. தனவந்தர்கள் பொது நிதியைச் சேர்த்து எளியவர்களுக் குதவி புரிதல் மிகவும் அவசியமாகும். கைத்தொழிற் சாமான்களை மொத்தமாக வரவழைத்து லாபங் கிடைக்கும்படி சில்லரையாய் விற்கவும், ஆடைகளை நயமாயும், பிறர் மதிப்புக்கு ஏற்றவையாயுமிருக்கும்படி நெய்யவும் நம் சமூகத்தார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நுண்ணறிவுள்ள வாலிபர்களை இயந்திர நெசவுச் சாலைகளுக்கும் மேல் நாடுகளுக்கும் புதிய முறைகளைக் கற்க அனுப்பி, அவர்கள் மூலமாய் நெசவுத் தொழிலை விருத்தி செய்யவேண்டியது அவசியமன்றோ? நாகரிகத்துக்கும் காலத்துக்கு மேற்றவாறு தொழிலை விருத்தி செய்வதன் பயனாகக் கதர் கிளர்ச்சியே சாஸ்வதமானால், நம் ஜாதியார்களிடமிருக்கிற ஏழ்மைத்தனம் அடியோடு போய்விடுமென்பதில் எவ்வித சந்தேகமுங் கிடையாது. ஒரே தொழிலில் நம் சமூகத்தினரனைவரும் ஜீவனத்தை எதிர்பார்த்திருப்பது நலமன்று. ஒரே தொழிலை ஒரு சமூகம் முழுதும் நம்பியிருப்பதும் வறுமைக்கு முக்கியமான காரணமாகும். வேளாள சகோதர சமூகத்துக்கு உரிமையான தொழில் வேளாண்மையானாலும், அவர்கள் அத்தொழிலில் மட்டும் நிற்காமல், மற்ற எல்லாத் துறைகளிலு மிறங்கிச் செல்வாக்குள்ளவர்களாயும் தனவந்தர்களாயுமிருப்பதுபோல், நம் வாலிபர்களை அவரவரது திறமைக்கும் மனப்பான்மைக்கும் தக்கவாறு, தச்சு, தையல், சிற்பம் முதலிய பற்பல தொழில்முறைகளிற் தேர்ச்சி பெறுவித்தல் வேண்டும்.

## பெண் கல்வி

ஆடவர்களுக்குக் கல்வி எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்பாலருக்கும் அது அத்தியாவசியமானது. பெண்களுக்குச் சாமர்த்தியமும், நுண்ணறிவும், புத்தி நுட்பமுமுண்டென்பதை உலக முற்போக்கை யறிந்த ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. ஆனது பற்றி,

" குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என்ற ஆன்றோர் நீதி மொழியினை உற்று நோக்குங்கால், பெண்களுக்குக் கல்வி யின்றியமையாததென்பது நன்கு புலப்படுகின்றதல்லவா? ஆனாலும் எவ்வித கல்வியுமில்லாத நிலைமையில், நம் சமூகப் பெண்களுக்கு இல்லற வாழ்க்கைக்கு அவசியமான ஆரம்ப கல்வியையாவது தற்காலத்தில் புகட்டினால் போதுமானது. கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியே பெண்பாலாயிருக்கிறபடியால், பெண் கல்வி அனாவசியமென்று கருதுவது தகுதியல்ல என்பது என்னுடைய உடன்பாடு. பெண்கள் கல்வியில்லாமலிருந்தால், குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய முறைகளை அவர்கள் எளிதில் அறிந்துகொள்ள ஏதுவில்லை. பெண்கள் கற்றிருந்தால், குழந்தைகளுக்குக் காலந் தவறாமல்

ஆகாரங்களைக் கொடுத்தும், ஓய்வு காலங்களில் இயற்கை அறிவை விருத்தி செய்தும், ஆரம்ப கல்வியையும் எளிதில் புகட்டுவார்கள். வீட்டு வரவுசெலவு கணக்குகளை ஒழுங்காய் வைக்கவும், ஆடவர்களுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கவனிக்கவும், பத்திரிகைகள் வாசித்து உலக நடவடிக்கைகளை அறியவும் திறமை யுள்ளவரா யிருப்பார்கள்.

நம் பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரை மாநகரத்தி லிருந்து நம்மை ஆண்டுவந்த பாண்டிய அரசர்களில் ஒருவரான கூன்பாண்டியர் அல்லது நெடுமாற நாயனார் என்பவர் பூர்வ கர்ம வசத்தால் சமண மதத்தைச் சார்ந்து சைவ மதத்தை அடியோடு தொலைத்துச் சமணிருளால் பாண்டிய நாட்டை மூடியபோது, கல்வி யறிவில் சிறந்தவரும், மங்கையர்க்கு அரசியார் என்று காரணத் திருநாமம் பெற்றவரும், சோழமன்னரது புத்திரியுமான அவரது மனைவியார் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருளை முன்னிட்டும், உத்தமோத்தம மந்திரிதிலகரான குலச்சிறை நாயனாருடைய பேருதவியைக் கொண்டும், சைவ சமய ஆசாரியர்களில் தலைவரான ஸ்ரீ திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வேதாரண்யத்தினின்றும் தமது பதிக்குத் தருவித்தும், சமணர்களை வாதில் வென்றொழித்தும் சைவ சமயத்தைப் பரவச் செய்து, ஸ்ரீ திருஞான சம்பந்தர் தேவாரத்திலும்,

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனார்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவது மிதுவே"

எனப் பாராட்டப்பட் டிருப்பது அனைவரும் அறிந்ததன்றோ? இவ்வம்மையார் புகழனைத்திற்கும் கல்வி யறிவே காரணம் என்பதும் பிரசித்தமன்றோ?

ஆகவே, உணர்ச்சி, தியாகம், பொறுமை, இரக்க முதலிய நற்குணங்கள் ஆண்களைவிடப் பெண்களிடம் அதிகமா யிருக்கின்றதாதலால், வாழ்க்கையில் அவர்களுடைய உதவி யின்றி யாரும் குடும்பத்தை இரக்ஷித்து நடத்த இயலாது. ஒரு குடும்பத்தின் நன்மையானது புருஷன் மனைவி இருவர்களையுமே பொறுத்திருக்கிறதே யொழிய, புருஷனை மட்டும் பொறுத்தது மல்ல, மனைவியை மட்டும் பொறுத்ததுமல்ல என்கிற நியாயம் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்திருக்க, பெண்களை அறிவீனத்தால் ஒதுக்கி வைத்திருப்பது பெருங் கொடுமை யன்றோ? கல்வி யில்லாத மாதரை மணந்து அவரோடு வாழ்ந்து வருவது குருட்டு மாட்டை வண்டியில் பூட்டி ஓட்டுவது போலாகு மன்றோ?

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு [றும்
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்று தெய்வப் புலமை ஒளவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருள் செய்திருப்பதையுங் காண்க.

ஆகையால், செங்குந்த வீரர்களே! வீரர்கள் வயிற்றில் பிறந்த சிறுவர் சிறுமிகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்வி பயிலுவிக்கப் பெரு முயற்சி செய்யுங்கள். இங்கே குழுமியிருக்கும் பெரும்பாலார் பட்டண வாசிகளாதலால் மேல் நாட்டு மாதர்களைத் தாங்கள் அடிக்கடி சந்தித்திருத்தல் கூடும். அவர்களில் எவராயினும் படியாதவர்களென்று சொல்ல இயலுமா? மேல் நாடுகளில் பெண்மக்களும் ஆடவர்களைப் போல் கல்வி கற்கிறபடியாலும் சொத்துக்களில் உரிமை பெற்றிருக்கிறபடியாலும் ஆண் மக்களுடைய வரவு செலவுகளைக் கவனிக்கவும், சமூக தேசிய கிளர்ச்சிகளில் தலையிடவும் அவர்கள் சக்தி வாய்ந்தவர்களா யிருக்கின்றார்கள். பெண் கல்வியினால் தான் மேல் நாட்டார்கள் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். பெண் கல்வி யின்மையால், நம்நாடு பிற்போக்கை அடைந்திருக்கிறது. பெண்களுக்குக் கொடுக்கல் வாங்கல்களில் யாதொரு விதமான தகவல்கள் கொடுக்காமலும், அவற்றைப்பற்றி அவர்களைக் கேட்காமலும், அவர்களுக்கு என்ன தெரியுமென்று ஏளனமாய் நினைத்து உலக நடவடிக்கைகளில் அவர்களைத் தாழ்த்தி வைத்திருக்கிறோம். அநேக குடும்பங்களில், பர்த்தா சந்ததியின்றி மனைவியையும் சொத்துக்களையும் வைத்துவிட்டுத் திடீரென் இறந்து போகிறார். பின்னர், வரவு செலவி லனுபவ மில்லாத மாதர் பொருளின் மதிப்பை அறியச் சக்தியில்லாமலும், நன்மை தீமை அல்லது கொள்ளத்தக்கது, தள்ளத்தக்கது இன்னதெனப் பகுத்தறியும் திறமை யின்றியும், மோசம் ஏமாற்று முதலியவற்றை யுடைய பந்துக்களை நம்புகிறார்கள்.

"உண்டான போதொரு
கோடான கோடி புறமுறையார்
தொண்டாக வந்து தொழுது
நிற்பார் செல்வம் தோய்ந்துவிட்டால்
கண்டாலும் பேசா ரழைத்தாலும்
வாரார்க் காசினியில்
சண்டாளரோ டுறவாகி
யிருப்பது சஞ்சலமே"

"மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோ டாகும் அவள் பிரிந்து
போம்போ தவளோடு போம்."

இப் பந்துக்களை நம்பித் தாறுமாறான செலவுகளினால் கொஞ்ச காலத்துக்குள்ளே முன்பொருளை யெல்லாம் வீணாகக் கரைத்து ஒழித்துவிட்டுத் தெருத் தெருவாக அலைகின்ற பெண்மணிகளை நாம் பார்க்கிறோ மன்றோ? அதனால் நம் கிறிஸ்துவ சகோதரர்களைப்போல, நம்மில் ஒவ்வொருவரும் வாழ்க்கைக்குரிய மனைவியரைப் பங்காளிகளாகவே நடத்திவர



வேண்டுமென்பது என்னுடைய உறுதியான தீர்மானம். நம் பெண்கள் சொத்துக்களில் உரிமை வேண்டுமென்று வாதாடுகிறார்கள். கிறிஸ்துவ, முகம்மதிய மதங்களில் உரிமை இருந்தே வருகிறபோது, நம் மாதர்களுக்கு மட்டும் ஏன் உரிமையளித்தல் கூடாது? உரிமை பெறும் விஷயத்தில், மாதர்களுக்குப் பொருளைக் காப்பாற்றும் சக்தியோடு பொருளபிவிருத்தியு முண்டாகும். மாதர்களுடைய மதிப்பும் அதிகமாகி, நம் தேயமும் முன்னேற்றமடையு மென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## வியாபாரம்

வியாபாரம் என்பது யாது? பரதேசத்துப் பொருள்களைக் கொள்முதல் செய்வதும் அவைகளை ஈண்டு விற்று முதல் செய்வதுமேதான். அத்தொழிலுக்கும் பயிற்சி வேண்டியது அவசியமே. வியாபார முறைகளையும் தந்திரங்களையும் கற்றறிந்தாலொழிய வியாபாரத்தின் உயர்ந்த பலனை ஒருவர் அடைவது மிகவும் கஷ்டமே. ஆரம்ப கல்வி ஒருவாறு கற்ற பின்னர், வியாபாரப் பயிற்சியையும் சிறுவர்கள் கற்கவேண்டும். வியாபாரத்தில் முன்னேற்ற மடையப் பயிற்சியே மூலமந்திரமாக இருக்கிறது. பயிற்சியின்றி வியாபாரத்திலுள்ள பேரவாவினால், சிலர் முதிர்ந்த வயதில் கைப்பொருளைக் கொண்டு வியாபாரஞ் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

"பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்"

என்றார் நாயனார்.

அனுபவக் குறைவினால் மற்றவர்களைப்போல அவர்கள் போதிய லாபத்தை அடையாமற் போவதுடன் சிலர் முதற் பொருளையும் இழந்து கடன்களுக் குள்ளாகிப் பூர்வீக சொத்துக்களையும் இழக்கின்றார்கள். ஆனதால், 'இளமையிற் கல்' என்ற ஒளவைப் பிராட்டியார் அருள் செய்திருக்கும் முதுமொழிப்படியும், 'சிறுமையில் கல்வி சிலையில் எழுத்து' என்னும் ஆன்றோர் வாக்கின்படியும் இளமையில் வியாபாரப் பயிற்சியை ஊட்ட வேண்டியது அவசியமே. இவ்விஷயத்தில் நாட்டுக்கோட்டையாரே சான்றுதல் காண்க.

"அருள் இல்லார்க் கவ்வுலகம் இல்லை; பொருளி
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" [லார்க்கு

என்ற நாயனாருடைய வசனப்படி, உடை, வீடு, போஜனம், ஆரோக்கியம், வாஹன முதலானவைகளுக்குப் பொருளே அவசியம். பொருளைத் தேட முக்கியமான வழி வியாபாரமே. கொஞ்ச காலத்துக்குள் ஜப்பான் தேசம் வியாபாரத்தினால் நாகரிகத்தில் உயர்வடைந்து மேன்மை பெறறிருக்கிறது. மேல் நாட்டார்களும் வியாபாரத்தினால் பொருளையும் நாகரிகத்தையு மடைந்திருக்கின்றார்கள். அத்தேயங்களில் வியாபாரங்கள் போய்விட்டால், பொருள் வருவாய் மிகவும் குறைந்து போகும்; நாகரிகமும் முற்றும் ஒழிந்துவிடும். நம் சமூகம் மற்ற சமூகங்களோடு அளவளாவ விரும்பினால் நம்மில் நூற்றுக்கு 40 பேராவது வியாபாரிகளாக இருத்தல் வேண்டும். ஆனால் யானை கன்று போடுவதுபோலும் சிற்சில இடங்களில் பிரமுக வியாபாரிகள் நம் ஜாதியில் தோன்றியிருக்கின்றார்கள். எவ்வூரிலும் எந்தத் துரைகளிலும் முன்னணியில் அவர்கள் நிற்கின்றார்கள். அவர்களே வீதிகளிலே மெத்தை வீடுகளைக் கட்டியும், சத்திரம் சாவடிகள் ஆலயங்களைக் கட்டியும், குளங் கிணறுகளை வெட்டியும் சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்தும், குக்கிராமங்களைப் பெரிய நகரங்களாக மாற்றியும் வருகிறார்கள். முனிசிபாலிட்டிகளிலும் சட்ட சபைகளிலும் அவர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வியாபாரத்தில் சிறந்தவர்களே, உலகத்தில் சிறந்த சமூகத்தார்களெனக் கருதப்படுகின்றனர். அவர்களே, ராஜ்ய பரிபாலனஞ் செய்வதில் தகுதியும் யோக்யதையு முடையவர்கள். வர்த்தகந்தான் அடிமைத் தொழிலை அறவே ஒழித்துச் சுயேச்சைக்குக் காரணமாயு மிருக்கிறது. இப் பெருமையைத் தருகிற வியாபாரத்தின் மேன்மையே மேன்மை. உலகின்கண் பெரிய தனவந்தர்கள் யாரென்று ஆராயுங்கால், மோட்டார் வியாபாரஞ் செய்யும் ஹென்ரி போர்டு துரைகளே. ஒவ்வொரு தேயத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும் பெரிய தனவந்தர்கள் வியாபாரிகளே. நமது சங்கங்களும், பத்திரிகையும், மகாநாடுகளும் நடந்து வருவது நம் வியாபாரிகளுடைய அன்பினாலும் பேருதவியினாலுமே தான். வியாபாரத்தினால் நமது சமூகம் முன்னேற்ற மடைவதோடு, நம் தேயமும் முன்னேற்றத்தை அடைகிறது. வாளை உருவினவரெல்லாம் படை வெட்டமாட்டார்களென்ற வசனப்படி, வியாபாரஞ் செய்கிறவர்களெல்லாம் வியாபாரிகளாகமாட்டார்கள்.

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி"

என்றபடி, பொருள், கல்வி, பழக்கம், வழக்கம், ஒழுக்கம், சாமர்த்தியம், அடக்கம், பணிவு, வாய்மை, பொறுமையின்மை இத்தகைய நற்குணங்களையுடைய வியாபாரிகளே வியாபாரத் துறையில் பொருளையும் நற்கீர்த்தியையும் சம்பாதிக்கின்றார்கள். 'A rolling stone gathers no moss' என்ற வசனப்படி ஒவ்வொருவரும் ஒரே தொழிலில் நின்று சாதிக்கவேண்டும். ஒரு வியாபாரத்தை நடத்திக் கொண்டிருக்கும்போது இலாபம் இல்லையெனக் கருதிப் புதிது புதிதாக வியாபாரஞ் செய்யப் புகின் ஆங்காங்குள்ள அனுபவக் குறைவினால் கேடே விளையும். அவர், 'A jack of all trades is a jack of no trade' என்ற வசனத்துக்கு ஒப்பிடப்படுவர். மேலும் வியாபாரஞ் செய்யும் முதலாளி தகுந்த உண்மையான சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வியாபாரத்தை நடத்த ஆரம்பிக்கவேண்டும். எஜமானனே வியாபாரமெல்லாவற்றையும் நடத்த முயன்றால், ஒவ்வொரு காரியத்தையும் சரிவரப் பார்க்கமுடியாது. ஒவ்வொரு பிரிவுக்கும்

தனித்தனியாக ஆங்காங்கு உண்மையான ஆட்களை வைத்து, எஜமானன் பிரதிதினமும் வரவு செலவுகளைச் சரிபார்த்து மிகவும் ஜாக்கிரதையாகவும், சுறுசுறுப்பாகவும் கண்காணிக்க வேண்டும். இல்லாவிடில், அபரிமிதமான கடனுக்குள்ளாகி, சொந்தையெல்லாம் இழந்துவிடவும் நேரிடும். செங்குந்த குல திலகர்களே! வியாபாரம் செழிப்படையவும், நீங்கள் சரியான ஊதியம் பெறவும் விரும்புவீர்களானால், வியாபார வரவு செலவுகளை ஒவ்வொரு நாளும் கவனியுங்கள்.

## வருவாயில் மிகுதி

முன் சொன்ன துறைகளி லிறங்கி, பொருள் சேர்த்தால் மட்டும் போதாது. வருவாயில் யாதாயினும் ஒரு பகுதியை மிகுதியாக்க ஒவ்வொருவரும் முயல வேண்டும். தேக ஆரோக்யம் யாவருக்கும் எக்காலத்தும் ஒரே வண்ணமாக இருக்காது. சிற்சில சமயங்களில் தேகத்துக்குப் பீடைகள் வரலாம். அகஸ்மாத்தாகக் குடும்பங்களில் கஷ்டநஷ்டங்கள் சம்பவிக்கலாம். அக்காலங்களில் அவைகளை நீக்கப் பொருளே முக்கிய சாதனமாகும். மிகுதி வைக்க வேண்டுமென்று ஒருவர்க்கொருவர் உபதேசிக்கலாம். உபதேசித்தபடி நடத்தல் மிகவும் கஷ்டமே. ஒருவர் மிகுதி வைக்க விரும்பினால், நல்லொழுக்கங்களையும் நல்லாசாரங்களையும் கைக்கொண்டு தீய ஒழுக்கங்களையும், துராசாரங்களையும் முற்றும் நீக்கவேண்டும். நம் ஜாதியார் பெயர் கைக்கொள்வர் என்பது. அதன் பொருள் நல்லொழுக்கங்களை உடையவர்களென்பதுதான். நல்லொழுக்கங்களுண்டான சமூகத்தில் நாம் ஜனித்திருக்கிறபடியால், நம்மிடமிருந்து தவறிய நல்லொழுக்கங்களைத் திரும்பவும் கைக்கொள்வதில் ஏதேனும் சிரமமுண்டென்று எனக்குத் தோற்றவேயில்லை. நமது ஜாதிப் பெயருக்கு இழிவு வாராதபடி, உண்மை, பொறுமை, ஒழுக்கம், அடக்கம், ஞாபகசக்தி, தெய்வபக்தி, பரோபகாரம், இத்தகைய அரிய பெரிய நற்குணங்களைத் தழுவி, சூது, வாது, மயக்கக் குடி, பொறாமை, துர்சகவாசமாகிய கெட்ட பழக்க வழக்கங்களை முற்றும் அகற்ற வேண்டும். நற்குணங்களினால் ஏற்படும் நன்மைகள் பல. தீய குணங்களினால் ஏற்படும் தீமைகள் பல. பண்டைக் காலத்தில் நம் முன்னோர்களெல்லாம் நீற்றுப்பாக நீரை ஆனந்தமாகப் பானஞ்செய்து, சுகதேகிகளாக வாழ்ந்து வந்தனர். நாகரிகம் நிறைந்த தற்காலத்திலோ, ஜனங்கள் நன்மையையும், சுகத்தையும் தரக்கூடிய நீற்றுப் பாகத்தை அறவே விட்டுவிட்டுக் காப்பியென்றும், தேத்தண்ணீரென்றும் புதுவகைப் பானங்களை உட்கொண்டு வருகிறார்கள். படுக்கை விட்டு எழுந்திருக்கும்போதே நாம் காப்பி என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்கிறதென்றால் காப்பிக் குடி எவ்வளவு விசாலமாகப் பரவி யிருக்கிறதென்பதை ஆராயுங்கள். காப்பியில் காபீன் என்று சொல்லுகிற விஷப்பொருள் அடங்கி யிருக்கிறதென்று வைத்ய நிபுணர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள். தேத்தண்ணீரும் அங்ஙனமே விஷவஸ்து கலந்த பானமாகிறது. அதில் டானின் என்ற விஷ வஸ்து இருக்கிறதாக அன்னோர்களால் தெரிந்துகொள்கிறோம். காப்பி தேத்தண்ணீர்களின் உபயோகத்தால், பொருள் நஷ்டமன்றியும், நல்ல தேகிகளாக இருக்கவேண்டிய நாம் நடுவயதில் பற்பல வியாதிகளுக்குள்ளாகி வாதைப்படுகின்றோம். தூக்க மின்மை, நரம்பு தளர்ச்சி, மனக்குழப்பம், நினைவு தடுமாற்றம், ஒழுங்கீனமான இரத்த ஓட்டங்கள், சீரணக் கருவிகளின் தொந்தரவுகள், நீரிழிவு முதலியவை அதனால் ஏற்படுகின்றனவென்று உண்மை யறிந்த டாக்டர்கள் கூறுகின்றார்கள். காப்பி, தேத்தண்ணீர் பானங்களை ஒழிக்க வேண்டுமென்ற கிளர்ச்சி உலகில் பரவுகிற சமயத்தில் மயக்கப் பானங்களையும் இலாகிரி வஸ்துக்களையும் அறவே நீக்கிவிட வேண்டுமென்று நான் சொல்லித் தாங்கள் அறிய வேண்டியதில்லை. உஷ்ணதேசத்தில் நாம் வசிக்கிறபடியால், வைத்திய சாஸ்திரப்படி மயக்க பானங்களும் இலாகிரி வஸ்துக்களும் முற்றும் அனாவசியமே. ஆகையால் அவைகளை அறவே ஒழிக்கவேண்டும். சூதாட்டத்தினால் நளச் சக்ரவர்த்தி யடைந்த தீமைகளை நைடதத்திலும் நளவெண்பாவிலும், பாண்டவர்கள் அனுபவித்த கஷ்டங்களை ஸ்ரீ மஹா பாரதத்திலும் தாங்கள் படித் தறிந்திருப்பீர்கள். பரதார இச்சையினால் இலங்கைக் கிறைவனான ராவணன் அடைந்த ஆபத்தையும், விராட தேசத்து அரசனுடைய மைத்துனனான கீசகனென்பவன் துரௌபதியை இச்சித்ததினால் அடைந்த துன்பத்தையும் அறிந்திருக்கலாம். ஆதலால், நான் அது விஷயத்தை வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. துராசாரங்களும், தீய ஒழுக்கங்களும், உடையவர்களால் அவர்கட்கு மட்டும் கேவலமும், வறுமையு முண்டாகிற தன்னியில் சமூகப் பெயருக்கும் இழிவு ஏற்படுகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம் என்ற வசனப்படி நம்முடைய ஊண், உடை, தூக்கம் முதலியவைகளில் மிதமா யிருக்கவேண்டும். 'Excess leads to rain' என்ற வசனப்படி எதிலும் மிதமிஞ்சினால் கேடு விளையுமென்பதே திண்ணம்.

## சிக்கனம்

நம் தேயத்தில் எங்கே பார்த்தாலும் Retrenchment என்ற பேரொலி ஆகாயத்தை நிரப்பி யிருக்கிறது. சிக்கனமென்று தெரியாத மனிதர்களிடையிலும் சிக்கனமென்ற உணர்ச்சியை அது உண்டாக்கிவிட்டது. வருவா யறிந்து அதற்குத் தக்க அளவையில் செலவு செய்தல்தான் சிக்கனத்தின் மூல மந்திரம். தொழிலாளர்களுக்குள் பொருளில்லாதவர்கள் மிகவும் குறைவே. ஆனால் மிதமிஞ்சிய செலவு செய்வதனால் அவர்கள் வறுமைக்குள்ளாகி[illegible]கிறார்கள். தினசரி செலவுகளிலும், திருவிழாக்களிலும், கல்யாண முதலிய சடங்குகளிலும், தகுதியை ஆய்ந்து ஓயாமல், அலட்சிய புத்தியினால் கடன்களை வாங்கிப் பொருளை விரயஞ் செய்கிறார்கள். அவர்கள் வருவாய்க்கு மேல் செலவு செய்யக் கூடாதென்ற மூலமந்திரத்தை மனதில்



வைத்து, ஒரு திட்டத்தை ஏற்படுத்திச் செலவு செய்தால் கடனுக்குள் அகப்பட்டுப் பரிதபிக்கச் சந்தர்ப்பமே வாய்க்காது.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்று தெய்வப் புலமை ஔவைப் பிராட்டியாரும் கூறி யிருக்கின்றார்கள். பக்கத்து வீட்டுத் தனவந்தருடைய செலவுகளை அனுசரித்து இவர்கள் நடக்கக்கூடாது. 'Cut your coat according to your cloth' என்ற வசனப்படி அவரவருடைய வருவாய்க்குத் தக்கவாறே செலவை அமைத்துக் கொள்ள வேண்டும். ஹிந்துக்கள் ஆடம்பரத்திலும் ஆபரண இச்சையிலும் பிரியமுள்ளவர்கள். கூடுமான வரை அவைகளைக் குறைத்தல் வேண்டும். குறைத்தால் தான் கடனுக்குள் அகப்படாமல் வாழ முடியும். கடனுக்குள் அகப்பட்டால், மனிதனுக்கு வேறே எவ்வித ஆபத்தும் வேண்டியதில்லை. ஸ்ரீ கண்ட பரமேசுரன் வாழும் வெள்ளியங்கிரியைப் பெயர்த்தெடுக்க முயன்றும், அக் குற்றத்தை மன்னித்து மகிழும்படி சாமகீதம் பாடியும், அப்பகவானால் வரப்பிரசாதங்களைப் பெற்றும் இலங்காபுரியை அரசாண்ட இராவணன் ஸ்ரீ மஹா லக்ஷ்மி தேவியாரை அடைய விரும்பிய ஆசையினாலடைந்த கவலையைக் கடன் கொண்டவன் கலக்கத்திற்கு ஒப்பிட்டு இராமாயணத்தில் கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பர் உவமித்திருப்பதால், அது எத்தகைமையை யுடையது என்று விளங்கும்.

"விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள் வாயில்
பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட இராமபாணம்
செருக்களத் துற்றபோது
கடங்கொண்டார் நெஞ்சம்போலக்
கலங்கினான் இலங்கை வேந்தன்"

என்றார் கம்பர்.

## தேகப்பயிற்சி

கல்வி அவசியமென்றும், வியாபாரம் அவசியமென்றும், கல்வியும் வியாபாரமும் பொருளைத் தேட அவசியமென்றும், பொருளை மிகுத்தி வைக்கச் சில முறைகளை அனுசரிக்கவேண்டு மென்றும் யான் இதுகாறும் சொல்லி வந்தேன். நாம் செங்குந்தர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். செங்குந்தரென்றால் சத்துருக்களின் இரத்தத்தினால் சிவப்பு நிறமடைந்த ஈட்டியை உடையவர்களென்று பொருள். நம் முன்னோர்கள் போர் வீரர்களெனச் சாத்திர வாயிலாக அறிகின்றோம். பாபமற்ற தொழில் நம் ஜீவனோபாய மானபடியால், நாம் நமக்குரிய வீர குணத்தை இழந்து தெய்வ பக்தியுடையவர்களாயு மிருக்கிறோம். நம்மைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு அரசாங்கத்தார் வசமே யிருக்கிறபடியால் இப்போது நாம் போர் வீரர்களாயிருக்க இயலாதானாலும், தேக ஆரோக்யத்துக்கும், துஷ்டர்கள், திருடர்கள், மிருகங்கள் முதலியவைகளிடமிருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவும், மனத்துணிவை யடையவும், வைத்திய செலவுகளைச் சுருக்கவும், பிரதி தினமும் கொஞ்ச நேரம் இந்தியக் கசரத்து, கரலாக்கட்டை முதலிய தேகாப்பியாசங்களைச் செய்து பழகிவர வேண்டும். தேக சௌக்யத்தினா லுண்டாகும் இலாபங்களை உத்தேசித்துத் தேக சௌக்யம் பொருளுக்கு ஒப்பிடப்பட் டிருக்கின்றது. பொருளினால் ஏற்படுகிற சாதகங்களை யெல்லாம் தேக ஆரோக்யத்தினா லடையலாம். தேக ஆரோக்ய மில்லாவிடில், கஷ்டங்களுக்கும் சங்கடங்களுக்கு மாட்களாகின்றோம். கஷ்டம் சாலச்சால, உயிரையும் தியாகம் செய்ய நோயாளிகள் முயல்கின்றார்கள். நம் ஜாதியார் காலையிலிருந்து சாயுங்காலம் வரை ஒரே இடத்தில் வேலை செய்து வருகிறதினால் க்ஷயரோக முதலிய தொத்து வியாதிகள் பீடிக்காம லிருக்கும் பொருட்டுச் சுத்த ஆகாயத்தில் அப்பியாசம் செய்யவேண்டு மன்றோ? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வ' மென்ற உலக வழக்கை அறியாதவர்களிருக்க மாட்டார்களென்றே நம்புகிறேன்.

## மதம்

செங்குந்தர்கள் சிவ கோத்திரத்தைச் சேர்ந்தவரென்று புராண வாயிலாக அறிகிறோம். அதில் எவ்வளவு உண்மை யிருந்த போதிலும் கடவுள் ஒருவர் உண்டென்பது திண்ணம்.

"ஒன்றென் றிரு தெய்வ முண்டென் றிரு
வுயிர் செல்வ மெல்லாம்
அன்றென் றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென் றிரு நடு நீங்காமலே
நமக் கிட்டபடி
அன்றென் றிரு மனமே யுனக்கே
யுப தேசமிதே"

என்றார் பட்டினத்தடிகள்.

அத் தெய்வத்தை நாம் சிவபெருமானென்றே கொண்டாடுகின்றோம். அப் பெருமானை ஒவ்வொரு நாளும் தியானஞ் செய்யவேண்டியது நமது கடமை. எந்தக் கடவுளும் உயிர்ப்பலியினால் ப்ரீதியடைகிறாரென்று நாம் நினைப்பது முற்றும் பிசகாகும். மாரியம்மன், சந்தனமாரி, இசக்கி வண்டிமலிச்சன், மூப்பிடாரி முதலிய இல்லாத தெய்வங்களை உண்டெனக் கருதி வந்தன வழிபாடுகள் செய்வது நம் குலத்தவர்க் கேற்றதல்ல. ஆடு, கோழி முதலிய உயிர்களைப் பலியிடுவதும் தகுதியல்ல.

"அம்மாவென அலற
ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானிட ரெல்லாம்
இன்புற் றிருக்கின்றார்

அம்மாவெனும் சத்தம்
கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நரகமெனில்
புசித்தவர்க்கென் பேசுவனே'' எனச்

சிவஞான போதத்தில் கூறிய பிரகாரம் உயிர்ப் பலியிடுவதும் புலா லுண்பதும் பெரும் பிசகென்றே தெரிய வருகிறது. இவ்விதமான அபசாரங்களை எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரத்தில் நாம் ஒழிக்கின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் குலம் முன்னேற்ற மடையச் சிவபெருமான் திருவருள் புரிவாரென்பதில் சற்றேனும் ஐயுறவேண்டியதில்லை. நம்முடைய அன்பை விருத்தி செய்யவே, அறிவுடையோர்கள் ஆலயங்களை அமைத்துள்ளார்கள். பிரதினமும் அன்பைச் செலுத்தச் சாத்தியப்படாததனால் சமூகத்தினர் அனைவரும் பகவானிடத்தில் அன்பைச் செலுத்த உற்சவாதி சுபதினங்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். செங்குந்த குல சீலர்களே! 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவைப் பிராட்டியார் திருவாய் மொழியைப் பொன்போல் போற்றி வாழ்ந்து வரவேண்டுமென்று பன்முறையும் மன்றாடி வேண்டுகிறேன்.

### ஒற்றுமை

கல்வி, வியாபாரம், தேகாப்பியாசம், மதம், ஒற்றுமை ஆகிய ஐந்தும் சமூக முன்னேற்றத்திற்குரிய முக்கிய சாதனங்களே. ஒற்றுமை கடைசி சாதனமாயினும், அது மிகவும் முக்கியமானது. எத்தேயத்திலும், எச்சமூகத்திலும், எவ்வருணத்திலும், மேன்மைக்கும், பெருமைக்கும் காரணம் ஒற்றுமையே. ஒற்றுமையினால் தான் சமூகத்தில் சமாதானமும், முன்னேற்றமும் அடைதல் கூடும். ஒற்றுமை யில்லாவிடில் கக்ஷிகளும் பிரதி கக்ஷிகளும் ஏற்பட்டுப் பொருள் செலவும், இழிவும், கேவலமும், அவமதிப்பும் ஓங்கி வளரும். செங்குந்தர்களாகிய நாம் மிகுந்த ஒற்றுமை யுள்ளவர்க ளென்பதை நான் சொல்லாமலே அறிவீர்கள். அதுவும் நம் முதியோர்களிட மிருந்து நமக்குக் கிடைத்த ஒரு பெரிய நிதியென்றே கொள்ள வேண்டும். அக் கட்டுப்பாடானது ஒவ்வொரு ஊரிலு மிருந்தே வந்தது. இப்பொழுது அது சீர்குலைந்து போய்விட்டது. பண்டைக் காலத்தில், தனித்தனி கிராமத்திலும் சமூகத்திலிருந்து நாட்டாண்மைக்காரரைத் தெரிந்தெடுப்பது வழக்கம். ஜாதியில் ஏற்படும் எவ்வழக்குகளையும் தீர்க்கவும், கோயில் சரித்திரங்களைச் சரியான முறையில் பாதுகாக்கவும், அவசியத்துக்குத் தக்கவாறு வரிகளை விதிக்கவும், நம் ஜாதிக்கும் இதர ஜாதிகளுக்குமுள்ள சிநேகத்தைக் காப்பாற்றவும், வெவ்வேறு ஜாதியாருக்குள்ள அபிப்பிராய வித்தியாசத்தைத் தீர்க்கவும், அந் நாட்டாண்மைக்காரருக்கே அதிகாரம் அளிக்கப்பட் டிருந்தது. அவரைத் தேர்ந்தெடுத்தல் நம் குல தெய்வத்துக்கு முன்னிலையில் நடந்தபடியால் அவர் தெய்வ சாக்ஷியமாக உத்யோகத்தை ஒப்புக்கொண்டு எவ்வித கக்ஷிகளுக்கும் இடங்கொடுக்காமலும், கோர்ட்டுகளுக்கு வழக்குகளை விடாமலும் உத்யோகத்தைச் சரிவரப் பார்த்து வந்தனர். அவருக்குச் சமூகத்திலிருந்து கைம்மாறு என்ன? விசேட வீடுகளில் முதல் தாம்பூலமும், ஆலயங்களில் முதல் பிரசாதமுமே. சிற்சில ஊர்களில் நம் ஜாதியார்களுடைய வீடுகளை இதர ஜாதியார்கள் வாங்கக் கூடாதென்றும், நம் குலத்தார்களே ஏற்றம் தாழ்வு கருதாமல் கொண்டு கொடுக்க வேண்டுமென்றும் கட்டுப்பாடுகள் இருந்து வந்தன. இப்பொழுதோ, அக் கட்டுப்பாடுகள் சீர்குலைய வேண்டியதன் காரணங்கள் மூத்தோர்களுக்குக் கீழ்ப்படித லின்மையும், மனம் போனபடி நடத்தலும் என்றே கூறவேண்டும். ஒற்றுமைக்கு அஸ்திவாரக் கற்கள் யோக்கியதையும் திறமையும் வாய்ந்த தலைவரைத் தேர்ந்தெடுத்தலும், அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிதலுமே. 7, 8, நபர்களுள்ள ஒரு குடும்பத்தில், தலைவனுக்கு மனைவி படியாவிடில் குடும்பம் முன்னேறுமா? சச்சரவுகளினால் பிளவு உண்டாகி, இழிவு ஏற்பட்டு, குடும்பமும் நசித்துப் போகும். அவ்விதமே, சமூக ஒற்றுமை யில்லாமையால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிற ஆயிரக்கணக்கான ரூபாய்களை வீண் விவகாரங்களில் செலவாக்கி விடுகின்றோம். ஒற்றுமை யின்மையின் காரணம் அகம்பாவமே. இந்த அகம்பாவம் அறியாமையினால் ஏற்படுகிறதென்று சொல்ல என் மனந் துணியவில்லை. அறிவாளருக்கும் அதிக மமதை உண்டாகிறபடியால், அவ் வகம்பாவமானது மனிதர்களுக்கு இயற்கைச் சுபாவமென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. அவ்வகம்பாவத்தினால் தான், தன் வகுப்பு மேல், மற்றொரு வகுப்பு கீழ் என்று பெருங் கக்ஷி கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய்களை நியாயஸ்தலங்களில் செலவழிக்கின்றார்க ளென்பதை அறிய என் மனம் உருகுகிறது. செங்குந்தர்க ளெல்லாம் தொழில் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்களில் ஏகோபித்திருக்கிறபோது, தான் மேலென்றும் மற்றவர் கீழென்றும் சொல்வது வீண் பிடிவாதமே. உலகில் எச்சாதியாரும் சமமென்ற கிளர்ச்சி நிரம்பி வருகிறபோது, இப் பிடிவாதங்க ளெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறையக் காலம் வந்துவிடவில்லையா?

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே அன்றி
ஒற்றுமை குறைந்திடில் அனைவர்க்கும் தாழ்வே"

என்ற பாரதியார் பொன்மொழியை, மனதில் உறுதியாக வைத்துக்கொள்ளுங்கள். பலர் ஒன்று கூடிச் செய்யும் விடாமுயற்சியினாலேயே ஒரு சமூகமோ, தேயமோ, மதமோ அடையக்கூடிய நன்மைகள் பற்பல உள. அவற்றில் சிற்சில பின்வருமாறு.

### பொது நிதி

அநேக கிராமங்களில் செங்குந்தர்கள் பெருங் கூட்டங் கூட்டமாக வசிக்கிறார்கள். எவ்வித நற்காரியத்தையும் முடிக்க அவர்கள் இயல்புள்ளவர்கள். வீடொன்றுக்கு மாதம் ஒன்றுக்குச் சிறு வரியை வசூலித்தாலும், நம் குலத்தில் நடக்கிற ஒவ்வொரு சடங்கிலும் சிறு தொகையை நன்



கொடையாக அளித்தாலும், சில வருடங்களுக்குள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரிய நிதியைச் சேர்த்துவிடலாம். அந் நிதியால் பாடசாலைகளைக் கட்டி, கல்வியை அபிவிருத்தி செய்யலாம்; வியாபார விருத்திக்காகக் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்கலாம்; உயர்தர கல்வியையும் தொழிற் கல்வியையும் கற்பதில் புத்தி நுட்பமுள்ள ஏழை வாலிபர்களுக்கு வெகுமதியை அளிக்கலாம்; குடி தண்ணீருக்காகக் குளம் கிணறுகள் வெட்டலாம்; ஈசுவர சேவைகளுக்காக ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்யலாம். பொது நிதியினால் செய்யக்கூடும் மற்ற பலன்களை யெல்லாம் எடுத்துரைக்கப் புகின் பெருகுமாதலால், நிறுத்திக்கொள்கின்றேன்.

### சங்கங்கள்

ஒரு சமூகம் முன்னேற்ற மடையவேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, அது எத்துறைகளில் அடையவேண்டு மென்று பலரும் யோசிக்கவும் முயற்சி செய்யவும் கூடும் கூட்டத்திற்கே சங்கமென்று பெயர். நம்மவர்களிடையில் அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன என்பதையும் அவைகள் முன்னேற்றத்திற்காகத் தீவிர முயற்சி எடுத்து வருகிறதையும் நம் அருமை மித்திரன் வாயிலாக அறிகிறோம். நமது மித்திரனுடைய விடாமுயற்சியினால் சங்கங்களின் தொகை, நாளுக்கு நாள் மேன்மேலு மதிகரித்துக்கொண்டே வருகிறது. மேலும் சங்கங்கள் பெருக வேண்டுமென்று யான் கலியுக வரதனும் ஸ்ரீ சரவணபவனுமான முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். சிரமம் பாராட்டாமல் சமூக விருத்திக்காக உழைத்து வருகிற சங்க உத்யோகஸ்தர்களுக்கெல்லாம், செங்குந்த குலப் பிரதிநிதியாக என் அன்பார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்.

### செங்குந்த மித்திரன்

பத்திரிகைகளின் அவசியமும் உபயோகமும் உங்கள் யாவருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. மித்திரன் நம் குலாபிவிருத்திக்காக ஏற்பட்ட பத்திரிகை. அதனால் நம் குலம் அபிவிருத்தி யடைந்து கொண் டிருக்கிறதையும் ஒருவராலும் மறக்க முடியாது. பத்திரிகை ஏற்படுமுன் அயல் ஜில்லாக்களி லிருக்கிற செங்குந்தர்களைப் பற்றி யாதொரு தகவலும் தெரியாம லிருந்து வந்தோம். பத்திரிகை வந்த பின்னரே நம் ஜாதியார்க ளிருக்கிற கிராமங்களையும், சமூக விருத்திக்காக ஆங்காங்கு நடக்கிற முயற்சிகளையும் நாம் இலகுவா யறிகிறோம். அன்றியும், நமக்குள் சந்தோஷ முண்டாகி ஜாதி முன்னேற்றத்தில் ஈடுபட வேண்டுமென்ற நல்லெண்ணமும் அபிவிருத்தியாகிக்கொண்டே வருகிறது. நம் மித்திரன் அழகாயும் அருமையாயும் நயமாயுமுள்ள பத்திரிகை. ஒவ்வொரு தமிழ் மாத ஆரம்பத்திலும் தூங்குகின்ற நம்மைத் தட்டி எழுப்பி 'உறங்காதேயுங்கள்; எழுந்திருங்கள்; சமூகத்துக்காக உழையுங்கள்; காலத்துக்கேற்ற வண்ணம் நடந்துகொள்ளுங்கள்' என்று போதிக்கிறது. அதன் முதல் பகுதியிலிருந்து நம் குலத் திலகமாகிய பத்திராசிரியர் திருவாளர். M. சண்முகசுந்தர முதலியா ரவர்களுடைய மனவிரிவையும், பெருமுயற்சியையும், மித்திரனுடைய நிலைமையையும் நாமறிகிறோம். இரண்டாவது பகுதியிலிருந்து, நம்முன்னோர்கள் காலந் தொட்டே அர்த்தம் தெரியாமல் நடந்து வருகிற சடங்குகள், விரதங்கள், அனுஷ்டானங்கள் இவைகளுடைய அர்த்த நிருத்தங்களை நன்கு அறிந்துகொள்கிறோம். மூன்றாவது பகுதி நம் உலக அறிவை விருத்தி செய்கிறது. நான்காவது பகுதி தேக ஆரோக்கியத்திற்குரிய வைத்திய முறைகளை உபதேசிக்கிறது. கடைப் பகுதியிலிருந்து நம்மவர்கள் பற்பல கிராமங்களில் சமூக சேவை விஷயமாய்ச் செய்து வருகிற முயற்சிகளையு மறிகிறோம். எவ்வகையிலும் அறிவைப்புகட்டுகிற மித்திரனையும் அதனாசிரியரையும் எவராலாவது மறக்கக் கூடுமா? மித்திரன் எந்நாளும் செழித்து ஓங்கி வளரும்படிக்கும், ஆசிரியருக்குக் குதூகல மதிகரிக்கும் பொருட்டும் திரள் திரளாகச் சேர்ந்து சந்தாக்களை ஒழுங்காய்க் கொடுத்து, மித்திரனை ஆதரிக்க வேண்டியது நம்மவர் கடமையன்றோ? செங்குந்தர் குடும்பம் ஒவ்வொன்றிலும் நமது மித்திரன் காணப்படும் காலமே நம் சமூகம் முன்னேற்றத்தை அடைந்துவிட்டதென்று நாம் உறுதிகொள்ளுங் காலமாகும்.

### மஹாநாடு

நாம் கூடியிருக்கிற மஹாநாடே நமது ஒற்றுமைக்குச் சிறந்த உதாரணம். நமக்குள் ஒற்றுமை யில்லாவிடில் மஹாநாட்டைக் கூட்டுவது மிகவும் அரிதே. ஒரு ஜில்லாவிலுள்ள நம் குலத்தவர்கள் மற்ற ஜில்லாக்களிலுள்ள நம் குலத்தவர்களோடு அளவளாவல் செய்யச் சந்தர்ப்பம் அளிக்கிறது இம் மஹாநாடே. நம் குலத்திலுள்ள குறைபாடுகளைச் சீர்திருத்தஞ் செய்யச் சௌகரியங்களைக் கொடுக்கிறதும் இம் மஹாநாடே. நம் சமூகத்தை ஒற்றுமையாக்கி ஒரே தலைவரது ஆட்சிக்குள் கொண்டுவருவதும் இம் மஹாநாடே. நம் ஜாதியார்களுக்கு எல்லாச் சபைகளிலும் பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தாரிடம் ஏகமனதோடு தெரிவிக்கச் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணுவதும் இம் மஹாநாடே. நம் இனத்தார்களிட மிருந்த பண்டைக்கால ஒற்றுமையை நிலைநாட்டுவதும் இம் மஹாநாடே.

### முடிவுரை

"சைவசமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி
காட்டுமிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமய நெறி
புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே."

என்றார் தாயுமான சுவாமிகள். இத்தகைய தெய்விகத் தன்மையை விளக்குகிற இம் மஹாநாட்டுக்கு யான் தலைவரா யிருந்து சொல்லிவந்த விஷயங்

களில் பெரும்பான்மையும் பெருந் தவறுகளே இருந்திருக்கலாம். ஜலம் கலந்த பாலில் ஹம்ஸ பக்ஷியானது தனிப்பாலைக் கிரஹித்துக்கொள்ளுகிறது போல் அன்பு மிக்க பெரியோர்களே! குற்றம் தள்ளிக் குணங்களைக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். இப் பெருமை பொருந்திய பதவியை எனக்கு அளித்துப் பெருமைப்படுத்திய நமது வரவேற்புச் சபையோருக்கும் இங்குக் குழுமியிருக்கிற செங்குந்த குல சிரோமணிகளுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை மற்றொரு முறையு மளித்து, நமக்குப் பெருந்துணை புரியுமாறு சர்வ வல்லமையும் சர்வ வியாபகமுமுடைய ஸ்ரீ முருகப் பெருமானை வேண்டுகின்றேன்.

“ ஆறுமுக முண்டு பன்னிரு தோளுமுண் டங்கை
[யனில்
ஏறிய வேலுண்டு வெற்றி மயூரமுண் டேவல்
[செய்ய
மீறிய சிங்கந் துரை வீரவாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமர குருபரனே.”

சுபம்! சுபம்!! சுபம்!!

---

## தென்னிந்திய செங்குந்த வாலிபர் மூன்றாவது மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவர்
## உயர் திரு. வீ. இரத்தின முதலியார் அவர்கள் B.A., B.L., அட்வகேட்
## ஜீவிய சரித்திரம்

உயர்திருவாளர் வீ. இரத்தினமுதலியார் அவர்கள் தஞ்சை ஜில்லா மாயவரத்தை அடுத்த கூரைநாட்டில் பரம்பரையாய்க் கல்வி, ஒழுக்கம், செல்வம், தருமம் முதலியவற்றில் சிறந்துள்ள ஒரு பிரபல செங்குந்த குடும்பத்தில் சோபகிருது ௵ கார்த்திகை௴ 5௨ பிறந்தார். இவரது தந்தையாரின் பெயர் உயர் திரு. சி. த. அ. வீரப்ப முதலியார். இக்குடும்பத்திற்கு மிராசும், ஜவுளி வியாபாரமும் பண்டைக்காலந்தொட்டு இருந்துவருகிறது. ஜாதி முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டுவரும் வெகு சில குடும்பங்களுள் இக் குடும்பமும் ஒன்று. திரு. இரத்தின முதலியார் அவர்கள் பாட்டனாரும், பிறகு தந்தையாரும், அதன்பிறகு தமையனாரும் மாயவரம் முனிசிபாலிடியில் கௌன்சிலராக இருந்து வருகின்றனர்.

நமது திரு. முதலியார் அவர்கள் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு வகுப்பிலும் தங்கு தடையின்றித் தேறிவந்ததன்றிப் பல தடவைகளில் முதன்மை பெற்றுப் பரிசுகளும் பெற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷையில் தேறி ஷை சங்க நற்சாக்ஷிப் பத்திரமும் (certificate) பெற்றிருக்கிறார். இதனால் இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் நல்ல பயிற்சியுள்ளவரென்று தெரிகிறது. மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலில் S. S. L. C. வகுப்புவரையில் வாசித்து 1921-௵ பரீக்ஷையில் தேறிப் பிறகு திருச்சினாப்பள்ளி செண்ட் ஜோசப்ஸ் கல்லூரியில் (St. Joseph's College) சேர்ந்து, சரித்திர ஆராய்ச்சியில் மிகுந்த ஊக்கமுடையவரா யிருப்பினும் தாய்ப் பாஷையினிடத்து வைத்துள்ள அபிமானத்தால் தமிழ்ப் பாஷையைப் பிரத்தியேக பாட (optional subject) மாகக் கொண்டு 1923-௵ இண்டர்மீடியேட் பரீக்ஷையில் திறமையுடன் தேறியவுடன், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பீ. ஏ. வகுப்பில் சேர்ந்து 1925-௵ பரீக்ஷையில் தயக்கமின்றித் தேறி பி. ஏ. பட்டம் பெற்றார். பரீக்ஷை முடிந்த பிறகு அரசாங்க உத்தியோகத்தையோ, வேறெந்த பதவியையோ சிறிதும் விரும்பாது சென்னைச் சட்ட கலாசாலையில் சேர்ந்து வாசித்துச் சட்டஞானம் பெற்றுப் பரீக்ஷையிலும் தேறி பி. எல் பட்டம் பெற்றார். திரு. முதலியார் அவர்கள் சிறுவயது முதல், சட்டத்தில் தேர்ச்சியடைந்து ஒரு பெரிய வக்கீல் ஆகவேண்டுமென்ற ஒரே எண்ணத்தை யுடையவராக இருந்தபடியால் தாம் மத்தியில் எவ்வித உத்தியோகத்திற்கும் முயற்சி செய்யவில்லை.

‘ எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்’’

என்ற நாயனார் திருவாக்கின்படி இவர் சிறுவயதிலிருந்து கொண்டிருந்த எண்ணத்தை ஊக்கங் கைவிடாது வைராக்கியத்தோடு உழைத்துவந்தபடியால் நிறைவேற்றலானார். இவரது அடிச்சுவட்டினை ஏனைய செங்குந்தச் சிறுவர்களும் பின்பற்றுவது சாலச் சிறப்புடைத்தாகும்.

சட்ட கலாசாலையில் மாணவர்கள் குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டுச் சட்டகலாசாலை மாணவர் பிரதிநிதி சபை (The Law College Students' Representative Council) என்ற சபை ஒன்று ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. இச் சபை முக்கியமான அதிகாரங்களை யுடையது. இவர் இரண்டு வருஷங்கள் இச் சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று அதில் ஒரு முக்கிய மெம்பராக இருந்ததன்றி, இவர் காலத்தில் தான் இவருடைய முயற்சியால் ‘லா காலேஜ் மேகஸீன்’ (Law College Magazine) என்ற பத்திரிகையும் ஆரம்பிக்கப்பெற்றது. அப் பத்திரிகைக்கு இவர் கூட்டுப் பத்திராசிரியராக இருந்து அதை முக்கியமான பத்திரிகைகளுள் ஒன்றாக ஆக்க அரும்பாடு பட்டுவந்தார். 1926, 1927-வருஷங்களில் முறையே எப். எல்., பி. எல். (F. L., B. L.) பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்று, மாஜி மந்திரி திரு. S. முத்தைய முதலியார் அவர்களிடம் அப்ரெண்டிஸாக இருந்து, 1928-வருஷ முதல் ஹைகோர்ட்டு வக்கீலாக



இருந்துவருகிறார். இவர் தேசப்பயிற்சியிலும் மிகுந்த தேர்ச்சி யுடையவர்.

இயற்கையாக உள்ள ஜாதீய உணர்ச்சியோடு, தேசிய உணர்ச்சியும் இவருக்கு அதிகம் உண்டு. சென்னையில் நமது தலைச் சங்கம் ஸ்தாபிக்கப்படு முன்னரே பல ஜில்லாக்களிலு முள்ள செங்குந்தர்களை ஆங்காங்குக் கூட்டி ஐக்கிய பாவம் செய்ய முயன்றவர்களுள் இவர் ஒருவர். சுமார் 6 வருஷங்களுக்கு முன் தஞ்சை ஜில்லாவில் கூடிய மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்தான் செங்குந்தமித்திரன் தோன்றியதற்கு முதற்காரணமென்று சொல்லலாம். அவ்வுணர்ச்சியைச் சிறிது சிறிதாக மற்றவர்களுக்கும் பரவச் செய்தவர்களில் இவரும் ஒருவராவர். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாக சபையின் அங்கத்தினராக இருந்துவரும் நமது திரு. முதலியார் அவர்கள் இடை இடையே நம்மவர் வதியும் இடங்களுக்குச் சென்று பிரசாரமும் செய்து வருகிறார். செங்குந்தர் கல்வி நிதிச் சிட்டுக் கமிட்டியின் காரியதரிசியாக இருந்து இப்போதுள்ள செங்குந்தர் கல்வி நிதிக்குப் பொருட்காப்பாளராக நியமிக்கப் பெற்றிருக்கிறார். இவை யன்றி, சென்னை வாலிப சங்கத்திற்கு (The Madras Youth League) ஒரு போஷகராகவும், திருமயிலாப்பூர் ஐக்கிய நாணய சங்கத்தில் ஒரு டைரெக்டராகவும் இருந்துவருகிறார்.

1928-௵ மாயவரம் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்ததன்றி, ஒரு வருஷம் மகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராக இருந்து தஞ்சை ஜில்லா பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1928-௵ சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரசுக்குச் சென்றிருந்தார். கூரைநாடு ஹைஸ்கூல் கட்டடக் கமிட்டியின் நிர்வாக அங்கத்தினரில் ஒருவராகிய இவரது முயற்சியினால்தான் கூரைநாட்டில் ஒரு ஹைஸ்கூல் சாஸ்வதமாக்கப்பெற்றது.

பல ஜில்லாக்களிலுமுள்ள செங்குந்தர்கள் இவரை நன்கறிவார்கள். வெளியிலிருந்து வரும் நம்மவர்களுக்குப் போதிய வசதியும் கூடுமான வரையில் உபகாரமும் செய்துவருகிறார்.

## வாலிப மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சொற்பெருக்கு

அவைத் தலைவர் அவர்களே! அன்பர்களே! சீமான்களே! சீமாட்டிகளே! ஏனைய சோதரர்களே!

வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகவும், இச் சென்னை மாநகரத்தின்கண் வசிக்கும் எனது செங்குந்த சகோதரர்களது சார்பாகவும் தங்கள் யாவரையும் இம் மூன்றாவது மஹாநாட்டிற்கு உள்ளம் நிறைந்த அன்போடும் வரவேற்க முன் வந்துள்ளேன். தங்கள் வரவு நல்வரவாகுக!

எனதருகாமையில் வீற்றிருக்கும் வாலிப இளஞ்சிங்கமே! சென்னை வாலிப மஹாநாட்டிற்குத் தலைமை பூணத் தாங்கள் இசைந்ததை நமது குலம் செய்த தவப்பயன் என்று கூறுவது மிகையாமோ? பால்ய பருவந்தொட்டுப் பல்லாண்டுகளாக நம் குலத்தவர்களை உறக்கத்தினின்று தட்டி எழுப்பி, சமூகத்தொண் டாற்றி வரும் செங்குந்த குலமணியே வருக!

### தேசீயமும் ஜாதி இயக்கமும்

தேசீயம் ததும்பி வழியும் இக்காலத்தில், ஜாதீய இயக்கத்தின் இடையே நாம் ஈடுபடுவது காலப் போக்கிற்கு மாறுபட்டதா என ஒரு முதற் கேள்வி பலரைச் சஞ்சலப்படுத்தலாம். ஆதித்திராவிடர்களுக்கும், மஹம்மதியர் சீக்கியருக்குங் கூட (Joint electorate), தனித்தொகுதியோ, சமூகத்தை ஒட்டிய பிரிவினை ஏற்பாடுகளோ இருத்தல் இந்திய தேசீய ஒற்றுமைக்குக் குந்தகம் என்ற பொது நோக்க முடைய வீரர்கள் கர்ஜிக்கும் இக்காலத்தில் சமூக மகாநாட்டின் விந்தை என்ன? ராஜீய இயக்கமோ, தேசீய உணர்ச்சியோ அல்லது பார்ப்பனரல்லாதார் மகாநாடோ, சுயமரியாதைப் பிரசாரமோ நம் செங்குந்தர்களிடையே தலைதூக்கும் குறைபாடுகளையும் கக்ஷிப் பிளவுகளையும் அகற்ற முடியாது. நம்மினத்தோரது இலக்ஷியங்களை நாமே அறியமுடியும்? நம் சமூகத்தினரது பழக்க வழக்கங்களை நமது இயக்கத்தால் தானே திருத்தி அமைக்க இயலும்? நமதியக்கத்தின் முக்கிய கொள்கை ராஜீய விஷயமோ, தேசீய சம்பந்தமோ என்று நினைப்பது சரியல்ல. நமது இயக்கத்தின் அடிப்படையான நோக்கம் சமூக விருத்தி, செங்குந்தர் முன்னேற்றம். (Our movement is mainly social and not political)—ஆனதுபற்றி, நமக்குத் தேசீய உணர்ச்சி அவசியமில்லை என்றோ, கூடாது என்றோ நான் ஒரு நிமிஷமேனும் சொல்லத் தயாராக இல்லை. செங்குந்த மக்கள் ஒவ்வொருவருக்கும் முதன் முதலில் தான் இந்தியன், பிறகு தான் ‘செங்குந்தன்’ என்ற உணர்ச்சி ததும்பி வழிய வேண்டும்—(Every Senguntha is an Indian first and a Sengunda next) நமது வாலிப சகோதர சகோதரிகள் தேசீய இலக்ஷியங்களையும், ராஜீய விஷயங்களையும் சமூகத் தொண்டில் உட்புகுத்தாது, சமூகத் தொண்டாற்றுமாறு மிக விநயத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் பிரதானமான நோக்கமும், செங்குந்தமித்திரனின் பெருங் கொள்கையும், நமது மஹாநாடுகளின் அடிப்படையான கருத்தும் சமூக முன்னேற்றமே (Social uplift).

### கல்வி

இச் சமூகத்தொண் டியற்றுவதற்குக் காரணபூதமாயுள்ளது கல்வி எனவும், அக்கல்வியின் வழியே

அறிவின் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்து, எப்பொருள்களின் உண்மையையும் ஆராய்ந்து, அதன் பலன்களை நாம் அனுபவிப்பதன்றி, ஏனைய சகோதரர்களை அறிந்தனுபவிக்கச் செய்து இன்புறுதலே ஒவ்வொரு செங்குந்தரின் முதற்கடமையுமாம். இக்கல்வி பல்வகைப்படு மெனவும், ஆரம்ப கல்வி ஒவ்வொரு ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் இன்றியமையாத தென்றும், உயர்தர கல்வி பயில வசதி உள்ளோர் அதன்வழி யடைதல் சிறந்த தென்றும், ஏனையோர் தொழிற் கல்வியை விருத்தி செய்து, தமது குடும்பமும் சமூகமும் தேசமும் விருத்தி யடைய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்தல் சாலச் சிறந்ததென்றும் யான் சொல்லாமலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

> “தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார்”

## வாலிபர்களது நிலையும் கடமையும்

வாலிபர்கள்தாம் சமூகத்தின் அஸ்திவாரம். வாலிபர்களால் செய்து முடிக்க முடியாத காரியம் என்னே? உலகத்திலுள்ள ஒவ்வொரு தேச சரித்திரத்தையும் சற்று ஆராய்வோமாயின், நம் வாலிப சகோதரர்களது அழியாப்புகழ் விளங்கும். ஈஜிப்து தேசத்தின் விடுதலையும், ஜர்மானிய தேசத்தினது பெரும்பலமும் நமது வாலிப சிங்கங்களினா லல்லவா? கமால் பாஷாவின் தலைமையைக் கொண்ட துருக்கி வாலிபர் சங்கமல்லவா பிறகு அங்கோரா கவர்ன்மெண்டாக மாற்றப்பட்டது? பிரான்சு தேச சரித்திரத்தையும் சற்றுக் கவனியுங்கள். ஜனநாயக விதையை விதைத்த நெப்போலியன் சேனை தேசாபிமான மிக்க வாலிபர்களாலேயே தானே அமைக்கப்பட்டது?

பிறகு பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட French Revolution முதலிய புரட்சிகளுக்கு அடிப்படையாக இருந்தவர்கள் யாவர்? அயர்லாந்து தேசம் சுதந்தரம் அடைந்ததும், பிரிட்டிஷ் சர்க்காரின் ஏகாதிபத்திய வாழ்வும், ஆப்கானிஸ்தானத்தின் புரட்சியும் வாலிபர்களால் அல்லாது முடியுமா?

நம் வாலிபர்களுக்கு முதியோர்களிடம் உலாவும் குறுகிய நோக்கமும், குருட்டு வழக்கமும், பேராசையும் கிடையா. பொறாமையும், அழுக்காறும் இளைஞர்களைத் துன்புறுத்தவில்லை. களங்கமற்ற மனதும், விசால நோக்கமும், கடவுளின் வல்லாயுதமான அன்பும் வாஞ்சையும் இளைஞர்களுக்குப் பிறவிச் சோதரர்கள். ஆனதுபற்றி, வாலிபச் சகோதரர்களே! விடாமுயற்சியுடனும், பேருக்கத்துடனும் நீங்கள் தொண்டாற்றுதல் வேண்டும்.

## ஒழுக்கமும் ஏனைய கடமைகளும்

தொண்டாற்றுதலுக்கு அவசியமாயுள்ளது ஒழுக்கமேயாம் என்று சொல்லத் தேவை இல்லை. “ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.” நம்மை நாம் சீர்திருத்திக்கொண்டுதான் ஏனையோரைச் சீர்திருத்தல் முடியும். ஒழுக்கத்தின் தன்மை, ஒழுக்கத்தின் மேன்மை, ஒழுக்கத்தின் இலக்ஷியம் இன்னவை யெனப் பாகுபடுத்திப் பல துறைகளிலும், உபந்யாச மூலமாயும், பத்திரிகை மூலமாயும், பிரத்தியக்ஷமாயும் உங்கள் யாவருக்கும் காட்டியுள்ள பெரியார் நம்மிடையே வீற்றிருக்கின்றனர். நம் சமூக இயக்கத்திற்குப் பல நக்ஷத்திரங்களுக்கிடையே பூரண சந்திரன் போல் இலங்கும் நமது தலைவர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் நீடுழி காலம் வாழ்க!

உள்ளும் புறமும் பரிசுத்தமான செய்கைகளும், வாழ்க்கையில் மனசாக்ஷிக்கு விரோதமில்லாத மேலான காரியங்களும் செய்தலே ஒழுக்கம். தீயதை அறவே ஒழித்தலும், சற்கருமங்களைச் செய்தலுந்தான் உத்தமமென்பது பழைய கதை. அவைகளை நான் விஸ்தரிக்க உடன்படேன். தீய ஒழுக்க முடையவர்களை நாம் சீர்திருத்த முடியாவிடின் பகிஷ்கரிக்கவும் வேண்டும்.

## சீர்திருத்தம்

நமது நடை உடை பாவனைகளைக் காலப் போக்கிற்கும் நமது சௌக்கியங்களுக்கும் தக்கவாறு மாற்றிக்கொள்ளுதலும், முற்போக்கடைந்த சமூகத்தினரோடு சமமாகவும் தாராளமாகவும் ஊடாடுதலும் நம் மிளைஞர்களது பேரவாவாக இருத்தல் வேண்டும். பிசகு என்று தெரிந்தும், பல புராதனமான கெட்ட பழக்க வழக்கங்களை நடை முறையில் அனுஷ்டித்துப் பிசாசுகள் போல் அவைகளைப் பிடிவாதமாகக் கொண்டாடுதல், நம் செங்குந்தர்களிடை தான் வேரூன்றிக் கிடக்கின்றது. வீரத்தை அடிமை செய்வது சரியா? “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” என்ற தொல்காப்பியரது மொழிகளின் தாற்பரியம் என்னே?

கல்யாணம் முதலிய விசேஷங்களில், பாக்கு வழங்குதல் சிதம்பரம் நாட்டிலிருந்து ஆரம்பித்தால் என்ன? அல்லது நாடு மில்லாது தலைக்கிராமு மில்லாது ஒரு வெறுங் கிராமத்திலிருந்து வந்தவருக்குக் கொடுத்தால் என்ன விபத்து நேர்ந்துவிடும்? பாக்கு முன்பின் வழங்குவதால் எத்தனை விசேஷங்களில் சண்டை? எத்தனை தடவை அடிதடி, கக்ஷி பிரதிகக்ஷிகள்? கோயிலின்கண் விபூதி வழங்குகையில் முன் இருக்கும் சாதாரண மனிதனுக்கு வழங்கிவிட்டால் யாருக்கு என்ன மோசம் நேர்ந்துவிடும்? இவருக்குத்தான் முதலில் வழங்க வேண்டும், இன்னாருக்குத்தான் இறுதியில் கொடுக்கவேண்டும் என்னும் கட்டளை எந்த இதிகாசத்தில், எந்த மனுவோலைகளில் பிரதிசெய்யப்பட் டிருக்கின்றது? எந்தச் சட்டமும், எவ்விதத் திட்டமும் மனிதனது சௌகரியத்தையும், சமூகத்தின் பொது அபிப்பிராயத்தையும் ஒட்டி நடப்பதாகவே இருத்தல் வேண்டும். ஒரு காலத்திலுள்ள ஒரு சில பழக்க வழக்கங்கள் எக்காலத்திற்கும் எம்மாறுதல்களுக்கும் எங்ஙனம் பொருந்த முடியும்? ‘Old order changeth yielding place to new’ என்னும் ஆங்கில அமுத மொழி எட்டிச் சுரைக்காயா?



மாயவரத்திற் கருகாமையிலுள்ள நவீன நாகரிகம் மீதுற்ற கும்பகோணத்தில் சுமார் பத்து நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை அறிய நீங்கள் யாவரும் வியப்பெய்தலாம். சாப்பிட்ட பிறகு தாயாதி இறந்த சமாசாரம் தெரிந்தால் க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டுமா? அப்படி க்ஷௌரம் செய்து கொள்ளாமல் ஸ்நானம் செய்தால் தீட்டுப் போகுமா? இவ்விரண்டு அரிய பெரிய தேச நெருக்கடியான விஷயங்கள் அந்நகர் வைதிகப் பிசாசுகளிடையே புகுந்து மிகுந்த கக்ஷி வாதத்தைக் கிளப்பி யிருக்கின்றன. ஒரு சாரார் க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டியது அத்யாவசியமெனவும், ஸ்மிருதிகளின் ஆதாரம் அப்படித்தானெனவும் வாதிக்கின்றார்கள். மற்றொரு சாரார், அது அவசியமில்லை யென்றும், பகற் போஜனம் செய்த பிறகு க்ஷௌரம் செய்துகொள்ளக் கூடாதென்றும் எதிர்வாதம் புரிகின்றார்கள். இந் நிலைமையில் கோயிலுக்குள் பிரவேசித்துச் ‘சடாரி’ முதலிய மரியாதைகளை வலையப்பேட்டை வித்வான் ஸ்ரீசோமாச்சார் ஸ்வாமிகள் பெற்றுக்கொண்டதாயும், அதனால் கோயிலுக்கு அசுத்தம் ஏற்பட்டுவிட்டதென்றும், ஸம்ப்ரோக்ஷணை செய்ய வேண்டுமென்றும், அய்யங்கார் தெரு ஸ்ரீ தாதாசாரியர் என்னும் ஒரறிஞர் சொல்லித் தர்மகர்த்தாக்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கின்றார். வியாஜ்ஜியம், சென்னைக்கு அருகாமையிலுள்ள செங்குந்தர் பேட்டையாகிய சைதாப்பேட்டை காரணி வழக்கைப் போல, இங்லாந்திலுள்ள (Privy Council) பிரிவி கௌன்சிலால் கூட முடியுமென எதிர்பார்க்கப் படவில்லை. தாயாதியை இழந்தவன் க்ஷௌரம் செய்துகொண்டு ஸ்நானம் செய்தால் என்ன? க்ஷௌரம் செய்யாது குளத்திலுள்ளேயே தானும் தாயாதியைச் சந்தித்தா லென்ன?

## வாணிபமும் செல்வ விருத்தியும்

நமது குலத்தோர் நெசவுத் தொழிலில் மட்டும் ஈடுபடுதல் சரியல்ல. கல்விப் பொருள் எப்படி அத்யாவசியமோ, அது மாதிரியே செல்வப் பொருளும் ஒவ்வொருவராலும் விரும்பற்பாலதே. செல்வ நிலை யிருப்பின், மற்ற யாவும் தாமாக உதித்திடுமென்றே திண்ணமாகச் சொல்லுவேன். நமது செங்குந்தர்களின் வறுமை நிலையையும், பஞ்சைக் கோலத்தையும், சீர்கேடான ஸ்திதியையும் காணுந்தோறும் மிகவும் வருந்த வேண்டி யிருக்கின்றது. உயர்தர கல்வி பயிலச் சக்தி யுடையோர் மட்டும் அதனில் ஈடுபடலாம். ஆனால், பெற்றோர்களை வருத்தி, இருப்பதையும் இழந்து, பி. ஏ., எம். ஏ. என்ற வெறும் பட்டங்கள் பெற்று, பிறகு விசனித்தலைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆனதுபற்றி, ஏனையோர் தொழிற்கல்வி முதலிய துறைகளில் ஈடுபட்டு, புதிய தொழில் முறைகளைக் கற்று, நவீன வழிகளில் ஊதியம் சம்பாதித்தல் வேண்டும். ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்றால், தாய் தந்தையர் சம்பாதித்த சொத்தை விரயம் செய்வதல்லவே. வாணிபத்தை விருத்தி செய்வது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

சென்ற வாரம் நடந்த இந்திய சுதேசிப் பொருட்காட்சியில் சர் விசுவேசுவரையா செய்த பிரசங்கத்தில் குறிப்பிடத் தக்க விஷயம் ஒன்றுண்டு. ஜப்பானியர் இந்தியாவிலிருந்து பஞ்சையும், ஐரோப்பாவிலிருந்து யந்திரங்களையும், அமெரிக்காவிலிருந்து கடனாகப் பணத்தையும் வாங்கி, தங்கள் நாட்டில் ஜவுளிகளை உற்பத்தி செய்து இந்தியாவிலும், சீனாவிலும் விற்றுவிடுகிறார்கள். அதனால் ஜாப்பானிய வியாபாரிகளுக்குத் தக்க ஊதியமும், தொழிலாளிகளுக்கு வேலையும் கிடைக்கின்றன. ஆனால், இந்தியர்களுக்கு நஷ்டமும், வேலை யில்லாத் திண்டாட்டமுமேதான் மிச்சம்.

நமது செங்குந்த மக்களுக்குக் காஞ்சி மஹாநாட்டின் தலைவர் திரு. தி. நா. சபாபதி வள்ளலார் அறிவுறுத்திய விஷயத்தை மறுமுறையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். நாம் உடுக்கும் உடைகள் கூடுமானவரை நம்மினத்தவர்களால் தயாரித்து நெய்யப்பட்ட துணிகளாகவே இருத்தல் வேண்டும். நம்மவர்கள் ஆடைகளை விற்பனையாக்க வியலாது தெருத்தெருவாய் அலைந்து திரிந்து கஷ்டப்படும் சமயத்தில், அந்தத் துணியை விட்டுவிட்டு ஏன் அன்னிய ஆடையை வாங்க வேண்டும்? இது சந்தர்ப்பத்தில், செங்குந்த வியாபாரிகளுக்கு ஒரு வேண்டுகோள். ஒவ்வொரு வியாபாரியும், கம்பெனிக்காரரும் நம்மினத்தவர்களால் தயாரிக்கப்பட்ட துணிகளில்தான் வியாபாரம் செய்ய வேண்டுமென்றும், கூடிய வரையில் நம்மினத்தவர்கள் சரக்கையே கொண்டு முதல் செய்ய வேண்டுமென்றும், அதிகம் கஷ்டமேற்படும் தருவாயிலன்றி ஏனைய காலத்தில் செங்குந்த தறிகாரர்களுக்கே வேலை கொடுத்து உதவவேண்டுமென்றும், பன்முறையும் கேட்டுக்கொள்கின்றேன். நமது சமூக இயக்கத்தின், செங்குந்த பிரசாரத்தின், அடிப்படையான நோக்கம் முன்னேற்றமன்றோ? நம்மவர் நம்மவரையே கைதூக்காவிடில், இம் மகாநாடுகளின் பலன் என்னவென்று தங்களையே தாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

செங்குந்த சீமான்களே! கனவான்களே! கேளுங்கள். வெறும் பேச்சில் என்ன இருக்கிறது? நம்மவருக்கு அறிவு வெளிச்ச மிகுந்த ஞானமும் கல்வியும் வேண்டும். ஒழுக்கமும் தொண்டாற்றுதலும் அவசியம். அவற்றோடு சமூக உணர்ச்சியும், பரோபகார சிந்தையும் நம்மைப் பிடித்திழுக்க வேண்டும். இவைகளுக்குக் காரணமாயுள்ள தேகப் பயிற்சியும், உடல் வலிவு, அறிவு முதிர்ச்சியும் செங்குந்த வாலிபர்களுக்கு இன்றியமையாதன. ‘சுவர் இருந்துதானே சித்திரம் எழுதல் வேண்டும்?’

இச் செயல்களுக்கெல்லாம் காரணகர்த்தாவாயுள்ள கடவுளையே ஒவ்வொரு செங்குந்தரும் தினம் தினம் வாழ்த்துதல் நலமன்றோ? கடவுள் தியானம், இருதயத்தைச் சுத்தப்படுத்துவதன்றி

மனோ சஞ்சலங்களை ஒழித்து, பேரின்பத்தில் மூழ்த்துகின்றது. அன்பே உருவமாயுள்ள அப்பிரானை வழிபட்டு நாம் நமது கடமையைச் செவ்வனே செய்து முடித்தல் கண்ணபிரான் கீதையில் உபதேசித்தவாறு இம்மையிற் பலன் அளிப்பதன்றி, மறுமையிலும் நம்மை நல்வழிப்படுத்துமன்றோ?

---

தென்னிந்திய செங்குந்த வாலிபர் மூன்ருவது மகாநாட்டுத் தலைவர்

## உயர் திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. B.L.

### சரித்திரக் குறிப்பு


உயர் திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A.,B.L. திருநெல்வேலி ஜில்லா வீரவநல்லூரில் மிகுந்த செல்வாக்குள்ள செங்குந்த குடும்ப மொன்றில் 1902-ஆம் ௵ அக்டோபர்மீ பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சுப்பிரமணிய முதலியார்; தாயார் பெயர் முத்தம்மாள்.

இவர் இளமைப் பருவத்தில் வீரவநல்லூர் மிடில் ஸ்கூலிலும் பின்னர்த் திருநெல்வேலி சி. எம். எஸ். காலேஜிலும் வாசித்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கிணங்க இவர் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவராக நின்று தவருமல் முதல் பரிசு பெற்று வந்தார். இவர் ஆங்கிலக் கல்வியில் பயில்வதற்குக் காரணபூதராயிருந்தவர் இவரது சிறிய தந்தையாராகிய ஆவுடைய முதலியாரே யாவர். சென்னை கிரிஸ்துவ கலாசாலையில் பி. ஏ. வகுப்புப் படித்துத் தேர்ச்சி யடைந்து, பின்னர்ச் சென்னைச் சட்ட கலாசாலையில் படித்து 1928-ஆம் வருஷத்தில் பி. எல். பட்டம் பெற்று அவ்வருட முதற்கொண்டு திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டில் வக்கீலாக இருந்து வருகிருர்.

ஏனையோரைப்போல் கல்லூரியில் படித்த படிப்போடு நில்லாமல், கல்லூரியை விட்ட பிறகு வான சாஸ்திரம், சோதிடம், முதலியவற்றிலும் பயின்று மிகுந்த தேர்ச்சி யடைந்திருக்கிருர். நமது 'மித்திரன்' நான்காம் தொகுதியில் வானசாஸ்திர ஆராய்ச்சியைப்பற்றிய இவரது வியாசங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதை அன்பர்கள் அறிவர். அவையே அச் சாத்திரத்தில் இவர் எவ்வளவு விற்பன ரென்பதையும் எவ்வளவு ஊக்கத்தோடு ஆழ்ந்து ஆய்ந்துள்ளா ரென்பதையும் நன்கு விளக்குகின்றன. கலாசாலை வகுப்பில் படித்த காலத்தில் இவர் சர்வகலாசாலை இராணுவப் படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் பெற்றுள்ளார். துப்பாக்கிப் பயிற்சியில் இவர் மிகவும் கைதேர்ந்தவர் என்பது இவர் பெற்றுள்ள விசேஷப் பரிசுகளால் நன்கு விளங்கும்.

வேட்டைக்குச் சென்ற கண்ணப்ப நாயனுர் திருக்காளத்தி மலை யேறுங்கால், 'நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை யேறத் தாமும், பேணு தத்துவங்க ளென்னும் பெருகு சோபான மேறி' என்று நாணனுகிய தமது தோழனும், மலைமேலேறிச் சிவபிரானிடத்துச் செலுத்த இருந்த பேரன்பும் முன்னே செல்ல நாயனுர் பின்னே சென்ருர் என்னும் பொருள்படச் சேக்கிழார் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது போலக், குலாபிமானம் முன்னே தோன்ற நமது முதலியார் அவர்கள் அதன் பின்னே தோன்றினுர் என்றே சொல்லவேண்டும். அதாவது, குலாபிமானம் இவரது விசேஷப் பிறவிக் குணங்களுள் ஒன்றேன்றே சொல்லலாம். இவர் சென்ற 10 வருஷங்களாகத் திருநெல்வேலி ஜில்லாவில் நம்மவர் வதியும் கிராமங்கள் தோறும் சென்று பிரசாரம் செய்தும், சங்கங்கள் நிறுவியும், நம்மவர்களிடையே கிளர்ச்சியையுண்டாக்கி, ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் வளர்க்க அரும்பாடு பட்டு வருகின்ருர். நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகச் சேலம், கோயம்புத்தூர், மலையாளம் முதலிய ஜில்லாக்களில் குல முன்னேற்றம் கருதிப் பிரசாரம் செய்துள்ளார். முதலியார் அவர்கள், குலாபிமானத்தோடு ஆழ்ந்த கருத்தும், வாய்மை, பொறை, இன்சொல் முதலிய நற்குணங்களும், நிரம்பப் பெற்றவர்.

திரு. முதலியார் அவர்கள் தமது பிறப்பிடமாகிய வீரவநல்லூர்ச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்திற்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து வருவதோடு அச்சங்கத்தின் தலைவராகவும் இருந்து வருகிருர். ஈண்டு இச் சங்கத்தைப் பற்றியும், அதன் ஸ்தாபகரைப்பற்றியும் ஒரு சிறிது கூறவேண்டியது அவசியமென்றே தோன்றுகிறது. செங்குந்த சிரோமணியாக விளங்கிய காலஞ் சென்ற திருநெல்வேலி பிரபல வக்கீல் வ. பி. பூமிநாத முதலியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற பல சங்கங்களுள் இவ் வீரவநல்லூர் சங்கமும் ஒன்ருகும். இது 1817-ஆம் வருஷத்தில் ஸ்தாபிக்கப் பெற்று இன்றுவரை இடைவிடாது ஊக்கத்துடன் குலத்தொண் டாற்றி வருவதோடு, ஆண்டு விழாக்களை ஜில்லா மகாநாட்டு முறையில் சிறப்புடன் நடத்தி வருகின்றது. இது, அப்போதைக் கப்போது தோன்றி மறைந்து போகும் பல சங்கங்களைப்போ லல்லாமல் சென்ற 14 வருடங்களாக இடைவிடாது உழைத்து வரும் சங்கமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலேயே செங்குந்த மக்களிடைக் குலாபிமான முதலிய சிறந்த குணங்களைப் பரப்பி, அறிவுச்சுடர் கொளுத்திக் குலத்தீபம் போல் விளங்குவது இச் சங்கமொன்றே. இச் சங்கத்தின் உழைப்பின் பயனுகப் புலால் மறுத்தல், சைவாசாரம் முதலியவற்







திரு. S. K. விநாயக முதலியா ரவர்கள், B. A., B. L.

மூன்றாவது மகாநாட்டுக்கு ஐம்பது ஐம்பது ரூபாய் வழங்கிய நன்கொடையாளர்







றை இவ்வூரில் பெரும்பாலோர் மேற்கொண்டொழுகி வருகின்றனர். தன்னந்தனியரா யிருந்து தமக்கிருந்த வேலைகளிடையே குலத்தொண்டையும் மேற்கொண்டு திருநெல்வேலி ஜில்லாவில் சீர்திருத்த வேலை செய்து வந்த பூமிநாத முதலியார் அவர்கள் இளமையிலேயே மண்ணுலக வாழ்க்கையைத் துறந்தது நமது துர்ப்பாக்கியமென்றே சொல்லவேண்டும். இப்போது அவர் இருப்பாராயின் நமது இயக்கத்திற்குப் பெருந்துணையா யுதவுவார் என்பது திண்ணம். அப்பெரியாரது தொண்டு மறைந்துவிடாதபடி உழைத்து வரும் திரு. சங்கர சுப்பிரமணிய முதலியார் அக்குறையைப் பெரிதும் நிவர்த்திக்கிறா ரென்றே சொல்லவேண்டும்.

திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் B. A., B. L. அவர்கட்கு

வரவேற்புக் கழகத்தார் வழங்கிய

# வ ர வே ற் பு ந ல் லு ரை

**ஆங்கிலமுந் தென்மொழியும்**

**அரும்பெறு நல் அறிவாளா !**

மக்கள் உடல் வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்கும் உறுதுணை செய்வது கல்வி. நமது சமூகம் கல்விச் செல்வத்தை நாளடைவில் இழந்துவிட்டது. கல்வியின் வளங் குன்றினமையால் நம்மவரிடையே நிறைந்திருந்த அறிவும் வீரமும், செழுமையுங் கொழுமையும், வளனும் நலனும் பிறவும் மெல்ல மெல்ல நெகிழ்ந்து நெகிழ்ந்து சுருங்கிச் சுருங்கிச் சிறுகலாயின. ஆகவே இந்நாள் சிறுமையுற் றிருக்கின்றோம். நாமிழந்த இந்நலன்களையும் அவற்றிற்கு அடிப்படையான கல்வியையும் மீண்டும் பெறுதற்காக முயலும் இவ்வேளையில் கல்விக் களஞ்சியமாய தங்களைப் போன்ற ஒரு சிலர் எம்முன்னே காட்சி தருவது எம்மனோர்க்கு இன்ப மூட்டுகின்றது. தாங்கள் ஆங்கில மொழி கற்று உயர்ந்த பட்டம் பெற்றதோ டமையாது தாய்மொழியாம் தமிழை ஆழ்ந்து ஆய்ந்து வருகின்றீர்கள். ஆங்கிலம் பயின்ற தமிழ் மக்களிடம் ஆங்கில மொழி வீறுடன் ஆட்சி பெற்று நிற்பது போன்று தாய்மொழி இருப்பதில்லை யென்றும், தாய்மொழியில் பேசுவதற்கும் இயலாத நிலையினைச் சிலர் எய்துகின்றன ரென்றும் கூறுங் கூற்றைத் தாங்கள் பொய்ப்பித்து, தமிழிடத்து நிறைந்த பற்றுக்கொண்டு, அதிற் பயின்று, அதன் மூலம் வான நூல், சோதிட நூல் முதலியனவுங் கற்றுத் தேர்ச்சி யுற்றிருக்கிறீர்கள். தங்களைப் பின்பற்றி இங்குக் குழுமியுள்ள இளைஞர்கள் மேன்மை யுறுவார்களென எண்ணுகின்றோம்.

**மாசிலா தோளிரும் மாண்புடை மணியே !**

'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்ற அறிஞர் உரைக்கேற்பத் தாங்கள் பெற்ற மெய்யறிவின் துணை கொண்டு தீமையெலாங் கடிந்து, இன்சொல், அன்பு, பொறுமை யாதிய நற்குணங்களை யேற்று அனைவர் அன்பிற்குந் தாங்கள் பாத்திரமா யிலங்குகின்றீர்கள். அவ்வன்பின் பெருக்கன்றோ இளமையிலேயே பொதுநலத் தொண்டாற்றத் தங்களை ஈர்த்துச் சென்றது?

**பொதுநலப் பணியே பணியெனப் பூண்டோய்!**

பொதுநலப் பணியில் தங்கட்குள்ள ஆர்வ மிகுதியினால், பல்லாற்றானும் நமது சமூகத்தை அலைத்து வரும் அழுக்காறு கட்சிப் பிணக்குகளாம் மறத்துறைகளை வீழ்த்தி, ஒற்றுமை முதலிய அறத் துறைகளை நிலைபெறுத்தத் தாங்கள் இளமை முதல் முயன்று திருநெல்வேலி ஜில்லா முழுதும் பல கிளைச்சங்கங்களை நிறுவினீர்கள். தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகச் சேலம் கோயமுத்தூர் மலையாளம் முதலிய இதர ஜில்லாக்களிலும் குல முன்னேற்றங் கருதி உடல்நலங் கருதாது உழைத்து வந்தீர்கள். இளமை முதல் சமூகத்தினிடம் தங்கட்குள்ள தணியாக் காதலானது அப் பணி புரிய விரதம் பூணவெங்களையுந் தூண்டுகின்றது.

**சோதறு துணிநிறை தூலக்கோழுந் தனையாய் !**

ஒருவனது வாழ்விற்கு இளமை அடிப்படை. இவ் வள நிலத்திலேயே வாழ்விற்குரிய விதைகளெல்லாம் விதைக்கப்பட வேண்டும். நம்மவர் முன்னேற்றமாம் பாதையை உணர்த்தத் தோன்றிய இளஞாயி றனைய தாங்கள் அன்புப் பெருக்கையும் ஒற்றுமை யுணர்வையுந் தோற்றுவித்து, அஞ்சா நெஞ்சும் உறுதியுங் கொண்டு தொண்டாற்றுதற் கேற்ற கிளர்ச்சியினை இளைஞர்களிடையே பரப்ப எண்ணி, இவ்வாலிபர் மகாநாட்டின் தலைமையினை ஏற்றிருக்கிறீர்கள். இவ்வொரு செய்கைக்கு எமது அன்பு கனிந்த நன்றியை அறிவித்தலோடு தங்கட்கு ஆயுளும் செல்வமும் அளவின்றிப் பெருகவும், நோயின்றி மேனி மிளிரவும், புகழ் பொங்கி வளரவும், புத்திரப் பேறு முதல் பல நலனும் சிறக்கவும் அருள் புரியுமாறு என்றும் இளையோனாய்த் திகழும் எமது முருகப்பெருமானை இறைஞ்சி வழிபடுகின்றோம்.

இங்ஙனம்

வரவேற்புக் கழகத்தினர்,

தென்னிந்திய செங்குந்த வாலிபர்

மூன்றாவது மகாநாடு.

# வாலிபர் மகாநாட்டுத் தலைவர் சொற்பெருக்கு

அன்பு மிக்க இளைஞ சகோதரர்களே !

தென்னிந்திய செங்குந்த வாலிபர் மூன்றாவது மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் பணியை அன்பின் மிகுதியால் நீங்கள் எனக் களித்திருக்கிறீர்கள். மக்களது முதற்கடமையாகிய சமூக சேவைக்கு நீங்கள் என்னை அழைப்பதை என்னால் மறுக்க இயலவில்லை. அக் கடமையை ஆற்றுதலை நான் எனது உரிமையாகக் கொள்ளுகிறேன். உங்கள் பேருதவியாலும் ஒத்துழைப்பாலும் இம் மகாநாட்டை வெற்றி பெற நடத்திவைக்கலாமென நம்புகிறேன்.

## தற்கால நிலை

உலக சரித்திரத்தின் ஒரு முக்கியமான காலத்தில் நாம் வசித்துவருகிறோம். பழைய நாகரிகம் தலைசாய்ந்து, முறிந்து, சிதைந்து போவதைப் பார்க்கிறோம். அரசியல், மதம், சமூகம் முதலியன சிதைவுற்றுப் புதிய முறையில் புதிய உயிரோடு அமைக்கப் பெறுகின்றன. அவ்வாறு சிதைந்து போகின்ற காலத்திலும் அவைகள் தங்களுடைய முன்னைய நிலையை எளிதில் விட்டுவிடவில்லை. உலகமெங்கும் இளைஞருடைய ஊக்கம், அமைதி, ஒற்றுமை முதலிய குணங்களுடன் ஒரு புதிய நாகரிகம் தோன்றி மனிதர்களுடைய வாழ்க்கையில் வளர்ந்துகொண்டே வருகிறது. இதுகாறும் சுயநலத்தையும், பொறாமையையும், சச்சரவையும் போற்றி வந்த போட்டி முறை (Competetive system)—அவனவன் அவனவனுக்கே என்ற கொள்கை—இப்போது ஒழிந்துகொண்டு வருகிறது. அது அழியும் காலமும் ஆயிற்று. அதற்குப் பதிலாக ஜாதி, மதம், கொள்கை முதலிய பேதங்களில்லாத, கூட்டுறவு, சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய முறை வளர்ந்துகொண்டு வருகிறது.

## இளைஞர் இயக்கம்

கடந்த 1914-ஆம் வருஷத்திய ஐரோப்பிய மகா யுத்தத்தைப் பற்றி நீங்கள் யாவரு மறிவீர்கள். அந்த யுத்தம் மற்ற யுத்தங்களை யெல்லாம் ஒழிப்பதற்காக ஏற்பட்டது. (The war to end all wars). அந்த யுத்தத்தில் சகல தேச இளைஞர்களும் பெருவாரியாக ஈடுபட்டிருந்தனர். அக் கொடிய யுத்தத்தி லேற்பட்ட கோர சம்பவங்களையும், மனிதத் தன்மை யற்ற செய்கைகளையும், அவற்றால் ஏற்பட்ட கெடுதிகளையும் இளைஞர்கள் அறிந்தனர். அதன் பின் யுத்தத்தினால் ஏற்பட்ட கெடுதிகளை நீக்கவும், அதைப்போல மற்றொரு யுத்தம் நிகழாதிருக்கவும் அவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இதை நாம் அகில தேச இளைஞர் சங்கத்தின் (The International League of Youths) நோக்கத்திலிருந்து அறியலாம். அச் சங்கத்தின் நோக்கம், உலக மக்களிடை இயற்கையாகவே அமைந்து கிடக்கும் ஒற்றுமை புணர்ச்சியை இளைஞர்களிடம் எழுப்பி, நம்பிக்கையையும் நேச பான்மையையும் அடிப்படையாகக் கொண்ட சகோதரத்துவத்தினால் யுத்தங்கள் நேரிடா வண்ணம் செய்தலேயாம்.

இந்த இயக்கத்தை முதன்முதலில் ஸ்தாபித்தவர்களும், இதிலீடுபட்டு மிகுந்த ஊக்கத்தோடு உழைப்பவர்களும் ஜெர்மனி தேசத்து இளைஞர்களே யாவர். பின்னர் அயர்லாந்து, துருக்கி, எகிப்து, சீனா, ருஷியா, ஜப்பான், அமெரிக்கா முதலிய நாடுகள் ஜெர்மனியைப் பின்பற்றின. இப்போது இளைஞர் சங்கங்கள் ஏறக்குறைய உலகத்தின் எல்லாத் தேசங்களிலும் பெருகிக்கொண்டே வருகின்றன. ஜெர்மனியில் ராணுவ அதிகாரத்தை ஒழித்தவர்களும், அயர்லாந்து தேசத்திற்குச் சுதந்தரத்தைக் கொண்டுவந்தவர்களும், துருக்கி தேசத்தில் பழைய சமூக சம்பிரதாயங்களை யெல்லாம் உடைத்தெறிந்து புதிய சுதந்தரத் துருக்கியை ஸ்தாபித்தவர்களும், ருஷியாவில் சமதர்ம கொள்கையை நிறுவியவர்களும் இளைஞரே யாவர். இளைஞர்களால் சாதிக்க முடியாத காரியம் ஒன்றும் இல்லை என்னலாம், இதற்குக் காரணம் இளைஞர்களுடைய ஊக்கமும் உன்னதமான கொள்கைகளுமேயாம். இளைஞர்களிடம் அவநம்பிக்கை, வித்தியாசம், குறுகிய நோக்கம் முதலியன இயற்கையாகவே கிடையா. இளைஞரே இரக்கம், இளைஞரே அன்பு, இளைஞரே எதிர்கால வாழ்விற்கு நம்பிக்கை.

உலகெங்கும் தோன்றிப் பரந்துவரும் இம் மகத்தான இயக்கமே இளைஞராகிய நாமனைவரும் இங்கு இன்று கூடும்படி செய்திருக்கிறது. ஒரு நாடோ அல்லது நகரமோ, குலமோ அல்லது குடும்பமோ முன்னேற்ற மடைவதானால் அதனுடைய இளைஞர்களாலே தான் அடையமுடியும். எதிர் காலம் இளைஞர்களுடையதே. தேச முன்னேற்றமும், சமூக முன்னேற்றமும் இளைஞர்களைப் பொருத்தே இருக்கின்றன. தியாக புத்தியும், ஊக்கமும், ஒற்றுமையும், சகோதர உணர்ச்சியும் எவ்வளவு அதிகமாக உங்கள் உள்ளங்களில் ஊறி இருக்கின்றனவோ அவ்வளவு சீக்கிரத்திலேயே நம் நாடும் குலமும் முன்னேற்றமடையு மென்பதில் ஐயமின்று.

இளைஞர் இயக்கத்தை மூத்தோர் எவ்வாறு கருதுகின்றனர்? பழைய பழக்க வழக்கங்களை எதிர்த்து, இப்போ திருப்பதைவிட நல்ல ஸ்திதி ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தேடுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன இளைஞரியக்கங்களெல்லாம். அமெரிக்கா தேசத்து இளைஞரியக்கத்தைப்பற்றி எழுதும்போது அத் தேசத்துப் பேறிஞராகிய ஸோனுகேல் என்பவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: "மூத்தோர் இளைஞர்களுடைய புதிய ஊக்கத்திலும், ஏற்பாடுகளிலும் சந்தேகமுறுகின்றனர். இளைஞர்களுடைய ஊக்கத்தை அடக்கியும் அவர்கள் ஏற்பாடுகளைத் தடுத்தும் அவர்கள் உணர்ச்சியை அழிக்க முயலுகின்றனர். அம் முயற்சி பலன் தராதபோது அவர்கள் இளைஞர்களுடன் ஒத்துப் போகிறவர்கள் போலவும் அவர்கள் இயக்கத்திற்கு அனுதாபங் காட்டுகிறவர்கள் போலவும் பாசாங்கு செய்கின்றனர். ஏனெனில், தம்மை இளைஞர்கள் விலக்கிவிடுவார்கள் என்று அவர்கள் பயப்படுகிறார்கள். இந்த இரண்டு வழிகளிலும் மூத்தோர் இளைஞர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களாக இல்லை.



## சமூக மகாநாட்டின் அவசியம்

நம் நாடு மிகவும் விரிந்தது; சுமார் 35 கோடி ஜனங்களை புடையது; ஆயிரக் கணக்கான சமூகங்களை புடையது. எல்லாச் சமூகங்களும் பலவேறு உட்பிரிவுகளை யுடையன. இந்நிலையில் பல சமூகத்தினரையும் ஒருங்கே கூட்டி வைத்தல் இயலாத காரியம். ஒரே சமூகத்தில் பல பிரிவினர்களாக இருப்பவர்கள் மகாநாடுகளில் கூடுவது பல சமூகத்தினர் கூடுவதைவிட மிக எளிதாக இருக்கும். ஏனெனில், அவர்கள் யாவரும் ஒரே வகுப்பினர் என்ற ஒரு ஒற்றுமை உணர்ச்சி அவர்கள் பிற சமூகத்தினரிடம் கொள்ளும் நம்பிக்கையை விட அதிகமான நம்பிக்கையைத் தங்களுக்குள் கொள்ளும்படி செய்கிறது. ஒரு சமூகம் முன்னேறுவதற்குத் தனி மனிதனுடைய முயற்சியை விடச் சமூகப் பொது முயற்சி பெரிதும் உதவியாயிருக்கும். தேச முன்னேற்றத்தை நாம் சமூக சீர்திருத்தத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு சமூகத்தினரும் மகாநாடுகள் கூட்டி, அந்தந்தச் சமூகத்தில் காணப்படும் குறைகளை நீக்கி, ஒற்றுமையையும், நேச பான்மையையும் வளர்க்க வேண்டும். சமூக மகாநாடுகளின் மூலமாகவே தனிப்பட்ட சமூகங்கள் முன்னேற்ற மடையமுடியும். சமூக மகாநாடுகளெல்லாம் சகோதர சமூகங்களிடையே நேச பான்மையையும் ஒற்றுமையையும் வளர்த்து, கடைசியில் நம் நாட்டிலுள்ள பல சமூகங்களும் ஒன்றுபடவேண்டு மென்ற உயரிலக்கியத்தை மறவாது வேலை செய்துவர வேண்டும்.

## இளைஞர்கள் கடமை

இளைஞர்களுடைய கடமைகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது தன்னைச் சீர்திருத்திக்கொள்ளுதல்; இரண்டாவது பிறரைச் சீர்திருத்துதல். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று தொடர் புடையனவாகும். கல்வி, ஒழுக்கம், உடற்பயிற்சி முதலியவற்றால் நம்மையே நாம் சீர்திருத்திக்கொண்டு உயரிய நோக்கங்களை நம் உள்ளத்தில் பதிய வைக்காது போனால் தேச சேவைக்கோ அல்லது சமூக சேவைக்கோ நாம் அருகதையுடையவ ராகமாட்டோம்.

## உடற்பயிற்சி

ஒரு இளைஞன் தனக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் முக்கியமானது உடற்பயிற்சியேயாம். கொந்தளிப்பான கடலை யொத்த உலக வாழ்க்கையில் ஏற்படுந் துன்பங்களை எதிர்த்து வெற்றி பெறுவதற்கு நமது சரீரத்தை மிகவும் திடப்படுத்தவேண்டும். நம் முன்னோர்கள் சோழ தேசத்தில் படை வீரராக இருந்திருக்கலாம். சூரனைச் சம்மாரஞ் செய்யும் ஆற்றல் படைத்தவராக இருந்திருக்கலாம்; நமது பெயரே நமது பண்டைய வீரத்தைக் குறிப்பாகக் காட்டலாம். அதனால் இப்பொழுது நமக்கு என்ன பயன்? தற்போதைய நிலையில் நமது மதக்கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் நமது தைரியத்தையும் வீரத்தையும் அறவே போக்கிவிட்டன வென்றே சொல்லலாம். இப்போது நாம் நமது இளைஞர்களை நோக்கின், நமது முன்னோர்களது வீரத்தைப்பற்றிக் கூறும் சரித்திரங்களெல்லாம் பொய்யோவென ஐயுறவேண்டி இருக்கிறது. ஆகையால் எனது சகோதர இளைஞர்களே! உங்களில் ஒவ்வொருவரும் வேண்டிய அளவு தேக அப்பியாசங்கள் செய்யவேண்டும்; ஒவ்வொருவரும் ஒரு இளஞ்சிங்க மாகவேண்டும்.

நீங்கள் அனைவரும் வீர வாழ்க்கை வாழ்வதற்குப் பிரியப்பட வேண்டும். ஒழுங்கானதும், நியாயமானதுமான எதையும் எவ்வளவு துன்பந் தருவதாக இருந்தாலும் செய்ய முன்வரவேண்டும். நற்காரியம் எதற்கும் இன்னல்கள் பலவுள. ஆனால் சொற்ப இடைஞ்சலில் மனஞ் சோர்வுற்று எடுத்த காரியத்தை இடையில் விடுதல் மனவலி யின்மையையே குறிக்கும்.

## ஒழுக்கம்

வருங்காலம் வாலிபர்கள் கையி லிருப்பதால் இளமையிலேயே நீங்கள் உங்கள் ஒழுக்கங்களைச் சீர்பெற வமைத்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம். ஒழுக்கத்திலும், பலத்திலும், வீரத்திலும் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொண்டீர்களானால் நமது சமூகம் அநேகமாக முன்னேற்ற மடைந்துவிட்ட தென்றே சொல்லலாம். இளமையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்கேற்ற காலமாம். இக் காலத்தில் நாம் பெரும்பாலும் போலி ஒழுக்கங்களையே பின்பற்றி வருகிறோம். ஒழுக்கம் என்பது குடுமியை இப்படி வைத்துக்கொள்ளல் வேண்டும், மீசையை இம்மாதிரி வைத்துக்கொள்ளுதல் சாஸ்திர சம்மதம், வீபூதியை இத்தனை விரல்களால் இன்ன இடங்களில் இன்ன மாதிரி அணிதல் வேண்டும், வஸ்திரங்களை இவ்வாறு அணிதல் வேண்டும் என்பனவல்ல. எத்தனையோ குடும்பங்கள் இந்தப் போலி ஒழுக்கங்களால் சச்சரவிட்டுச் சீரழிந்திருக்கின்றன. சுயநல மின்மை, தியாக புத்தி, சகோதரத்துவம், அன்பு முதலிய உயரிலக்கியங்களை மனதிற் பதித்து அதன்படி நடத்தலே ஒழுக்கமாகும்.

## கல்வி

அறிவே கடவுள். அறிவு மயங்கும்போது யாவும் மயங்கும். அறிவை விருத்தி செய்யக் கல்வியே ஏற்ற சாதனமாகும். ஆகவே, நம் மரபிலுள்ள ஒவ்வொருவருக்கும் போதிய அறிவு புகட்டவல்ல கல்வியைக் கற்பிக்க வேண்டும். ஊர்கள்தோறும் நம் மரபினர்களுக்கெனத் தனிக் கல்விச்சாலை

உயர்தர கல்வியிலும் நீங்கள் யாவரும் பாண்டித்தியம் பெற முயற்சிக்க வேண்டும். கல்வியை அறிவு வளர்ச்சிக்காகவே நாடுதல் வேண்டும். உயர்தர கல்லூரியில் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றதும் கல்வியை அநேகமாக முடித்துவிட்டோமென்று பெரும்பாலும் நினைக்கிறோம். சிந்திப்பின் உண்மைக் கல்வி அதன் பின்னரே ஆரம்பமாகிறதென்பது எனது எண்ணம். நமது நாடு முற்போக் கடையா திருப்பதற்கு முக்கிய காரணம் நம்மில் பெரும்பாலோர் கற்ற கல்வியைச் சரியானபடி உபயோகப்படுத்தாத குறையே யாம். நாம் இப்போது கல்லூரியிற் பயிலும் கல்வி, கத்தியைத் தீட்டிக் கூர்மையாக்குவதை யொப்ப நமது அறிவைக் கூர்மையாக்குகிறது என்னலாம். கூர்மையாக்கப்பட்ட அறிவைத் தக்க வழிகளில் உபயோகப்படுத்தி அதன் பயனை அடையவேண்டியது கல்லூரியை விட்டகன்ற பின்னரே யாகும்.

கற்ற கல்வியை உங்களைச் சுற்றி இருக்கும் உங்கள் பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும் எடுத்துக் கூறி, கல்வியின் பயனை அவர்களும் அனுபவிக்கும்படி செய்து, அவர்களையும் உங்களோடுகூட முன்னேறச் செய்யவேண்டும். கல்வியினால் பிரகாசமாக்கப்பட்ட அறிவின் உதவியினால் உங்கள் சிந்தனா சக்தியை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். ஒருவன் எவ்வளவு கல்வி பெற்றிருந்த போதிலும் அக் கல்வி அவனது சிந்தனா சக்தியைக் கிளப்பிவிட்டு விஷயங்களைப் பாகுபடுத்திப் புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற அவாவை மனதிலெழுப்பத் தவறின், அக் கல்வியினால், யாதொரு பயனுமில்லை. எந்தக் காரியத்தையும் உங்கள் அறிவென்னும் விளக்கினால் பார்த்துச் சோதித்து நிச்சயப்படுத்துதல் வேண்டும்.

## தொழிற் கல்வி

வாலிப சகோதரர்களே! நீங்கள் பல கலைகளையும் கற்க முன் வரவேண்டும். ரசாயனம், பூதபௌதிக சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலிய எண்ணிறந்த கலைகளையும் கற்கவேண்டும். மேற்றிசை நாட்டினர் இயற்கை யன்னையிட மமைந்திருக்கும் அபார சக்திகளைக் கண்டுபிடித்து அச் சக்திகளைத் தங்களுக்கு வேலை செய்ய உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். மனதினாலும் நினைத்தற்கரிய புதிய விஷயங்களையும், நவீன இயந்திரங்களையும் தினந்தினம் கண்டுபிடித்து வருகிறார்கள். அதனால் அவர்கள் உலகத்தையே அடக்கி ஆளமுடிகிறது. நம் நாட்டின் இயற்கை வளமோ மிகவும் சிறந்தது. அன்னியர்கள் நம் நாட்டு இயற்கை வளங்களை முற்றிலுஞ் சுரண்டிக்கொண்டு போகு முன்னரே இளைஞ நண்பர்களே! கண் விழியுங்கள். எண்டிசையுமுள்ள எல்லா நாட்டிற்கும் செல்லுங்கள். புதிய கலைகளை நம் நாட்டிற்கு ஓட்டிக்கொண்டு வந்து பல்லாயிரக் கணக்கான தொழிற் சாலைகளை நிறுவுங்கள். இயற்கையின் அபார சக்தியை இயந்திரங்களில் மாட்டித் தேசமெல்லாம் தொழிலோசையைப் பரப்புங்கள்.

## பெண் கல்வி

மேற்கூறிய யாவும் பெண் மக்களுக்கும் பொருந்தும். ஆண் மக்களது அறிவு நவீன நவீனமாகக் கண்டு பிடிக்கப்படும் புது விஷயங்களாலும், உயர்தரக் கல்வியினாலும் மேலும் மேலும் பெருகி ஆகாயத்தை நோக்கி வளர்ந்துகொண்டே போகிறது. பெண் மக்களது அறிவோ கல்வியில்லாக் குறைவால் நாளுக்கு நாள் பாதளத்தை நோக்கிப் பாய்ந்துகொண்டே போகிறது. இவர்கள் இருவரும் கருத்தொருமித்து இல்லறம் நடத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு மணம் என்னும் விழாவினால் சேர்த்து வைக்கப்படுகின்றனர். ஆனால் தற்போதைய நிலையிலோ இருவரும் வாழ்நாள் முழுதும் அல்லலுறுகின்றனர். நாம் நமது மக்களுக்கு இதைவிடக் கொடிய தீங்கு வேறொன்றும் செய்ய முடியாதென்பது எனது எண்ணம். ஆகையால் சகோதரர்களே! நீங்கள் உங்கள் சகோதரிகளுக்கு கல்வியை நிரம்பக் கற்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

## பெண் உரிமை

பெண் மக்களுக்குச் சம உரிமை கொடுக்காத எந்தத் தேசமும், எந்தச் சமூகமும் முன்னேற்றமடைய முடியாது. எனது இளைஞ சகோதரிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வாலிபனுக்கு வாழ்க்கைத் துணையாக இருக்க வேண்டப்படுகிறீர்கள். நீங்கள் அவர்களுக்கு அடிமைகளல்ல; அவர்களுடைய துணைவிகளே. நீங்கள் அவர்களுக்கு வேண்டிய சமயத்தில் உதவி புரியவும், புத்தி புகட்டவும் வல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யச் சக்தி அற்றவர்களாக இருந்தால் நீங்கள் உங்கள் கணவருக்குத் துணையாக இருக்க முடியாது. பெரும்பாரமாகவே இருப்பீர்கள். ஆகவே கல்வியால் உங்கள் அறிவுச் சுடரைப் பிரகாசப்படுத்தி, மண வாழ்க்கையை மணம் பெறச் செய்து, உங்கள் மக்களுக்கும் உங்கள் கல்வியின் பயனைப் புகட்டித் தேசமெல்லாம் சந்தோஷகரமான குடும்ப வாழ்க்கையை ஸ்தாபிக்கும் பொறுப்பு உங்களிட மிருக்கிறது.

## பிரமசரியமும் இளமை மணமும்

எனதருமை வாலிப சகோதரர்களே! குடும்பத்தை நிர்வகித்து நடத்தும் சக்தி உங்களுக்கு இருக்கிறதென்ற உணர்ச்சி ஏற்பட்ட பின்னரே நீங்கள் மணம் செய்துகொள்ள வேண்டும். குறைந்த பக்ஷம் இளைஞர்கள் 20 வயது வரையிலும், பெண்கள் 15 வயது வரையிலும் பிரமசரியத்தை அனுசரிக்க வேண்டும். மணமென்பது ஆண் பெண் இரு பாலாருக்கும் ஏற்பட்ட ஒரு கட்டாயமான சடங்கு என்று நினைத்து அக்கடனை எப்படியாவது நிவர்த்தி செய்துவிட வேண்டுமென்று ஒரு பெண்ணையும் வாலிபனையும் சேர்த்து வைத்துவிடுதல் அர்த்தமற்ற செய்கையாகும். எந்த வயதில் வாலிபர்களுக்கு மணஞ்செய்ய வேண்டுமென்ற எண்ண மிருப்பின், அவர்களுடன் ஒத்து மண வாழ்க்கையை நடத்தும் பெண்ணைத் தேடி



மணஞ் செய்துவைக்க வேண்டியதே பெற்றோர் கடமை யாகும்.

இளமை மணத்தினால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. பலக் குறைவுள்ள சிசுக்களும், சிசு மரணமும், கருச் சிதைவும், பால்ய வைதவ்யமும் பெருகிக்கொண்டே வருகின்றன. நமது சமூகத்தில் பால்ய மணம் அதிகமாக இல்லையென்றாலும், ஏதோ சில ஜில்லாக்களில் காணப்படும் பால்ய விவாகத்தையும் அறவே ஒழிக்க வேண்டும்.

## விதவா விவாகமும் ஒற்றுமை மணமும்

பால்ய விதவைகளுக்குச் செய்ய வேண்டிய மறுமணத்தைப் பற்றியும் நான் உங்களுக்கு அதிகமாக எடுத்துக் கூற வேண்டியதில்லை. அவைகளைத் துணிந்து செய்வதற்கு நாடும் சமூகமும் வாலிபர்களாகிய உங்களையே எதிர்பார்த்திருக்கின்றன.

## மதம்

சமயங்களெல்லாம் மனித விடுதலைக்காக ஏற்பட்டன. நம் மரபினர் விசேஷமாகச் சமயப் பற்றுடையவர்கள் என்று சொல்லப்படுகின்றனர். பெரும்பாலும் நாம் போலி மதாசாரங்களையும், கிரியைகளையுமே கைப்பற்றி வருகிறோமென எண்ண வேண்டி இருக்கிறது. கிரியைகளும், சம்பிரதாயங்களும் மதத்தின் முடிவு அல்ல. சத்தியம், தியாகம், அன்பு, வீரம், பேரறிவு இவைகளை மனதி லெழுப்பிப் பலன் கருதாது எப்பொழுதும் தொழில் நடத்திக்கொண் டிருக்கும்படி செய்விப்பதே மதத்தின் முடிவாகும். உலகிலுள்ள சகல மதங்களின் முடிவும் இதுவே யாம். அந்நிலையை யடைவதற்கு ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயங்களும், கிரியைகளும் தேசத்தாலும், காலத்தாலும் மாறுபட்டுக்கொண் டிருக்கின்றன. நாம் மதத்தின் உயரிலக்கியத்தை மறந்து சம்பிரதாயங்களிலதிகமாக ஈடுபட்டிருக்கிறோம். கால வேறுபாட்டால் அவைகளும் போலிச் சம்பிரதாயங்களாக மாறிவிட்டன.

சமய உணர்ச்சி இல்லாமலேயே உலகில் பல சமூகத்தினர் மேன்மை அடைந்தும் முன்னேற்றமடைந்தும் வருகின்றனர். நாமோ 'எல்லாம் ஈசன் செயல்', 'எல்லாம் வினைப்பயன்' என்று சும்மா இருக்கும் சுகத்தை விரும்புகிறோம். இஃது நமது சொந்த அறிவை உபயோகப்படுத்திச் சிந்தனா சக்தியை வளர்ப்பதற்குப் பெருந்தடையாக இருக்கிறது; சுய முயற்சியை மட்டுப்படுத்திவிடுகிறது. நடை முறையில் நமது மதக்கொள்கைகளெல்லாம் நமக்குள் வேற்றுமை உணர்ச்சியை வளர்த்துச் சமூக முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும் பெரும் முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. அவ்வாறு அவைகள் நமக்கு இடர் செய்யும்போது கால வேறுபாட்டால் பழைய கொள்கைகளும் பயனற்றவாயின என்பதை புணர்ந்து புதிய கொள்கைகளை ஏற்படுத்திக்கொள்ளுதலே சாலச் சிறந்ததாகும்.

வாலிபர்களாகிய நமக்கு மதத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் விவாதம் செய்து காலங் கழிப்பதைவிட மிகவும் முக்கியமான வேலைகள் பல இருக்கின்றன. தன்னைவிடப் பெரிய ஒரு சக்தியை நம்பி இச்சக்தி நிச்சயமாக நமக்கு உதவி செய்யும் என்று வாளா இருப்பதைவிட நம்முடைய சக்தியிலேயே விசேஷ நமபிக்கை வைத்து முயற்சி செய்தால் எவ்வளவோ காரியங்களை எளிதில் செய்து முடித்திருக்கலாம்.

எனது வாலிப நண்பர்களே! எல்லாம் பழமை, எல்லாம் புராதனம் என்ற ஒரு காரணத்தினாலேயே அவைகளைப் பின்பற்ற வேண்டாம். உங்கள் அறிவாகிய வெளிச்சத்தால் ஒவ்வொன்றையும் நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உங்களுக்கு நன்மை பயப்பனவற்றைக் கொள்ளுங்கள். மற்றவைகளைத் தள்ளுங்கள்.

## அரசியல்

நமது அரசிய லுலகத்தில் ஒரு சகாப்தம் உதயமாகிக்கொண் டிருக்கிறது. எங்கும் சுதந்தர உணர்ச்சியும், சுதந்தரத் தாகமும் வளர்ந்து கொண்டே வருகின்றன. அரசியலைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்கு எனக்குப் போதிய அனுபவமில்லை யாயினும், நமக்கு வேண்டியவற்றை நாமே தேடிக்கொள்ள வேண்டுமே யல்லாது பிறரிடம் யாசிப்பது ஆண்மைக் கழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது உரிமைகள் நம்முடையனவே. பிறரிடம் பிச்சை கேட்டு வாங்கப்படுவன நமதுரிமைகள் ஆகமாட்டா. அவைகளுக்கு நாம் அருகதை யுடையவர்களு மாகமாட்டோம். முதலில் நமக்குள் நாம் விடுதலையை ஏற்படுத்திக் கொண்டோமாயின், சுதந்தரமும் நமதுரிமைகளும் தாமே நம்மைத் தேடி வரும். பாரத மாதா தன்னுடைய விடுதலைக்காக இளஞ் சிங்கங்களாகிய உங்களையே நோக்கிய வண்ணம் நிற்கிறாள்.

## என்ன செய்ய வேண்டும்?

தேச முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் முயற்சி வேண்டும். உலகில் எல்லாச் சமூகங்களும் முன்னேறுகின்றன; முன்னேற்ற மடைந்திருக்கின்றன. நாம் மாத்திரம் விடுதலையின்றி வாளா கிடப்பது மனிதத் தன்மை யாகுமா? நமது தேசத்தின் கௌரவமும், குலத்தின் கௌரவமும் உங்கள் கையில் ஒப்படைக்கப்பட் டிருக்கின்றன. இந்த மகத்தான பொறுப்பை புணர்ந்து நீங்கள் இடைவிடாது உழையுங்கள். ஊர்தோறும் இராப் பள்ளிகளை ஏற்படுத்தி அறிவுச் சுடரைக் கொளுத்துங்கள். கல்வி நிதிக்கு வேண்டிய பணத்தைத் திரட்டுங்கள். பல நாடுகளுக்கும் சென்று புதிய கலைகளைக் கொண்டு வந்து நிரப்புங்கள். ஒழிந்த நேரங்களில் நீங்கள் கற்ற கல்வியை உங்கள் சகோதரர்களுக் கெடுத்தோதுங்கள். தீண்டாமையை அறவே யொழித்துச் சகோதரத்துவத்தை வளருங்கள். தேசமெல்லாம் தொழிலோசை யொலிக்

கும்படி செய்து நமது நாட்டை ஒரு பொற்களஞ்சிய மாக்குங்கள்.

சகோதர இளைஞர்களே! "புதிய சகாப்தத்தின் அருணன் மிகுந்த பிரகாசத்தோடு கீழ்த்திசையில் கம்பீரமாக உதயமாய்க்கொண்டிருக்கிறான். மதம், அபிப்பிராயம், பழக்க வழக்கங்கள், உரிமைகள் முதலியவற்றிலுள்ள பேதங்களை வீரத்துடன் களைந்தெறிந்து, சகோதர பாவத்தின் மீது கட்டப்பட்ட அப் புதிய சகாப்தத்தை எதிர்கொண்டழைக்கத் தேச வாலிபர்களெல்லாம் முன்வாருங்கள். வலிமை அற்றவர்களே குற்றங்களை மன்னிக்கும் ஆற்றல் இல்லாதிருக்கிறார்கள். இளைஞர்களுடைய பரந்த நோக்கம் சிறு வித்தியாசங்களை யெல்லாம் ஒழித்து, ஒத்துழைப்பு என்னும் ஸ்திரமான அஸ்திவாரத்தின்மீது உலக முழுவதும் சிநேக பாவத்தை ஏற்படுத்திப் பிரகாசிப்பதாக!"

---

## தென்னிந்திய செங்குந்தர் மூன்றுவது மகாநாட்டில் நிறைவேறிய

# தீர்மானங்கள்

### (1) செங்குந்தரும் கைத்தொழில்களும்

நமது செங்குந்த சமூகத்தார் நெசவுத் தொழில் செய்துவந்த போதிலும் இதர கைத்தொழில்கள் பலவற்றையும் பயின்று வந்தால்தான் நமது மரபு முன்னேற்ற மடையுமென்று இம்மகாநாடு கருதுவதால், அவ்வாறே பலவித கைத்தொழில்களைப் பயிலுமாறு செங்குந்த மகாஜனங்களை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் : A. நாகலிங்க முதலியார்.

### (2) செங்குந்தரும் தேர்தல்களும்

கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் நமது சமூக வாக்காளர்களின் தொகை அதிகமா யிருப்பதால், இந்த ஜில்லாக்களுள் ஒவ்வொன்றிலும் நமது சமூக அபேக்ஷகரை *நம்மவர்களுக்குள் போட்டியில்லாமல் அடுத்த சட்டசபைத் தேர்தலில் நிறுத்தவும், அதற்குத் தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சமூக ராஜீய அபிப்பிராய பேதங்களை ஒரு சிறிதும் பாராட்டாமல் நமது அபேக்ஷகர்கள் வெற்றி பெறுமாறு முழுமனதுடன் உழைக்க ஐந்து பேர்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கமிட்டியை நியமிக்கவும் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு அதிகாரமளிப்பதுடன், தற்போது நமது சமூகம் உள்ள பிற்போக்கான நிலையில், நமது சொந்த அபிப்பிராய பேதங்களைப் பாராட்டிக்கொண்டு இருப்போமானால் அவை சமூகத்தையே பெரிதும் பாழ்படுத்துமாதலால், அவற்றை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் குலாபிமானத்தையே பெரிதாகப் பாராட்டி ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திலும் நமது அபேக்ஷகர்கள் வெற்றி பெறுமாறு உழைக்க வேண்டுமாய்ச் செங்குந்தர் ஒவ்வொருவரும் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர் என்றும், எலெக்ஷன் காலங்களிலும், மற்ற சமயங்களிலும் இதர சமூகத்தினருக்குச் சிறிதும் மனஸ்தாபம் விளைக்காமல் பார்த்துக் கொள்ளுவதோடு, முடிந்தவரையில் அவர்களோடு சேர்ந்துழைக்க வேண்டுமென்றும், நம்மவர்கள் அடுத்த சட்டசபைத் தேர்தலுக்குள் வோட்டர் தொகையைப் பலவழிகளிலும் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

* இந்த மாறுதலோடு இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

### (3) பரியம், ஒப்பந்தப் பணம்

நமது செங்குந்த மரபில் சில ஊர்களில் மருமகப் பிள்ளைகளுக்கு வருஷா வருஷம் சீர்கொடுக்கும் பழக்கவழக்கம் சமூக சிக்கனத்தைக் குறைப்பதாக இருப்பதால், அதை நிறுத்திக் கலியாணம் செய்யும் முதல் வருஷம் மட்டிலும் மருமகப் பிள்ளைகளுக்குச் சீர்கொடுத்துப் பின்னால் வருஷா வருஷம் சீர் கொடுக்கும் வழக்கத்தையும், கலியாணங்களில் பரியம் வாங்கும் வழக்கத்தையும், ஒப்பந்தப் பணம் வாங்கும் வழக்கத்தையும் அறவே ஒழிக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரே : P. A. கதிர்வேலு முதலியார்.
ஆமோ : A. R. செல்லப்ப முதலியார்.

### (4) ஒற்றுமை விவாகங்கள்

ஒரே வகுப்பினரான நமது செங்குந்த சமூகத்தார் பல்வேறிடங்களில் குடியேறினதாலும், இடமாறுதலாலும், மேற்கொண்டிருந்த நெய்தற்றொழில் வேறுபாட்டாலும், நெருங்கிய பழக்கமின்மையாலும், இதுவரை சமபந்தி போஜனம் தவிர விவாக விஷயத்தில் மாறுபாடு கொண்டிருப்பது சமூக முன்னேற்றத்திற்குத் தடையா யிருப்பதாலும், ஒரே இரத்தக் கலப்புள்ள விவாகத்தால் சிறந்த சந்ததி தோன்றாமை, தோன்றிய சந்ததிக்கு அறிவு குன்றுதல், உடல் மன வலிவு இல்லாமையாகிய தீமைக ளிருப்பதாலும், பொருளாதாரம், வேடிக்கை, சம்பந்தம் தவிர்ந்து போகுமென்னு மெண்ணம் முதலானவற்றைக் கருதுவதால் பெரும்பான்மையும் பொருந்தாத குடும்ப வாழ்க்கை யுண்டாவதாலும், நமது சமூகத்திலே ஒன்றுபட்ட விவாகம் நடத்தப்பட வேண்டுமெனச் சென்ற மகாநாடு அபிப்பிராயப்பட்டதை யொட்டி இடையிலே ஒற்றுமைத் திருமணங்களை நிகழ்த்திய



குடும்பத்தினரை இம்மகாநாடு பாராட்டுவதோடு மேன்மேலும் இத்தகைய விவாகங்கள் நடைபெற வேண்டுமெனவும் வற்புறுத்துகிறது.

பிரேரே : P. C. மாணிக்கவாசக முதலியார்.
ஆமோ : பன்னிருகைப்பெருமாள் முதலியார், B.A. B.L.

### (5) வாலிபரும் உடல் வன்மையும்

எத்தேசமும் எச் சமூகமும் எத்துறையிலும் முன்னேறி விளங்குதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன வாலிபர்களது திண்மையும் திறமுமே என்னும் உண்மையினை மேல்நாட்டு நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தி வருவதை புணர்ந்து, பல துறைகளிலும் பலவீனப்பட்டு நலிந்து கிடக்கும் நம் சமூகத்தின் நிலையினை உயர்த்தும் பொருட்டு எல்லாத் துறைகளிலும் நமது வாலிபர் சலியாதுழைப்பதற்கேற்ற தேக திடமும் மன உறுதியும் பெற்று வீரர் வழித் தோன்றல்களென விளங்குமாறு அவர்கட்குத் தக்க தேகப் பயிற்சியினைப் பெற்றோரும் சங்கங்களும் அளிக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

பிரேரே: ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.
ஆமோ : A. தக்ஷிணாமூர்த்தி முதலியார்.

### (6) கதரையும் சுதேசி ஆடைகளையும் ஆதரித்தல்

நெய்தற்றொழிலே நம்மவர் குலத்தொழிலாக இருக்க, அதை வளர்ப்பதற்கும் நமது நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், கூடிய வரையில் நம்மவர் அனைவரும் கதரையே நூற்று, நெய்து உடுத்தல் வேண்டுமென்றும், அதற்கு அடுத்தபடியாக இந்தியாவிலுள்ள மில்களில் தயாராகும் நூல்களைக் கொண்டு கைத்தறியில் நெய்யப் பெறும் ஆடைகளையே ஆதரிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு நம்மவர் அனைவரையும் வேண்டிக்கொள்ளுகின்றது.

பிரேரே : தி. நா. சபாபதி முதலியார்.
ஆமோ : ஸ்ரீராம் முதலியார், B. A.

### (7) மத சம்பந்தமானவை

நமது செங்குந்த சமூகத்தின் பண்டைய தூயவொழுக்கத்திற்கு மாறாக தற்காலம் நடைபெறும் திருவிழாக்களில் உயிர்ப்பலி யிடுதல், கச்சை கட்டிக்கொண்டு ஆடுதல், பூந்தேர் குத்துதல் முதலியவை போன்ற தீய வழக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரே : ம. அ. கனகசபை முதலியார்

### (8) விதவா விவாகம்

புருஷனை இழந்த சந்ததி இல்லாத பெண்களுக்கு விருப்ப மிருப்பின் மறுமணம் செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டுமெனவும், அவ்வாறு மறுமணம் செய்துகொள்வோர்களை, விலக்கி வைத்தல் முதலியவை செய்தல் கூடாதெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரே : அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார்.
ஆமோதி : P. C. மாணிக்கவாசக முதலியார்.

### (9) சமூக சிக்கனம்

நமது சமூகம் வறுமையால் நலிவதாகக் கூறிக்கொண்டே கலியாணங்கட்கும், ஆலய திருமண உற்சவங்கட்கும், கட்சிச் சண்டைகளால் ஏற்படும் வழக்குகட்கும் அனாவசியமாகப் பெருந் தொகைகளைச் செலவழித்து வருவதைக் கண்டு வருந்துவதோடு, இனி ஆடம்பரச் செலவின்றிக் கலியாணங்களை நடத்தவும், இயற்கனவே பல வாலயங்கள் இருப்பதால் இனிப் புதியன நிருமாணிக்காதும் அவ்வாறுள்ளனவற்றின் உற்சவங்கட்கு அபரிமிதமான தொகை செலவிடாது மிருக்கவும், நம்மவர்க்குள்ளேயே பஞ்சாயத்து மூலமாக வழக்குகளைத் தீர்த்துக்கொண்டு நியாயஸ்தலங்கள் மூலம் அளவிறந்த செல்வத்தை அழிக்காதிருக்கவும் நம்மவர் ஒவ்வொருவரையும் இம்மகாநாடு மிகவும் வேண்டிக்கொள்ளுகிறது.

பிரேரே : P. S. பாலசுப்பிரமணிய முதலியார்.

### (10) கக்ஷிகளை யொழித்தல்

நமது சமூகத்தார் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட்டுள்ள கக்ஷிப் பிரதிகக்ஷிகள் நமது குலத்தவர்களுக்குப் பெருந்துன்பத்தைத் தருவதால் அக்கக்ஷிகளை ஒழிக்கத் தலைச்சங்கம் கீழ்க்கண்ட தலைவர்களோடு அவசியமாயின் அச் சில்லாவிலுள்ள முக்கியஸ்தரையும் நியமித்துக்கூடிய விரைவில் கக்ஷிகளை யொழிக்க முயற்சிக்க வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

திரு. தி. நா. சபாபதி முதலியார், சென்னை.
திரு. ம சண்முகசுந்தர முதலியார், சென்னை.
திரு. S. குழந்தைவேல் முதலியார், மயிலாப்பூர்.
திரு. மா. அ. கனகசபை முதலியார், கோடம்பாக்கம்.
திரு. தெ. சம்பந்த முதலியார், திருவல்லிக்கேணி.
திரு. V. ரத்தின முதலியார், சென்னை.

### (11) வாலிபர் இயக்கம்

தேச முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் வாலிபர்களைப் பொருத்ததாக இருப்பதால், ஒவ்வொரு கிராமத்திலும் வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கப்பெறல் வேண்டுமென்றும், அச்சங்கம் அக்கிராமத்திலுள்ள மாணவர்களும் ஏனைய வாலிபர்களும் அடங்கிய ஒரு ஒழுங்கான தொண்டர் படையை ஏற்படுத்தி அதன் வாயிலாகக் கீழ்க்கண்ட முக்கிய தொண்டுகளை ஆற்றல் வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(i) தங்களோடு ஒத்துழைப்பதற்காகவும் தாங்கள் மேற்கொண்ட பணியைச் செவ்வனே நடத்துவதற்காகவும் அடுத்துள்ள கிராமங்களில்

வாலிபர் சங்கங்களை ஸ்தாபித்தலும், இயற்கனவே உள்ளவற்றை வளர்க்குதலும்.

(ii) கிராமந்தோறும் சென்று, துர்ப்பாக்கியத்தால் இளமையிற் கல்லாது விடுத்த வயது முதிர்ந்தவர்களிடைச் சுலபமான முறைகளில் அறிவுச் சுடர் கொளுத்துதற்காக இராப் பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், உபந்நியாசங்கள் ஆகிய வசதிகளை ஏற்படுத்தல், சிறுவர் சிறுமிகளது கல்விப் பயிற்சியினைக் கட்டாயப்படுத்தல் முதலிய வழிகளில் எத்தகைய சீர்திருத்தத்திற்கும் முதற்படியாயுள்ள கல்வியினைப் பரப்புதல்.

(iii) நம்மவர் பொருளாதார நிலையினைக் கவனித்துத் திருத்துதல்.

(iv) முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாயுள்ள சுழிப்பினவுகள் முதலிய தீமைகள் யொழித்தல்.

(v) பொதுவாகச் சுகாதார விஷயங்களையும் சிறப்பாக மதுவிலக்குச் சம்பந்தமான விஷயங்களையும் கவனித்து வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்தல்.

பிரேரே: எம். பி. தியாகராஜன்.

## (12) சங்கம், மித்திரன்

நமது குலச் சீர்திருத்தத்திற்கு இன்றியமையாதன சங்கங்களாகையால் அவற்றை ஊர்தோறும் ஸ்தாபித்தல் வேண்டுமென்றும், அச்சீர்திருத்தமே முக்கிய நோக்கமாகக் கொண்டு வெளிவரும், நமது மித்திரனுக்குப் பல வழிகளிலும் வேண்டிய ஆதரவுகளை யளித்தல் வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரே: ஜெ. தங்கவேல், B. A.

## (13) கூட்டுறவு

நம்மவர் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு ஒவ்வொரு இடத்திலும் கீழ்க்காணும் விதமாகக் கூட்டுறவு முயற்சிகள் செய்ய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(i) வியாபாரிகள் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி அங்குள்ளவர்கள் பங்குதாரர்களாகச் சேர்ந்து அரசாங்கச் சட்டப் பிரகாரம் பெறக்கூடிய அங்கீகாரத்தையும் உதவியையும் பெற்று வியாபாரத்தை நடத்த வேண்டும்.

(ii) நமது நெசவுத் தொழி லபிவிருத்திக்காக நெசவுள்ள கிராமந்தோறும் தனிப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களையும் சேமநிதிகளையும் ஏற்படுத்தி அவைகளை நடத்தும் மாதிரியைத் தெளிவுபடுத்தும் பொருட்டு அரசாங்கத்தின் கூட்டுறவுப் பிரசாரங்களைத் தூண்ட வேண்டும்.

பிரேரே: ச. வே. சிங்காரவேல் முதலியார், B. A.
ஆமோ: சி. எஸ். கந்தசாமி முதலியார்.

## (14) மதுபான விலக்கு

மதுபான வழக்கத்தை ஒழிக்க நமது 'சங்கங்கள்' தீவிர முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரே: எம். கெ. சண்முகசுந்தர முதலியார்.
ஆமோ: ச. நா. குமாரகுரு முதலியார்.

## (15) பெண்கள் உரிமை

குடும்ப சொத்துக்களில் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உரிமை வழங்கப்படல் வேண்டுமெனவும், அதற்கான சட்டங்களை இயற்றுமாறும் அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

பிரேரே: A. R. செல்லப்பா முதலியார்.
ஆமோ: வி. ரத்தின முதலியார், B. A., B. L.

## (16) கல்விநிதியும் மாணவர் விடுதியும்

கல்வி யெனுங் கருந்தனமே எச்சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத ஆதாரமாதல் பற்றி, கல்வியில் பெரிதும் பிற்போக்கடைந்துள்ள நம் சமூகத்தில் பல மாணவர்கள் கல்வியிற் சிறந்து திகழுமாறு உதவி புரியும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கல்விநிதி பெருகவும்; அத்தகைய மாணவர்கள் சௌகரியமாகத் தங்கி யிருப்பதற் கொரு விடுதி அத்தியாவசியமாக வேண்டியிருப்பதாலும், நமது தலைச்சங்கம், பத்திரிகை யாகியவற்றின் காரியாலயத்திற் கொரு விடுதி கட்டாயமாக வேண்டி யிருப்பதாலும், ரங்கூன் முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று தம்மூருக்குத் திரும்பும் அல்லது தம்மூரினின்றும் வெளி நாடுகட்குச் செல்லும் நங்குலப் பிரமுகர்கள் சென்னையில் வசதியுடன் தங்குதற்கு ஒரு விடுதி பெரிதும் அவசியமாய்க் கருதப்படுவதாலும், இம்மூன்று காரியங்கட்கும் ஒருங்கே உதவக்கூடிய தொரு கட்டடம் நமது கல்வி நிதியின் ஆதரவில் ஸ்தாபிக்கப்படவும் நங்குலத்திலுள்ள செல்வச் சீமான்கள் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டுமென்றும், நங்குலத்தின ரனைவரும் தமது வருவாயில் ரூபாய்க் கொரு தம்பிடி வீதம் உபகாரம் செய்துவர வேண்டுமென்றும், நம் சமூகத்தினரிடை நடைபெறும் விவாக முதலிய சுப சடங்குகளில் வீணாக விரயம் செய்யப்படும் பணத்தை மிகுதிப்படுத்தி நன்கொடை வழங்க வேண்டுமென்றும், நமது வியாபாரிகள் மகமை உண்டியல் முதலிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் இம் மகாநாடு வேண்டிக்கொள்வதுடன், அவ்வாறு வழங்கப்படும் நன்கொடைகளில் ஒரு பகுதி கல்விநிதியையும் மற்றொரு பகுதி கட்டட நிதியையும் சேரவேண்டு மென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

பிரேரே: எம். சண்முக சுந்தர முதலியார்
ஆமோ: தி. நா. சபாபதி முதலியார்

இத் தீர்மானங்களெல்லாம் ஏகமனதாக நிறைவேறின.

---



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

# மூன்றாவது அறிக்கைப் பத்திரம்

26—12—31-இல் சென்னை திருமயிலாப்பூரில் கூடிய மூன்றாவது செங்குந்தர் மகாநாட்டின் போது நடைபெற்ற சங்கத்தின் நான்காவது போதுக்கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கத் தயாரித்தது

முன் அறிக்கைப் பத்திரம் வெளியிட்டு ஏழு மாத காலமே யாவதால் இவ்வறிக்கையில் அதில் கூறியுள்ளதற்கு அதிகமாகக் கூறவேண்டிய விஷயங்கள் வெகுசிலவேயுள.

17—5—31-இல் (ஞாயிற்றுக்கிழமை) பகல் இரண்டு மணிக்குக் காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்தில் இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் திரு. உன்னியூர் R. மாணிக்க முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்த் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மூன்றாவது பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு நாற்பது கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். சங்கத்தின் இரண்டாவது அறிக்கைப் பத்திரமும் ஆரம்ப முதல் 11—5—31-வரை சங்கத்தின் வரவு செலவுக் கணக்கும் நிருவாக சபையின் சார்பாகத் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் பொதுக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப் பெற்றன. அவை அங்கீகாரமானதும் திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்களது அகால மரணத்தினால் காலியாயிருந்த ஓர் உபதலைவர் ஸ்தானத்தில் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தமது சொந்த அலுவல்களை முன்னிட்டுத் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தமது பிரசாரகர் ஸ்தானத்தையும் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் தமது நிருவாக சபை அங்கத்தினர் ஸ்தானத்தையும் ராஜீநாமா செய்து எழுதிய கடிதங்களைப் பல பிரமுகர்கள் அவர்களின் உண்மை உழைப்பை உன்னி வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதன்மேல் அவர்கள் அவற்றை வாபீஸ் வாங்கிக்கொண்டனர். திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களை உபதலைவராக நியமித்தமையால் காலியான பொருட்காப்பாளர் ஸ்தானத்துக்குத் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். சென்ற பொதுக் கூட்டத்துக்கும் இப் பொதுக் கூட்டத்துக்கும், இடையில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற செங்குந்த இளைஞர்களுக்குத் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் வாழ்த்துக் கூறினர். தலைச்சங்க நிருவாக சபையாரின் சிபார்சின்மேல் சங்கத்தின் சட்ட திட்டங்களில் கீழ்க்காணும் மாறுதல்கள் ஏகமனதாகச் செய்யப்பட்டன :

பக்கம் 2 : (7)-இல் 'ஒரு பொது உபகார நிதி ஸ்தாபித்தல்' என்பது 'ஒரு பொது உபகார நிதியையும் இன்ஷூரன்ஸ் கம்பெனியையும் ஸ்தாபித்தல் எனவும் ;

பக்கம் 3: 4-இல் 'பொதுக் கூட்டத்துக்குப் பிரதிநிதிகளாக 'அதன் காரியதரிசியையும் மற்றொரு அங்கத்தினரையும்' என்பது 'அதன் தலைவரையும், காரியதரிசியையும், மற்றும் மூன்று அங்கத்தினரையும்' எனவும் ;

பக்கம் 5: 6-இல் 'இரண்டு அமைச்சர்கள்' என்பது 'ஒரு அமைச்சர்' எனவும்; (இதன்படி மற்ற இடங்களிலும் 'அமைச்சர்கள்' என்பது 'அமைச்சர்' என ஒருமையாகவும்);

பக்கம் 7: கடைசி பத்தியில் 'வருஷ முடிவில் கூடும்' என்பது 'வருஷாந்தர' எனவும் மாற்றப்பட்டன.

பக்கம் 8: பொருட்காப்பாளர் என்னும் தலைப்பில் பொருட்காப்பாளர் கடமைகட்குப் பின்,

"அமைச்சரும் பொருட்காப்பாளரும் தங்கள் பொறுப்புக்களைச் செவ்வனே தாங்கும் வண்ணம் அவர்கட்கு உதவி புரியவும், சங்கக் காரியாலயத்தின் தினசரி விவகாரங்களைக் கவனித்து அதனை ஒழுங்காக வைத்துக்கொள்ளவும், 'மித்திரன்' விஷயங்களைக் கவனிக்கவும் ஒரு குமாஸ்தாவை நிருவாக சபையார் மாதச் சம்பளத்துக்கு நியமித்துக்கொள்ளலாம்" என்பது சேர்க்கப்பட்டது.

அதே பக்கத்தில் 9-மகாநாடு என்னும் தலைப்பில் 'பிரதி வருஷமும்' என்பது 'கூடுமான வரையில் பிரதி வருஷமும்' எனவும், ஒவ்வொரு கிளைச் சங்கமும் 'ஐந்துக்குக் குறையாத' என்பது 'பதின்மருக்குக் குறையாத' எனவும், ஒவ்வொரு கிராமமும் குறைந்தது 'ஒரு பிரதிநிதியை' என்பது 'ஐந்து பிரதிநிதிகளை' எனவும் மாற்றப்பட்டன.

பக்கம் 9: சிறப்பு மகாநாடு என்னும் தலைப்பிலுள்ள விஷயம் நீக்கப்பட்டது.

பக்கம் 10: வரவேற்புச் சபையாரிடம் மிகுதியாக ஏதாவது பொருள் நிற்குமாயின் 'அதைத் தலைச்சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டும்' என்பது 'அதை அவர்கள் விருப்பப்படின் செங்குந்தர் கல்விநிதியிற் சேர்த்துவிடலாம்' என மாற்றப்பட்டது.

### பத்திரிகை

பத்திரிகையின் சந்தா பாக்கிகளை வசூலிக்கும் முயற்சியிலேயே நமது சங்கத்துப் பிரசாரகர்களின் காலத்தில் பெரும்பாகம் இந்த ஏழு மாத காலமாகவும் செலவழிக்கப்பட்டது. பாக்கித் தொகை அதிகமா யிருப்பதால் ஒரே சமயத்தில் ஜில்லாவுக் கொருவராக வசூலுக்குப் புறப்பட வேண்டி யிருக்கிறது. ஆகவே நமது சாசுவத பிரசாரகர்களோடு, திரு. காளி. சண்முக முதலியார் அவர்

களும், திரு. ச. நா. குமரகுரு முதலியாரவர்களும் புதிதாகக் கமிஷன் ஏற்பாட்டில் நியமிக்கப் பெற்றுச் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தோர் உடல் அசௌகரியத்தினால் இன்னும் வசூலைத் தொடங்கவில்லை. இந்நிலையில் நித்திய செலவுக்கும் பணம் அகப்படுவது பல சமயங்களில் துர்லபமாக இருக்கின்றது. எவ்வளவு வேண்டிக்கொண்டாலும் சந்தா பாக்கிகளைத் தாமே மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கும் விவகார ஒழுங்கும் பொறுப்பும் உண்மை யபிமானமும் இன்னும் நம்மவர் பெரும்பாலோருக்குள் அமையாம லிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகவே இருக்கிறது.

பத்திரிகையை நடத்துவதில் திரு. ம. சண்முகசுந்தர முதலியாருக்கு உதவியாகத் திரு. ஜெ. தங்கவேல் முதலியார் பி. ஏ. அவர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

## கட்டட நிதி

வியாபாரம், கோர்ட்டு முதலியவை சம்பந்தமாகவும், ரங்கூன் சிங்கப்பூர் முதலிய ஊர்களுக்குக் கப்பல் ஏறுவதற்காகவும் பல ஜில்லாக்களிலிருந்தும் வருகிற நமது குலத்தவர்கள் தங்குவதற்காகவும், வெளியூர்களிலிருந்து வந்து படிக்கும் நமது மாணவர்கள் இருப்பதற்காகவும் நமது மாகாணத் தலைநகராகிய சென்னையில் வசதியான ஒரு கட்டடம் இல்லாம லிருப்பது ஒரு பெரிய குறையா யிருக்கிறபடியால், அக்குறையை நீக்கும் பொருட்டுச் செங்குந்தர் கட்டட நிதி என ஒரு நிதி ஏற்படுத்திக் கூடிய சீக்கிரத்தில் ஒரு கட்டடத்தை வாங்கவேண்டுமெனக் கருதி, மதராஸ் பாலைய காட் கம்பெனியார் தரும் மகமைப் பணத்தைப் பிரத்தியேகமாகச் சேர்த்து வருகிறோம். செங்குந்த கனவான்கள் அனைவரும் தங்களா லியன்ற பொருளுதவி புரிந்து இந்நோக்கத்தைக் கூடிய சீக்கிரம் நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கிளைச் சங்கங்கள்

தற்போது 88 கிளைச்சங்கங்கள் நமது தலைச் சங்கத்தோடு இணைக்கப்பெற்றுள்ளன. சென்ற பொதுக் கூட்டத்தின் போது இருந்ததைவிட 12 கிளைச்சங்கங்கள் அதிகமாக இருப்பது கவனிக்கற்பாலது. இவற்றின் ஜாபிதா வேறிடத்தில் அச்சிடப் பெற்றுள்ளது.

## கட்சியை யொழிக்க முயற்சி

அசனம்மா பேட்டையில் இரண்டொரு வருஷகாலமாக இருந்துவந்த கட்சிப் பிளவினைச் சென்ற ஐப்பசிமீ நமது நிருவாக சபை அங்கத்தினருள் சிலர் திரண்டு சென்று மத்தியஸ்தம் செய்து சேர்த்து வைத்தனர். இதர இடங்களுக்குச் சென்று இவ்விதத் தொண்டினை இயற்ற அவசியமும் ஆவலும் இருந்தாலும், செல்லக்கூடியவர்களுக்கு அவகாசமும் சௌகரியமும் ஒருங்கே சேர்ந்து வாய்ப்பது கஷ்டமா யிருப்பதால் இவ்வேலை தவக்கமாகின்றது. எனினும், குலமுன்னேற்ற விஷயத்தில் பாடுபட இன்னும் சில குலாபிமானிகள் தோன்றுவார்களாயின், இவ்வேலை வெகு துரிதமாக முடியு மென்றில் ஐயமில்லை.

## சென்சஸ்

சென்சஸ் விஷயமாகப் பிரசுரமாக இருக்கும் துரைத்தன அறிக்கையில் நமது வகுப்பைப்பற்றி வெளியிட வேண்டிய சில விஷயங்களைக் குறித்து விசாரித்து மித்திரன் ஆசிரியருக்குச் சென்சஸ் அதிகாரி எழுதியுள்ள கடிதத்துக்கு அவர் தயாரித்தனுப்பிய பதிலை நிருவாக சபை அங்கீகரித்துள்ளது. அக் குறிப்புக்கள் மார்கழி மித்திரனில் வெளிவந்திருக்கின்றன.

பிறகு தலைவர்க்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## 12—5—81 முதல் 30—11—31 வரை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள்

### வரவு

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆரம்பத்தில் கையிருப்பு | 491—6—9 |
| சந்தா | 1647—9—0 |
| நன்கொடை | 122-10—0 |
| உண்டியல் | 232—6—6 |
| கிளைச்சங்கக் கட்டணம் | 5—0—0 |
| விளம்பரக் கட்டணம் | 30—0—0 |
| பாங்கியிலிருந்து வட்டி வரவு | 291-10—3 |
| போட்டோ விற்பனை | 1—4—0 |
| ஆகமொத்த வரவு | 2821-14—6 |

### செலவு

| | ரூ. அ. பை. |
|---|---|
| உபகாரச் சம்பளம் | 106—0—0 |
| அச்சுக் கூலி | 847—5—0 |
| காகிதம் வாங்கியது | 343—0—0 |
| பத்திரிகை ஸ்டாம்பு | 410—0—0 |
| குடிக்கூலி | 45—0—0 |
| சிப்பந்திச் சம்பளம் | 315—0—0 |
| பிரசாரச் செலவு | 27—0—0 |
| வியாசப் பரிசு | 2—8—0 |
| பிளாக்கு செய்ததற்கு | 13—4—9 |
| மகாநாட்டு அனுமத்துச் செலவு | 8—0—0 |
| ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகட்குச் சந்தா செலுத்தியது | 17—6—0 |
| காரியாலய உபகரணங்கள் | 3—8—0 |
| தபாற் செலவு | 1-10—0 |
| கல்வி நிதிக்குக் கொடுத்த வட்டித் தொகை | 282—2—0 |
| பிரசாரகர் முதலானவர்க்குக் கடன் | 34—2—0 |
| பாங்கியில் கடனுக்குச் செலுத்தியது | 225—0—0 |
| பாங்கியில் இருப்பு | 120—1—0 |
| கையிருப்பு | 20-15—9 |
| ஆக மொத்தம் ரூ. | 2821-14—6 |



## மூன்றாவது மகாநாடு

இரண்டாவது மகாநாட்டுச் சமயம் காஞ்சிபுரத்தில் தீர்மானித்தபடி மூன்றாவது மகாநாட்டினைச் சென்னையில் திருமயிலாப்பூரில் நடத்தத் தலைச்சங்கத்தின் நிருவாக சபையினர் இந்த இரண்டொரு மாத காலமாக முயற்சி செய்து டை காரியத்தையும் இன்று நிறைவேற்றியுள்ளனர்.

## வந்தனோபசாரம்

இந் நிருவாக சபையினர் தம்மைத் தேர்ந்தெடுத்து மூன்று வருட காலமாகத் தம்மிடத்தில் நம்பிக்கை வைத்து நமது சங்கத்தின் பொறுப்புக்களைத் தாங்கும் கௌரவத்தினைத் தமக்கு அளித்ததற்காக இச் சந்தர்ப்பத்தில் இப் பொதுக்கூட்டத்துக்கு வந்தனமளிக்கின்றனர்.

சென்னை 26-12-31 } சொ. முருகைய முதலியார்.<br>பி. செ. மாணிக்கவாசக முதலியார்.<br>அமைச்சர்கள்.

## தலைச்சங்கத்தோடு இணைக்கப் பெற்றுள்ள கிளைச்சங்கங்களின் ஜாபிதா

### சென்னை

1. சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்
2. சென்னைச் செங்குந்த வியாபாரிகள் சங்கம்
3. திருவல்லிக்கேணி வீரவாகு தேவர் சங்கம்
4. திருமயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

### செங்கற்பட்டு ஜில்லா

5. காஞ்சிச் செங்குந்த மஹாஜன சங்கம்
6. காஞ்சிபுரம் ஐயங்கார்பாளையம் சத்திய நெறி இளைஞர் சங்கம்
7. காஞ்சிபுரம் விளக்கொளி கோயில் தெரு செங்குந்த வாலிபர் சங்கம்
8. ஐயன்பேட்டைச் செங்குந்தர் வளர்நிலைக் கழகம்
9. ஐயங்கார்குளம் செங்குந்தர் வளர்நிலைச் சங்கம்
10. மானாம்பதி செங்குந்தர் சங்கம்
11. பெருநகர் செங்குந்தர் சங்கம்
12. உத்திரமேரூர்ச் செங்குந்த குலாபிமான சங்கம்
13. கருங்குழி மேலவலம்பேட்டைச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
14. சிறுகுளத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்
15. பெரிய கயப்பாக்கம் செங்குந்த வாலிபர் சங்கம்
16. மணிமங்கலம் செங்குந்தர் சங்கம்
17. கன்றச்சேரி செங்குந்த வாலிபர் சங்கம்
18. கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்
19. சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம்
20. சைதாப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்
21. வடதிருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கம்
22. சிவபுரம் செங்குந்தர் சங்கம்

### வடஆற்காடு ஜில்லா

23. குருவராஜப் பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்
24. அம்மையப்பட்டுச் செங்குந்தர் சங்கம்
25. தக்கோலம் செங்குந்தர் சங்கம்
26. கொடுங்காலூர் செங்குந்தர் சங்கம்
27. பொன்னூர் செங்குந்தர் சங்கம்
28. அசனம்மாபேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
29. திருப்பத்தூர் செங்குந்தர் சங்கம்
30. மின்னல் உண்மைச் செங்குந்தர் பொதுநலச் சங்கம்
31. கலவைச் சுந்தர விநாயகர் செங்குந்த சங்கம்
32. வடமணப்பாக்கம் செங்குந்தர் சங்கம்
33. மூள்ளிப்பட்டு செல்வ விநாயகர் செங்குந்தர் சங்கம்

### பிரேன்சு இந்தியா

34. பிரென்சு இந்திய செங்குதர் சங்கம், புதுவை
35. காரைக்கால் செங்குந்தர் சங்கம்

### தஞ்சை ஜில்லா

36. திருவாரூர் செங்குந்த மகாஜன சங்கம்
37. மஞ்சட் கொல்லை செங்குந்த மகாஜன சங்கம்
38. திருமருகல் செங்குந்த குலாபிமான சங்கம்
39. வாழுமங்கலம் செங்குந்தர் குலாபிவிருத்தி சங்கம்
40. புத்தகரம் செங்குந்தர் குலாபிவிருத்தி சங்கம்
41. சுந்தரப் பெருமாள் கோவில் சைவ சமரஸ சன்மார்க்க செங்குந்தர் சங்கம்
42. கூரைநாடு செங்குந்தர் சங்கம்

### திருச்சி ஜில்லா

43. உன்னியூர்ச் செங்குந்தர் சங்கம்
44. கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்
45. கரூர் செங்குந்தர் சங்கம்
46. மண்ணச்சநல்லூர் செங்குந்தர் சங்கம்

### சேலம் ஜில்லா

47. திருச்செங்கோடு செங்குந்த மகாஜன சங்கம்
48. மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்
49. சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கம்
50. வேலநத்தம் செங்குந்த மகாஜன சங்கம்
51. பள்ளிபாளையம் சன்மார்க்க செங்குந்தர் சங்கம்

### கோவை ஜில்லா

52. ஊத்துக்குழி உண்மைச் செங்குந்தகுல சங்கம்
53. சென்னிமலை செங்குந்தர் சங்கம்
54. பவானி செங்குந்தர் சங்கம்
55. பவானி செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்
56. மருதவரைநீழல் வடவழி செங்குந்தர் நன்னெறிக் கழகம்

57. கணபதி உண்மைச் செங்குந்த வாலிபர் சங்கம்
58. வள்ளிபுரத்தான் பாளையம் செங்குர் ஒற்றுமைச் சங்கம்
59. ஜம்பைச் செங்குந்த வாலிபர் சங்கம்
60. சித்தோடு செங்குந்தர் சங்கம்
61. வடசித்தூர் சைங்குந்தர் சங்கம்
62. சிவகிரி செங்குந்தர் சங்கம்
63. மொரட்டுப் பாளையம் செங்குந்த வாலிபர் சங்கம்
64. கோவை ஜில்லா செங்குந்த வாலிபர் சங்கம்
65. ராக்யபாளையம் செங்குந்த வாலிபர் சங்கம்

மதுரை ஜில்லா

66. மதுரைச் செங்குந்தர் சங்கம்
67. மதுரைச் செங்குந்த இளைஞர் சங்கம்
68. வண்டியூர் செங்குந்தர் சங்கம்
69. சோழவந்தான் செங்குந்தர் சங்கம்

இராமநாதபுரம் ஜில்லா

70. மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
71. அருப்புக்கோட்டைச் செங்குந்த மகாஜன கிளைச் சங்கம்
72. இராமேஸ்வரம் செங்குந்த பரிபாலன சங்கம்
73. பரமக்குடி செங்குந்தர் சங்கம்
74. ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்
75. தேவகோட்டை செங்குந்தர் சங்கம்
76. இராஜபாளையம் செங்குந்த வாலிபர் வளர் நிலைச் சங்கம்
77. அளகங்குளம் செங்குந்தர் சீர்திருத்த சங்கம்

திருநெல்வேலி ஜில்லா

78. திருநெல்வேலி செங்குந்தர் சங்கம்
79. தென்காசி செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
80. அம்பாசமுத்திரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
81. வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
82. சங்கரநயினர் கோயில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
83. கீழ்ப்பாவூர் செங்குந்தர் சங்கம்

மலையாளம் ஜில்லா

84. கொல்லங்கோடு செங்குந்தர் சங்கம்
85. பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

திருவாங்கூர் இராஜ்ஜியம்

86. கோட்டாறு செங்குந்தர் சங்கம்

சிலோன்

87. யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்குச் செங்குந்த முதலிமார் சங்கம்

தென்னாப்பிரிகா

88. டிரான்ஸ்வால் செங்குந்தர் சங்கம்

## தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெறாத கிளைச்சங்கங்கள்

செங்கற்பட்டு ஜில்லா

1. திருமழிசைச் செங்குந்த வாலிபர் சங்கம்
2. திருப்புலிவனம் செங்குந்தர் சங்கம்
3. உடையார்குடி செங்குந்த மாணவர் சங்கம்
4. லால்பேட்டை செங்குந்த ஞானப்பிரகாச சங்கம்
5. உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்
6. சிந்தாமணி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
7. திருப்பரங்குன்றம் ஸ்ரீ கந்தலீலன் சகோதர செங்குந்த சங்கம்
8. அம்மாபேட்டை செங்குந்த இளைஞர் அபிவிருத்தி சங்கம்
9. சின்னப்பநாய்க்கன் பாளையம் செங்குந்த இளைஞர் சைவசித்தாந்த சங்கம்
10. வெண்ணந்தூர் செங்குந்த குலாபிமான சங்கம்
11. வச்சனம்பாளையம் நன்னெறிச் செங்குந்தர் சங்கம்
12. விளாங்குறிச்சி செங்குந்த வாலிபர் சங்கம்
13. புஞ்சை புளியம்பட்டி செங்குந்தர் சங்கம்
14. குளத்துப்பாளையம் செங்குந்தர் முன்னேற்றக் கழகம்
15. சோரணூர் செங்குந்த வாலிபர் சங்கம்
16. திருமலைராஜன் பட்டணம் செங்குந்த வாலிபர் சங்கம்

---

## வட இலங்கைச் செங்குந்த மகாஜன சங்கம்

### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

மேற்படி சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா அடுத்த ஜூன் மாதம் முதல் வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும். திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள், எம். ஏ., எல். டி., தி. நா. சபாபதி முதலியாரவர்கள், வீ. இரத்தின முதலியாரவர்கள், பி. ஏ., பி. எல்., மா. அ. கனகசபை முதலியாரவர்கள், மா. பா. கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ., பி. இ. முதலிய நங்குலத் தலைவர்கள் தலைச்சங்கத்தின் பிரதிநிதிகளாக இவ்விழாவினுக்கு வருவதாக வாக்களித்துள்ளார்கள். இவ்விழாவில் கொடியேற்றல், தலைமை வகித்தல் முதலிய பெரும்பணிகளையும் அவர்களே ஆற்றச் சம்மதித்துள்ளார்கள். தலைவர்களது அரிய உபந்யாசங்களைக் கேட்டு நல்லுணர்வு பெறுமாறும் ஆசீர்திக்குமாறும் திரண்டு வந்து குழுமும்படிப் பல பாகங்களிலுமுள்ள செங்குந்தச் சோதரர்களனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

சரியான தேதி, இடம் முதலிய குறிப்புக்கள் பின்னர் விளம்பரம் செய்யப்படும்.

இங்ஙனம்:
காரியதரிசிகள்,
வட இலங்கைச் செங்குந்த மகாஜன சங்கம்.

---



## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டு வரவு செலவு கணக்கு

### தரிவரி வசூல் வரவு

காஞ்சீபுரம்

| | | | |
|---|---|---|---|
| **கிருஷ்ணராயர் தெரு** | | | |
| முனிகாளத்தி முதலியார் | 14 | 0 | 0 |
| தாண்டவராய முதலியார் | 8 | 8 | 0 |
| கச்சபாலய முதலியார் | 16 | 8 | 0 |
| மு. பரமாநந்த முதலியார் | 7 | 8 | 0 |
| முத்துகாளத்தி முதலியார் | 13 | 0 | 0 |
| அப்பாயி முதலியார் | 5 | 8 | 0 |
| **திருமேற்றளித் தெரு** | | | |
| பு. ஆறுமுக முதலியார் | 39 | 0 | 0 |
| சரவண முதலியார் | 16 | 8 | 0 |
| **சோளீஸ்வரன் கோவில் தெரு** | | | |
| வினைதீர்த்தான் முதலியார் | 27 | 8 | 0 |
| கச்சியப்பன் தெருவார் | 22 | 0 | 0 |
| வடவண்டை ஒற்றவாடை | 6 | 0 | 0 |
| திருவேகம்பன் தெருவார் | 50 | 0 | 0 |
| புதுத்தெருவார் | 24 | 0 | 0 |
| மாதனம் பாளையத் தெருவார் | 52 | 8 | 0 |
| **திருமல் ராஜா தெரு** | | | |
| தா. வேலாயுத முதலியார் | 16 | 0 | 0 |
| வெ. மு. முனிசாமி முதலியார் | 10 | 8 | 0 |
| **அக்கசாம் பாளையத் தெரு** | | | |
| தணிகைமலை முதலியார் | 31 | 8 | 0 |
| முனிசாமி முதலியார் | 28 | 0 | 0 |
| லிங்கப்பய்யர் தெருவார் | 25 | 8 | 0 |
| நடுத்தெருவார் | 38 | 0 | 0 |
| ஏகமுகான் தெருவார் | 41 | 0 | 0 |
| புதுப்பாளையத் தெருவார் | 70 | 0 | 0 |
| செங்கல்வராயன் ஒற்றவாடை | 27 | 0 | 0 |
| மண்டபத் தெருவார் | 47 | 8 | 0 |
| **ஆலடிப்பிள்ளையார் கோவில் தெரு** | | | |
| தி. தேவராய முதலியார் | 37 | 0 | 0 |
| ம. சு. கந்தசாமி முதலியார் | 21 | 0 | 0 |
| **வளத்தீஸ்வரர் கோவில் தெரு** | | | |
| மு. காளத்தி முதலியார் | 33 | 8 | 0 |
| அ. செல்ல பெருமா முதலியார் | 20 | 0 | 0 |
| தண்டு. நாராயணசாமி முதலியார் | 8 | 0 | 0 |
| **காவலாந் தெரு** | | | |
| முத்து முனியப்ப முதலியார் | 1 | 0 | 0 |
| **கரிக்கினிலமர்ந்தவள் வீதி** | | | |
| தா. அருணாசல முதலியார் | 18 | 0 | 0 |
| மு. கச்சபாலய முதலியார் | 19 | 0 | 0 |
| ராஜகோபால் முதலியார் | 1 | 8 | 0 |
| **அய்யங்கார் பாளையம்** | | | |
| கு. ச. கதிர்வேல் முதலியார் | 27 | 0 | 0 |
| அப்பாசாமி முதலியார் | 25 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| **முல்லா பாளையம்** | | | |
| ராகவ முதலியார் | 7 | 0 | 0 |
| பெருமா முதலியார் | 2 | 0 | 0 |
| நாகப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| முனிசாமி முதலியார் | 2 | 0 | 0 |
| **அழுதுபடித் தெரு** | | | |
| சு. ஆறுமுக முதலியார் | 10 | 0 | 0 |
| திருக்காலிமேடு கிராமத்தார் | 3 | 0 | 0 |
| **ஐயம்பேட்டை** | | | |
| **கந்தப்பார் வீதி** | | | |
| க. முருகப்ப முதலியார் | 80 | 8 | 0 |
| தொ. முனிகாளத்தி முதலியார் | 25 | 0 | 0 |
| கை. காமகோட்டி முதலியார் | 20 | 0 | 0 |
| **நடுத்தெரு** | | | |
| கு. மு. அண்ணாமலை முதலியார் | 40 | 0 | 0 |
| குப்புசாமி முதலியார் | 30 | 0 | 0 |
| **வடக்குத் தெரு** | | | |
| ஆ. வேலு முதலியார் | 11 | 8 | 0 |
| முத்துகாளத்தி முதலியார் | 40 | 0 | 0 |
| **கருக்குப்பேட்டை** | | | |
| அகஸ்தீஸ்வர முதலியார் | 5 | 0 | 0 |
| **திம்மம்பேட்டை** | | | |
| நல்லாண்டி முதலியார் குமாரசாமி முதலியார் | 15 | 0 | 0 |
| **நாய்க்கன்பேட்டை** | | | |
| கு. துரைசாமி முதலியார் ஏ. கந்தசாமி முதலியார் | 50 | 0 | 0 |
| **ராஜாம்பேட்டை** | | | |
| தி. க. முனிசாமி முதலியார் | 7 | 0 | 0 |
| திருக்காமு முதலியார் க. நடேச முதலியார் | 7 | 0 | 0 |
| **ஏகனும்பேட்டை** | | | |
| ஏ. கந்தசாமி முதலியார் | 50 | 0 | 0 |
| **களியப்பேட்டை** | | | |
| சின்னசாமி முதலியார் | 7 | 8 | 0 |
| **பழைய சீவரம்** | | | |
| துரைசாமி முதலியார் | 15 | 0 | 0 |
| **சேர்க்காடு** | | | |
| M. குருசாமி முதலியார் | 50 | 0 | 0 |
| **சிவமங்கலம்** | | | |
| வாழவந்தான் முதலியார் | 20 | 0 | 0 |
| மையூர் மாமண்ரே் வடபாதி | 19 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| **ஓக்காட்டுப்பேட்டை** | | | |
| அண்ணுவேல் முதலியார் கச்சிவேல் முதலியார் | 15 | 0 | 0 |
| **ஐயங்கார் குளம்** | | | |
| தொப்ப முதலியார், சொக்கலிங்க முதலியார் | 15 | 8 | 0 |
| பிச்சநாயக முதலியார் | 14 | 0 | 0 |
| **பெருநகர்** | | | |
| B. சிதம்பர முதலியார் | 31 | 0 | 0 |
| **மானும்பதி** | | | |
| மேல் தெரு சோமசுந்தர முதலியார் | 13 | 8 | 0 |
| ,, முருகப்ப முதலியார் | 20 | 0 | 0 |
| சந்நிதித் தெரு | 30 | 0 | 0 |
| தண்டரை | 4 | 0 | 0 |
| விருர். T. மாணிக்க முதலியார் | 5 | 0 | 0 |
| தேர்த்துறை. முருகப்ப முதலியார் | 5 | 0 | 0 |
| **உத்திரன்மேரூர்** | | | |
| தி. துரைசாமி முதலியார், கந்தசாமி முதலியார் | 20 | 0 | 0 |
| குருநாத முதலியார் | 15 | 0 | 0 |
| திருப்புலிவனம் | 10 | 0 | 0 |
| **திருமயிலாப்பூர்** | | | |
| வெள்ளீஸ்வரர் தேவஸ்தான சபையார் | 75 | 0 | 0 |
| திருநாகேஸ்வரம் கிராமத்தார் | 10 | 0 | 0 |
| சைதாப்பேட்டை கிராமத்தார் | 10 | 0 | 0 |
| சைதாப்பேட்டை காரணீஸ்வர கிராம S. ரத்தினவேலு முதலியார் | 50 | 0 | 0 |
| திருமழிசை கிராமத்தார் | 30 | 0 | 0 |
| காஞ்சிவரம். கு. வேதாசல முதலியார் | 5 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 1744 | 8 | 0 |

## நன்கொடை வரவு

### காஞ்சிபுரம்

| | | | |
|---|---|---|---|
| **ஆடிசன்பேட்டை** | | | |
| ம. கெங்காதர முதலியார் | 100 | 0 | 0 |
| கா. அ. பழனிச்சாமி முதலியார் | 50 | 0 | 0 |
| வெ. மு. கந்தசாமி முதலியார் | 25 | 0 | 0 |
| மா. ந. சோமசுந்தர முதலியார் | 25 | 0 | 0 |
| மு. காளத்தி முதலியார் | 25 | 0 | 0 |
| மு. சாமிநாத முதலியார் | 25 | 0 | 0 |
| பி. செ. சம்பந்த முதலியார் | 15 | 0 | 0 |
| க. சபாபதி முதலியார் அண்டு சன்ஸ் | 15 | 0 | 0 |
| வீ. ரத்தின முதலியரர் | 10 | 0 | 0 |
| வி. மோகன முதலியார் த. கதிர்வேல் முதலியார் | 10 | 0 | 0 |
| வே. முனிசாமி முதலியார் | 10 | 0 | 0 |
| மு. முனிசாமி முதலியார் | 10 | 0 | 0 |
| முனியப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| வெங்கடாசல முதலியார் | 5 | 0 | 0 |
| துரைசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| வீ. துரைசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| **விளக்கொளிப் பெருமாள் வீதி** | | | |
| அ. பச்சைப்ப முதலியார் | 15 | 0 | 0 |
| மு. பச்சையப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| **நாராயணம் பாளையத் தெரு** | | | |
| வெ. மு. முருகேச முதலியார் | 20 | 0 | 0 |
| **ஆலடிப்பிள்ளையார் கோவில் தெரு** | | | |
| அம்பாணி சுப்பிரமணிய முதலியார் | 5 | 0 | 0 |
| வீ. காளத்தி முதலியார் | 10 | 0 | 0 |
| த. மு. ஆறுமுக முதலியார் | 5 | 0 | 0 |
| **கரிக்கினிலமர்ந்தவள் வீதி** | | | |
| மு. கச்சபாலய முதலியார் | 10 | 0 | 0 |
| **மண்டபத் தெரு** | | | |
| தீ. தா. சண்முக முதலியார் | 3 | 0 | 0 |
| **புதுப்பாளையத் தெரு** | | | |
| சின்ன குழந்தை முதலியார் | 20 | 0 | 0 |
| **அக்கணம் பாளையத் தெரு** | | | |
| ம. த. சாமிநாத முதலியார் | 25 | 0 | 0 |
| **அழதுபடித் தெரு** | | | |
| திருவேங்கட முதலியார் | 10 | 0 | 0 |
| **பெரிய காஞ்சிபுரம்** | | | |
| பக்கிரிசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| உ. சு. ச. சா. நடேச முதலியார் | 1 | 0 | 0 |
| ஆண்டவன் குமாரசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| **மூல்லா பாளையம்** | | | |
| அ. பெருமா முதலியார் | 5 | 0 | 0 |
| கன்னியப்ப முதலியார் | 2 | 0 | 0 |
| **அய்யங்கார் பாளையம்** | | | |
| கு. ச. கதிர்வேல் முதலியார் | 5 | 0 | 0 |
| சி. ராகவ முதலியார் | 5 | 0 | 0 |
| கன்னியப்ப முதலியார் | 5 | 0 | 0 |
| அப்பாசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| ரா. குப்புசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| **ஐயம்பேட்டை** | | | |
| கு. மு. அண்ணாமலை முதலியார் | 10 | 0 | 0 |
| கை. காமகோட்டி முதலியார் | 10 | 0 | 0 |
| கச்சபாலய முதலியார் | 5 | 0 | 0 |
| சாமிநாத முதலியார் | 2 | 0 | 0 |
| ம. வேதகிரி முதலியார் | 8 | 14 | 0 |
| **ஏகனும்பேட்டை** | | | |
| எ. கந்தசாமி முதலியார் | 10 | 0 | 0 |
| சேர்க்காடு. M. குருசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| அ. முத்துகாளத்தி முதலியார் | 5 | 0 | 0 |
| **பழைய சீவரம்** | | | |
| R. ராஜு முதலியார் | 5 | 0 | 0 |
| அ. முனிசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| திருக்கழுக்குன்றம். மு. முத்து முனியப்ப முதலியரர் | 15 | 0 | 0 |
| செம்பாக்கம். சிற்றம்பல முதலியார் | 5 | 0 | 0 |
| ,, வெ. ரத்தின முதலியார் | 10 | 0 | 0 |



| | | | |
|---|---|---|---|
| மானும்பதி கு. தானப்ப முதலியார் மு. மாணிக்க முதலியார் | 10 | 0 | 0 |
| ,, கு. முருகப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| உத்திரன்மேரூர். பெ. கந்தசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| **பழவேற்காடு** | | | |
| தி. லோகநாத முதலியார் | 2 | 8 | 0 |
| தி. கு. ஜடாராஜ முதலியார் | 1 | 0 | 0 |
| ரகுபதி முதலியார் | 0 | 8 | 0 |
| **சென்னை** | | | |
| **திருவல்லிக்கேணி** | | | |
| S. P. அய்யாசாமி முதலியார் | 15 | 0 | 0 |
| S. P. கந்தசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| **திருமயிலை** | | | |
| சு. குழந்தைவேல் முதலியார் | 5 | 0 | 0 |
| ம. தனகாளத்தி முதலியார் | 2 | 0 | 0 |
| M. பரமகுருநாத முதலியார் | 5 | 0 | 0 |
| M. சரவண முதலியார் | 5 | 0 | 0 |
| **எழும்பூர்** | | | |
| A. சரவண முதலியார் | 5 | 0 | 0 |
| S. M. வெங்கடாசல முதலியார் | 2 | 0 | 0 |
| தாண்டவராய முதலியார் | 1 | 0 | 0 |
| **சிந்தாதிரிப்பேட்டை** | | | |
| தி. ரா. வடிவேல் முதலியார் | 3 | 0 | 0 |
| வசவேச முதலியார் | 1 | 0 | 0 |
| S. G. நாகரத்தின முதலியார் | 1 | 0 | 0 |
| தில்லைநாயக முதலியார் | 1 | 0 | 0 |
| **திருநாகேஸ்வரம்** | | | |
| க. தெய்வசிகாமணி முதலியார் | 40 | 0 | 0 |
| **துண்ணைத்தூர்** | | | |
| டி. டி. மாணிக்க முதலியார் | 7 | 0 | 0 |
| க. குழந்தைவேல் முதலியார் | 10 | 0 | 0 |
| **ஆநக்காபுத்தூர்** | | | |
| ஆ. விஜயரங்க முதலியார் | 5 | 0 | 0 |
| தியாகராய முதலியார் | 2 | 0 | 0 |
| ஆ. பி. முருகேச முதலியார் | 3 | 0 | 0 |
| **மணிமங்கலம்** | | | |
| கா. ந. கிருஷ்ணசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| N. வைத்தியலிங்க முதலியார் | 5 | 0 | 0 |
| **கூடுவாஞ்சேரி** | | | |
| கு. வேதாசல முதலியார் | 5 | 0 | 0 |
| வரதப்ப முதலியார் | 4 | 0 | 0 |
| **அய்யங்கார்குளம்** | | | |
| பால கிஷ்டப்ப முதலியார் | 1 | 0 | 0 |
| **கருங்குழி மேலவலம்பேட்டை** | | | |
| நாகசாமி முதலியார் | 1 | 0 | 0 |
| **பனப்பாக்கம்** | | | |
| பு. ச. கோவிந்த முதலியார் | 2 | 0 | 0 |
| சாந்தா ரா. மாணிக்க முதலியார் | 50 | 0 | 0 |
| சாந்தா. ரா. தங்கவேல் முதலியார் | 150 | 0 | 0 |
| **தக்கோலம்** | | | |
| A. R. செல்லப்ப முதலியார் | 50 | 0 | 0 |
| **சைதாப்பேட்டை** | | | |
| **காரணி** | | | |
| S. ரத்தினவேல் முதலியார் | 10 | 0 | 0 |
| **தோப்பேட்டை** | | | |
| S. சடையப்ப முதலியார் | 30 | 0 | 0 |
| அ. அங்கு முதலியார் | 50 | 0 | 0 |
| பெஸ்ட் பளையகாட் கம்பெனி | 100 | 0 | 0 |
| S. T. நடேச முதலியார் | 5 | 0 | 0 |
| தி. துரைசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| M. குமாரசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| M. சமரபுரி முதலியார் | 5 | 0 | 0 |
| தொ. துரைசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| பி. செ. சம்பந்த முதலியார் மூலம் வசூலானது (விவரமில்லை) | 21 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 1268 | 14 | 0 |

### வரவு

| | | | |
|---|---|---|---|
| தரிவரி வசூல் | 1744 | 8 | 0 |
| நன்கொடை வரவு | 1268 | 14 | 0 |
| டிக்கட் விக்கிரய வரவு | 214 | 7 | 9 |
| கடை வாடகை வரவு | 8 | 8 | 0 |
| சாமான் விக்கிரய வரவு | 66 | 9 | 8 |
| மொத்த வரவு ரூ. | 3302 | 15 | 0 |

### செலவு

| | | | |
|---|---|---|---|
| பிரயாணச் செலவு | 491 | 3 | 5 |
| தபால் செலவு | 66 | 0 | 6 |
| சாமான் (Stationaries) | 78 | 5 | 0 |
| பந்தல் & அலங்காரம் | 266 | 11 | 0 |
| கச்சபேஸ்வரர் கோவில் ரிபேர் செலவு | 77 | 15 | 0 |
| புஷ்பம், மேளம், லைட், ஊர்வலம் | 204 | 3 | 6 |
| சாப்பாட்டுச் செலவு | 918 | 2 | 8 |
| தொண்டர்கள் உடுப்பு | 107 | 8 | 0 |
| அச்சுக்கூலி | 356 | 3 | 0 |
| வாடகை | 20 | 0 | 0 |
| கூலி முதலியன | 134 | 15 | 0 |
| தனி நபர்களிடம் பற்று | 19 | 0 | 0 |
| இதர செலவுகள் | 67 | 8 | 9 |
| மூன்றாவது மகா நாட்டிற்குத் தந்தது | 125 | 0 | 0 |
| சென்ட்ரல் பாங்கியில் இருப்பு | 5 | 0 | 0 |
| கையிருப்பு ரொக்கம் | 365 | 3 | 2 |
| ஆக மொத்தம் செலவு ரூ. | 3302 | 15 | 0 |

# தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை
# தர்மநிதிச் சீட்டு

புக் நெ. உ டிக்கட் நெ.

## தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை தர்ம நிதி பிரைஸ் சீட்டு

சீட்டு விற்பனை முடியும் தேதி **30-3-32** பிரைஸ் எடுக்கும் தேதி **30-4-32**

மொத்தப் பிரைஸ்கள் **849** சீட்டு ஒன்றுக்கு **4** அணா

1-வது பிரைஸ் ரூ. **500** 2-வது ரூ. **250** 3-வது ரூ. **100**

| | | | |
|---|---|---|---|
| 4-வது பிரைஸ் ரூ. **50** ஆக | 2-க்கு | ரூ. | **100** |
| 5-வது பிரைஸ் ரூ. **25** ஆக | 4-க்கு | ரூ. | **100** |
| 6-வது பிரைஸ் ரூ. **10** ஆக | 10-க்கு | ரூ. | **100** |
| 7-வது பிரைஸ் ரூ. **5** ஆக | 30-க்கு | ரூ. | **150** |
| 8-வது பிரைஸ் ரூ. **3** ஆக | 100-க்கு | ரூ. | **300** |
| 9-வது பிரைஸ் ரூ. **2** ஆக | 200-க்கு | ரூ. | **400** |
| 10-வது பிரைஸ் ரூ. **1** ஆக | 500-க்கு | ரூ. | **500** |

அதிர்ஷ்டப் பெயர் ______________________

பெயரும் விலாசமும் ______________________

சீட்டு விற்பவர் கையெழுத்து ______________________

☞ கீழ்வருவனவற்றை நன்கு கவனிக்கவும்:—

### சட்ட திட்டங்கள்

(1) இந்த லாட்டரிக்கு வசூலாக வேண்டிய பூராத் தொகை ரூ. 6000-ஆறாயிரம் ரூபாயும் வசூலாகாது குறையுமானால் வீதப்படி பிரைஸ் தொகையும் குறைக்கப்படும்.

(2) தங்கள் சீட்டின் நெம்பர் கணக்கில் பதிவானதை அறிய விரும்புவோர் புக் நெம்பர் சீட்டின் நெம்பர் இவைகளை ரிப்ளைகார்டில் எழுதி யனுப்பி விபரம் தெரிந்துகொள்ளலாம்.

(3) பிரைஸ்கள் 30-4-32 தேதியில் தேவகோட்டை செங்குந்தர் மேலத் தெரு, தண்டபாணி கோயிலில் எடுக்கப்படும். பிரைஸ் விழுந்தவர்களுக்கு அதன் விபரம் ஒரு வார காலத்திற்குள் அறிவிக்கப்படும். பிரைஸ் விழுந்தவர்கள் தகவல் கிடைத்தவுடன் தங்கள் சீட்டை அடியில்கண்ட விலாசத்திற்குத் தங்கள் முழு விலாசத்துடன் அனுப்பினால் 15 தினங்கட்குள் மணியார்டர் கமிஷன் நீக்கி மிகுதிப்பணம் அனுப்பப்படும்.

(4) மணியார்டர், இன்சூர் தபால்கள் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை, தேவகோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

### சீட்டு விற்போர் கவனிக்க வேண்டியவை

(1) விற்பனை செய்பவர்கள கமிஷன் டிக்கட் இரண்டும் எடுத்துக்கொண்டு செலவு கழிக்காமல் புஸ்தகம் 1-க்கு ரூ. 5 அனுப்பவேண்டும்.

(2) விற்பனை யானதும் டேப்ளிகேட்டுகளையும் சீட்டுத் தொகைகளையும் ஒரே கவரில் இன்சூர் செய்து உடனே வேண்டிய புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்ய வேண்டியது.

(3) 30-4-32 பிரைஸ்கள் எடுக்கும் தினம் ஆதலால் தொகையையும் டேப்ளிகேட்டுகளையும் 30-3-32உக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டியது.

S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார்.
ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை, தேவகோட்டை.

இச்சீட்டு, பொதுநல நோக்க மிகுந்த நங்குலச் சீலரான உயர் திரு. S. P. V. P வாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் நடத்தப்படுகின்றது. ஏழை எளியோர்க்கு நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை யளிப்பதற்காக நடைபெறும் இதனைப் புண்ணிய சீலர்களனைவரும் ஆதரித்திடுவரென நம்புகிறோம்.

(ப - ர்.)



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நான்காவது பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 26-12-31 அன்று பகல் 2-மணிக்கு மகாநாட்டுக் கொட்டகையிலேயே திருவாளர் சு. குழந்தைவேல் முதலியாரவர்கள் தலைமையிற் கூடியது. அதில்,

(1) மூன்றாவது அறிக்கைப் பத்திரமும் வரவு செலவுக் கணக்குகளும் அங்கீகரிக்கப்பெற்றன. (இவை முன் பக்கங்களில் பிரசுரமாயுள்ளன).

(2) கீழ்க்கண்ட கனவான்கள் சங்க உத்தியோகஸ்தர்களாகவும் நிருவாகசபை அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்:—

### தலைச்சங்கத்தின் புதிய நிருவாக சபை அங்கத்தினர்

#### தலைவர்

திரு. ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள்,
B. A., B. L., Chevalier De La Legion D' Honneur,
புதுவை அரசாங்க மந்திரி, புதுவை.

#### உபதலைவர்கள்

,, சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள்,
5, சடையப்ப முதலி தெரு, திருமயிலாப்பூர், சென்னை.

,, தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
மடப்புரம், திருவாரூர், தஞ்சை ஜில்லா.

,, S. இரத்தினவேலு முதலியார் அவர்கள்,
கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை.

,, V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள்,
ஜின்னிங் பாக்டரி, ஜவுளி, கோயம்புத்தூர்.

,, S. சடையப்ப முதலியார் அவர்கள்,
தோப்பேட்டை, சைதாப்பேட்டை, சென்னை.

#### அமைச்சர்

,, ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள், M.A., L.T.,
சுந்தர நிலையம், பச்சையப்பாஸ் ஹாஸ்டல் ரோட், சேத்துப்பட்டு, சென்னை.

#### பொக்கிஷதாரர்

,, மா. அ. கனகசபை முதலியா ரவர்கள்,
வெள்ளாளத் தெரு, கோடம்பாக்கம், சென்னை.

#### இதர அங்கத்தினர்

1. திரு. மா. பா. கந்தசாமி முதலியாரவர்கள், B. A., B. E., காமாட்சி விலாசம், நெ. 7, போஸ்டல் காலனி, மாம்பலம், சென்னை.
2. திரு. மு. சரவண முதலியா ரவர்கள், தெங்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு, திருமயிலாப்பூர், சென்னை.
3. ,, A. தக்ஷிணாமூர்த்தி முதலியாரவர்கள், பி.ஏ; 2/29, ஆதம் தெரு, திருமயிலாப்பூர், சென்னை.
4. ,, D. C. கந்தசாமி முதலியா ரவர்கள், விளக்கொளி கோயில் தோப்புத் தெரு, காஞ்சிபுரம்.
5. ,, மா. பரமகுருநாத முதலியா ரவர்கள், 1/14, பிச்சு பிள்ளைத் தெரு, திருமயிலாப்பூர், சென்னை.
6. ,, ம. த. சாமிநாத முதலியா ரவர்கள், நகரசபைத் தலைவர், அக்கணம்பாளையத் தெரு, காஞ்சிபுரம்.
7. ,, P. S. தீர்த்தகிரி முதலியா ரவர்கள், மாணும்பதி டிரேடிங் கம்பெனி, நுங்கம்பாக்கம், சென்னை.
8. ,, A. தக்ஷிணாமூர்த்தி முதலியா ரவர்கள், பெரிய தெரு, திருநாகேஸ்வரம், குன்னத்தூர், செங்கற்பட்டு ஜில்லா.
9. ,, A. R. செல்லப்ப முதலியா ரவர்கள், சின்ன தெரு, தக்கோலம், அரக்கோணம் தாலுக்கா.
10. ,, K. S. குப்புசாமி முதலியா ரவர்கள், கிராம முன்சீப், அசனம்மா பேட்டை போஸ்ட், ஆற்காடு.
11. ,, K. மாரிமுத்து முதலியா ரவர்கள், ஜவுளி வியாபாரம், அம்மாபேட்டை, சேலம்.
12. ,, V. V. C. V. நடேச முதலியா ரவர்கள், கௌரவ மாஜிஸ்ட்ரேட், ஜின்னிங் பாக்டரி, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா.
13. ,, மொ. க. குழந்தையப்ப முதலியாரவர்கள், முராட்டுப் பாளையம், திருப்பூர் வழி.
14. ,, T. சங்கரபாண்டிய முதலியா ரவர்கள், காரியதரிசி, செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், சங்கரநயினார் கோயில்.
15. ,, T. P. K. ஆறுமுக முதலியா ரவர்கள், 'சுந்தர விலாசம்', தென்காசி.
16. ,, R. வேலாயுத முதலியா ரவர்கள், ஜவுளி வியாபாரம், கீழ்த் தெரு, அம்பாசமுத்திரம்
17. ,, V.S. சங்கரசுப்பிரமணிய முதலியா ரவர்கள், B. A., B. L., வக்கீல், வீரராகவபுரம், திருநெல்வேலி.
18. V. M. மொட்டையப்ப முதலியா ரவர்கள், கதர் ஜவுளி வியாபாரம், ஈரோடு.

19. திரு. வீ. இரத்தின முதலியாரவர்கள், B.A., B.L., 18, செங்கழுநீர்ப் பிள்ளையார் கொயில் தெரு, திருமயிலாப்பூர், சென்னை.

20. ,, E. முனியப்ப முதலியாரவர்கள், காரியதரிசி, செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், மண்டல மாணிக்கம், இராமநாதபுரம் ஜில்லா.

21. ,, A.K.C. சிவசுப்பிரமணிய முதலியாரவர்கள், யூனியன் பிரசிடென்ட், அருப்புக்கோட்டை, ராமநாதபுரம் ஜில்லா.

22. ,, R. மாணிக்க முதலியா ரவர்கள், மிராஸ்தார், உன்னியூர், காட்டுப்புத்தூர் போஸ்ட்.

23. ,, A. அண்ணாமலை முதலியா ரவர்கள், வீவிங் அண்டு நிட்டிங் பாக்டரி, கரூர்.

24. ,, P. வேலாயுத முதலியா ரவர்கள், ஜவுளி, கோட்டாறு, நாகர் கோயில்.

25. ,, C. பன்னிருகைப் பெருமாள் முதலியா ரவர்கள், B. A., B. L., தமிழ்ப் போதகாசிரியர், சயன்ஸ் காலேஜ், திருவநந்தபுரம்.

26. " P. V. முத்துக்கருப்ப முதலியா ரவர்கள், காரியதரிசி, செங்குந்தர் சங்கம், தல்லாக்குளம், மதுரை.

27. ,, பழனிக்குமார முதலியா ரவர்கள், தலைவர், செங்குந்த இளைஞர் சங்கம், தல்லாக்குளம், மதுரை.

28. ,, C. P. ராமன் முதலியாரவர்கள், B.A., B.L., 1 A, நல்லப்பன் தெரு, திருமயிலாப்பூர், சென்னை.

29. ,, S. முத்துக்குமாரசாமி முதலியா ரவர்கள், தெற்குப் பாவடி, கொல்லங்கோடு தென்மலபார்.

(3) 1932-௵ மார்ச்சு௴ 31-ம் தேதிக்குள் சங்கத்தை ரிஜிஸ்டெர் செய்ய ஏற்பாடாக வேண்டுமெனத் தீர்மானமானது.

(4) புதிதாகச் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற செங்குந்த பட்டதாரிகள் வாழ்த்தப்பட்டனர்.

ம. சண்முகசுந்தரம்,
அமைச்சர்.

---

## நன்கொடை

வட ஆற்காடு ஜில்லா, சித்தாத்தூர் ஆ. சுருணேச முதலியார் மருமகள் செல்லம்மாள் புஷ்பணி முகூர்த்தத்தில் தலைச் சங்கத்திற்குக் காஞ்சி காளி ஷண்முக முதலியார் மூலம் நன்கொடையாக யளித்த தொகை ரூ. 0 8 0

மோக்ஷதீப ஆராதனை

கலியாணம் பூண்டி, மணவை தமிழ்ப்புலவர் குமரகுரு முதலியார் தமது புதல்வி சரவணாம்பிகை, பிரஜோற்பத்தி௵ ஐப்பசி௴ 15௳ சிவலோகப் பிராப்தம் ஆனதன் நிமித்தம் 8-11-31-ல் நடத்திய மோக்ஷ தீபாராதனையில் மித்திரனுக்கு நன்கொடை அளித்தது. ரூ. 0—4—0

அன்னார் அது குறித்து வரைந்த வெண்பா:—

சொற்பிரஜோற்பத்தி துலாம் நடுவி லாதிரைநாள்
நற்சரவணாம்பிகை வான் நண்ணிடவே—கற்புடையீர்
இல்வாழ்வை நீத்தமையால் இம்மித்திரன் மூலம்
நல்வாழ்த்துக் கூறிடுவோம் நாம்.

---

அரிய சந்தர்ப்பம்!

உடனே முந்துங்கள்!

# செங்குந்த மித்திரன்

பழைய தொகுதிகள் சொற்ப பிரதிகளே யுள்ளன

அரிய விஷயங்கள்! பௌண்டு பிரதிகள்! அழகிய கட்டடம்!

தபாற் கூலி யுட்பட ரூ. 1-4-0

☛ வேண்டுவோர் முன்பணம் அனுப்பவேண்டும்.

# செங்குந்த மித்திரன்

## ஐந்தாந் தொகுதி

(பிரமோதூத ௵ தை முதல் பிரசோற்பத்தி மார்கழி வரை)

# 1931

## பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| அருட்குழவி | 40 |
| ஆன்றோர் அமுத மொழிகள் | 42, 212, 259, 291 |
| இந்திய சாலியர் மகாநாடு | 106 |
| இந்தியர் கப்பல் தொழில் | 168 |
| இந்தியாவின் தற்கால ஆட்சிமுறை | 229 |
| இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம் (தேவி மூர்த்தம்) | 179 |
| இலகு வைத்தியம் | 289, 322 |
| இளம் விதவைகள் | 184 |
| உலக நிலக்கடலை வர்த்தகம் | 28 |
| எலும்பைக் கொண்டே உயிரைப் படைத்தல் | 171 |
| என்றும் மறையாத இன்மொழிகள் | 290 |
| ஐ. சி. எஸ். வர்க்கத்தினரின் சம்பளம் | 292 |
| ஒரு சம்பாஷணை | 173 |
| ஒழுக்கப் பகுதி | 165 |
| ஒழுக்க நூல் | 258 |
| கடவுள் வாழ்த்து | 55, 115, 161, 198, 225, 278, 305 |
| களிமண் பாரை | 91 |
| கட்சி பேதங்களும் அவற்றை யொழிக்கும் முறைகளும் | 209, 240 |
| காஞ்சிபுரத்தின் தலமான்மியம் | 10 |
| காந்தியார் படலம் | 216, 264, 295, 325 |
| காளையருக்கொரு கனிமொழி | 239 |
| குன்றைக் குழாங்கல் லாக்கினேன் | 287 |
| கைத்தரியை ஆதரியுங்கள் | 261 |
| கொடியேற்ற விழாக் கும்மி | 183 |
| கோவை ஜில்லா வாலிபர் சங்க 2-வது ஆண்டு நிறைவு விழா | 86 |
| சத்துள்ள அரிசி | 99 |
| சமூக சீர்திருத்தம் | 203 |
| சிநீமாவின் கதை | 67 |
| சிறுகதை—பாரிச வாய்வும் பறந்தோடியதே | 206 |
| ,, குணபூஷணி | 288 |
| ,, இன்பவல்லி | 281 |
| சிறுகதைச் செய்யுட் கோவை | 176 |
| சிறு குறும்பு | 218 |
| செங்குந்த சமூகத்தைப்பற்றிய குறிப்புக்கள் | 309 |
| செங்குந்தர் கல்விநிதி—அறிக்கைகள் | 276 |
| ,, ,, உபகாரச் சம்பள விளம்பரம் | 168, 228 |
| ,, ,, காப்பாளர் சபை முதல் கூட்டம் | 46 |
| ,, ,, ,, 2-வது கூட்டம் | 159 |

செங்குந்தர் கிளர்ச்சி ... 48, 85, 110, 192, 217, 267, 302, 333
செங்குந்தர் இரண்டாவது மகாநாடு ... ... 89, 114
செங்குந்தரும் இரங்கூன் பிரயாண வழியில் ஏற்படும் சங்கடங்களும் 109
செங்குந்தரும் சிதம்பர சபாநாயகர் திருவாசல் காலைச் சந்தி கட்டளையும் 5
செங்குந்த யாத்திரைவாசி ... ... 18, 246, 301, 319
தங்க நிர்ணயம் தமோறியது ... ... 260
தலைச்சங்க அறிக்கை ... ... 162
தலைச்சங்கத்தின் பிரசாரம் ... ... 118
தலைச்சங்கப் பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம் ... 30
திருமுதுகுன்றம் செங்குந்தர்கள் கொடியேற்று மடம் ... 95
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ... 46
" " " 2-வது அறிக்கை ... 152
" " " 3-வது பொதுக் கூட்டம் ... 160
தென்னிந்திய செங்குந்தர் 2-வது மகாநாடு ... 31, 56, 90
தென்னிந்திய செங்குந்தர் 2-வது மகாநாட்டு வைபவங்களும்
தலைவர்கள் சரித்திரம் சொற்பொழிவு, முதலியனவும் 119 முதல் 149 வரை 189
தேக சுகம் ... ... 185
நமது தலைவர்கள் ஊக்கமும் சமூகத் தூக்கமும் ... 197
நமது புராதன வழக்க ஒழுக்கங்கள் ... ... 277
நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவற்றை
வளர்க்கும் முறையும் ... ... 25, 59, 102, 181
நயினார் கோவில் செங்குந்தர் பொது மடம் ... 83
நாடா நெய்தல் ... ... 43
நிருபம்—ஒரு விசனிக்கத்தக்க சம்பவம் ... ... 32
நெருப்புக் குறிகள் ... ... 8
பத்திரிகாசிரியர் முன்னுரை ... ... 3, 57, 115, 161
" " பக்கிரியா பரமஹம்சரா ... 193
" " மகாத்மாவும் செங்குந்தரும் ... 225
" " நம்மவர் 3-வது மகாநாடு ... 273, 305
பிரார்த்தனையின் பயனும் அவசியமும் ... ... 232
பூமி சாஸ்திரம் ... ... 285
பெண்ணா? பிணமா? ... ... 63
பொன், நிலக்கரி ... ... 93
மதிப்புரை ... ... 214, 269
மாணவரது முதற்கடமை ... ... 202
மாதரும் மனைவாழ்வும் ... ... 317
மாத ரொழுக்கம் ... ... 39, 105
மின்சாரம் ... ... 237
மீனாட்சி சுந்தரம் (நாவல்) ... ... 14
மூன்றாவது மகாநாட்டுத் தலைவர்கள் சரிதம் ... 330
வர்த்தமானம் ... 36, 188, 205, 263, 300, 329
" காந்தி இர்வின் ஒப்பந்தம் ... ... 77
விஞ்ஞானத் துணுக்குகள் ... ... 41, 208, 294, 323
விருந்தோம்பல் ... ... 324


158905

# செங்குந்தர் கட்டட நிதி

நமது மாகாணத்துக்குத் தலைநகராக விளங்குவதுடன் துறைமுகப் பட்டினமாயுமுள்ள சென்னையம்பதியில் நங்குலத்தவர்க்கெனப் பிரத்தியேகமாக ஒரு கட்டடம் இல்லாமலிருப்பது பல வாண்டுகளாக ஒரு பெருங் குறையாக இருந்து வருகிறது. அஃதில்லாமையாலேற்படும் கஷ்டங்களும் அதை நிருமாணிப்பதனாலேற்படக்கூடிய நன்மைகளும் எவ்வளவு என்பதை அடிக்கடி சென்னைக்கு வரும் செங்குந்தர்களே அறிவார்கள். கோர்ட்டு, வியாபாரம் முதலியவை சம்பந்தமாகப் பல செங்குந்தர்கள் தினமும் சென்னைக்கு வந்து தங்கிச் செல்கிறார்கள். ரங்கூன், சிங்கப்பூர் முதலிய வெளியூர்களுக்கு வியாபாரத்தை முன்னிட்டும் வேறு அலுவலாகவும் கப்பலேறும் செங்குந்தரும், அவ்வூர்களினின்றும் தம்மூர்களுக்குத் திரும்புவோரும் சென்னையில் சில நாட்களாவது தங்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவ்வாறு தங்குவோர் வேறு விடுதிகளில் தங்குவதால் தங்களுக்கேற்படும் சௌகரியக் குறைவைப்பற்றியும் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப்பற்றியும் முறையிடுவது கொஞ்சமல்ல. சிலர் பெருந்தொகையான தொகைகளையும் இழக்கவேண்டியிருக்கிறது. இத்தகையோர், செங்குந்தர்க்கென ஒரு கட்டடம் ஏற்படுத்தும்படி தலைச்சங்கத்தாரை அடிக்கடி வற்புறுத்திக்கொண்டும் வேண்டிக்கொண்டும் வருகிறார்கள். ஆகவே, இவர்களது குறையை நிவர்த்திப்பதற்கொரு கட்டடம் ஏற்படுத்துவது அத்தியாவசியமாகிறது.

வெளியூர்களிலிருந்து வந்து சென்னையில் தங்கிக் கல்வி பயிலும் நங்குல மாணவர்கள் பலரும் தற்போது பல அசௌகரியங்களுக்குள்ளாகிறார்கள். அவர்களுக்குத் தக்க வசதியளிப்பதற்கும் ஒரு கட்டடம் இன்றியமையாததாகும்.

மேலும், நமது தலைச்சங்கம், பத்திரிகை ஆகியவற்றின் காரியாலயங்கட்கு ஒரு தனிக் கட்டடம் இல்லாமலிருப்பதும் ஒரு பெருங் குறையாகவே இருக்கிறது.

இத்தகைய குறைகளையெல்லாம் ஒருங்கே நீக்கும் பொருட்டே இக்காரியங்களனைத்திற்கும் ஒருங்கே உதவக்கூடியதொரு கட்டடத்தினைக் கூடிய சீக்கிரத்தில் வாங்கவேண்டுமெனத் தலைச் சங்கத்தார் முயற்சித்து வருகின்றனர். அதற்கு வேண்டிய பொருளுக்காகவே தற்போது செங்குந்தர் கட்டடநிதி என ஒரு நிதியையும் ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் அவசியத்தையும் அதற்கு அனைவரும் பொருளுதவி புரியவேண்டியதையும் குறித்துச் சென்ற மூன்றாவது மகாநாட்டிலும் ஒரு தீர்மானமும் நிறைவேறியுள்ளது. இதனையெல்லாம் யோசித்துச் செங்குந்த கனவான்கள் இந்நிதிக்குத் தம்மாலியன்ற உதவி புரிய வேண்டுகிறோம்.

இப் பெரும்பணியில் மிகவும் ஊக்கங் காட்டுகின்ற பாளையகாட் கம்பெனியார் தமது மகமை உண்டியல் பணத்தை இந்நிதியில் பிரத்தியேகமாகச் சேர்த்து வருகிறார்கள். அவ்வாறு தற்போது ரூ. 460 சேர்ந்துள்ளது. அதனோடு, மூன்றாவது மகாநாட்டுச் சமயம் சிலர் வழங்கிய ரூ. 40-ம் சேர்ந்து மொத்தம் ரூ. 500 தற்போது திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் பேரில் இந்துஸ்தான் பாங்கில் கட்டப்பட்டிருக்கிறது. இதுபற்றிய கணக்குகளும், அவ்வப்போது நன்கொடை வழங்குவோர் பெயர்களும், வழங்கப்படும் தொகைகளும் மாதா மாதம் மித்திரனில் வெளியிடப்படும். பண மனுப்புவோர்,

“ திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
சென்னை பாளையகாட் கம்பெனி,
31, அரண்மனைக்காரன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.”

என்ற விலாசத்துக் கனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

மூன்றாவது மகாநாட்டுச் சமயம் வசூலான நன்கொடைகள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| திருவாளர். அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியாரவர்கள், அறுப்புக்கோட்டை | ரூ. | 25 | 0 | 0 |
| " S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், தேவகோட்டை | " | 5 | 0 | 0 |
| " C. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள், திருவனந்தபுரம் | " | 5 | 0 | 0 |
| " ஆ. சென்னியப்ப முதலியாரவர்கள், முதலியார்பாளையம் | " | 5 | 0 | 0 |

# உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமா?

## நீங்கள் வியாபாரத்தில் பெருவாரியான லாப மடைய வேண்டுமா?

அப்படியாயின்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென் னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய

உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை

# 'செங்குந்த மித்திர'னில்

## உடனே உங்கள் வியாபாரத்தைப் பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்

விளம்பர விகிதம்

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 150 | 75 | 40 | 15 |
| ½ ,, | ,, | 90 | 45 | 25 | 10 |
| ¼ ,, | ,, | 60 | 30 | 16 | 6 |

ஆர்டருடன் பாதி பணம் அட்வான்ஸ் அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

பவழக்காரத் தெரு, சென்னை.

---

ஒன்றரை ரூபாய்க்கு ஒரு பெரும் பொக்கிஷம்

"செங்குந்த மித்திரன்"

உடனே வாங்குங்கள்! உயர்வடையுங்கள்!

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

தனிப் பிரதி 0—2—6

---

விளம்பரம்

சைதாப்பேட்டை செங்குந்த கோட்ட சிவசுப்ரமண்ய சுவாமி பிரமோற்சவம்

பிரஜோற்பத்தி௵ மாசி௴ 1௳ (13-2-32) ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்குத் துவஜாரோகண ம் 17-2-32 இரவு மயூரவாகன சேவையும், 19-2-32 காலை இரதோற்சவமும், மறுநாள் பிற்பகல் மணிக்குச் செங்குந்த திலகராகிய ஸ்ரீ அருணகிரி நாதரை ஸ்ரீ முருகப் பெருமான் தடுத்தாட்கொண்டு ருப்புகழ் ஓத அருளிய ஐதிகமும் நடந்தேறின. 24-2-32 இரவு வேடர்பறி உற்சவமும் மறுநாள் காலை ல் ஸ்ரீ வள்ளியம்மையார் திருக்கல்யாணமும் மிக்க விமரிசையுடன் நடைபெறும்.

செங்குந்த கோட்டம் சைதாப்பேட்டை.


---


This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, [illegible] , and is printed by A. Rangasway, at The Progressive [illegible] Merchant St., Madras.